Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 81 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 செப்டம்பர் 2024

## 37ஆம் ஆண்டு

# வீரவணக்கம்

37th Year

Veeravanakkam





SEPT

26

2024

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"

ஈகைச்சுடர் லெப். கேணல் **திலீபன்**

இராசையா பார்த்தீபன்

(ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963–26.09.1987)

Lt. Col. Thileepan

இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு (15.09.1987–26.09.1987) இருந்து ஈகைச் சாவடைந்தார்.

Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Thamil people.



## கேணல் சங்கர்

வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

26.09.2001 அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையினரால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கு எமது 23 ஆம் ஆண்டு வீரவணக்கம்




தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்


























## விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

# Sangathamil சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

சர்வதேச மின் செய்தித்தாள்

## www.sangathamil.ca




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**எமது விடுதலைப் போராட்டத்தின் பழுவை அடுத்த பரம்பரை மீது சுமத்த நாம் விரும்பவில்லை; எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்கவேண்டும். சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும்; தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும்; பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும்; படிப்படியாக அழிந்து போகவேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.**






## சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.





# சுதந்திரத்தை தேடி...

சுதாக்கா இனி வரமாட்டாள். அந்த கரிய உருவத்துள். வாய் நிறைய புறுபுறுத்துக்கொண்டு, வேடிக்கைச் செயல்களால் எமக்குள் நிறைந்து, இனிய குரல் வளத்தால் எம்மை இரசிக்க வைத்து ஒரு கூட்டில் இணைந்திருக்க இனி அவள் வர மாட்டாள்.

சாதாரண தோற்றத்தில் இளமையாக இருக்கும் அவள் கதைக் கும் போதும், யாரையும் திட்டும்போதும் ஐம்பது வயதுக்குக் குறைந்து யாராலுமே மதிப்பிட முடியாது.

"என்ன சுதாக்கா விடிய வெள்ளனயே புறு புறு கறகறவெண்டு பழஞ்சீலை கிழிஞ்சமாதிரி" என்று அலுத்துக்கொண்டிருப் பார்கள். "மண்ணுணிப்பாம்பு", "பெல்லிப்பேய்", கிழட்டுப்பிசாசு" என்று யாரையாவது திட்டு வதற்கு அவள் பயன்படுத்தும் உவ மைப் பெயர்களுக்கு அவளைத் தவிர எந்த அகராதியிலும் கருத் துக் கண்டு பிடிக்க முடியாது. ஆரம்பகாலத்தில் "சுதந்திரப் பறவைகள்" அமைப்புடன் இணைந்து வேலை செய்தபோதும், இந்திய ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் வெளிவேலை செய்த போதும், அதன்பின் இயக்கத்தில் இணைந்து பலாலி, கோட்டை, ஆனையிறவு, கட்டைக்காடு, வளலாய் என்று எதிரியுடன் பொருதிய நீண்ட களங்களிலும் துணிச்சலாக குழுத் தலைவி யாக முன்னிணியில் நிற்கும் சுதாக்காவுக்கு சின்னச் சின்ன விடயங்களிலும் பயம் என்றால் யாரும் நம்பமாட்டார்கள். ஒரு வியாழக்கிழமை வேலைக்காகச் சென்றுகொண்டிருந்த சுதாக் காவின் மதிவண்டிச் சில்லுக்குள் அகப்பட்டு ஒரு கோழி இறந்து போனது. "கள்ள வியாழன் கழுத்தறுக்கப் போகுது" என்று யாரோ கூறிவிட, பயத்துடன் அதைப்பற்றியே கேட்டுக் கேட்டு ஒரு மாதம் வரை அவள் எம்மைக் கழுத்தறுத்ததை நினைத் தால் இப்பவும் சிரிப்பு வரும்.




ஒரு நாள் இரவு நிகழ்ச்சி முடிந்து சுதாக்காவும் இன்னுமொரு போராளியும் மிதிவண்டியில் வந்துகொண்டிருந்தார்கள். நல்ல இருட்டு பாதையே தெரியவில்லை. சுதாக்காதான் ஓட்டுனர். புறு புறுத்தவாறே வந்தாள். அந்த நேரம் பார்த்து பின்னாலிருந்து வந்த மிதிவண்டி ஒன்று வெளிச்சத்துடன் இவர்களைத் தாண் டிச் சென்றது. சுதாக்கா அதற்குப் பின்னால் போகத் தொடங் கினாள். அந்த மிதிவண்டி போன குச்சொழுங்கைக்குள்ளே எல்லாம் சுதாக்காவும் போனாள்.

"என்னக்கா எங்கே போறியள்?" என்று கேட்க,

"சும்மா இரடி, இருட்டுக்குள்ளே போய் அடிபடுவதை விட வெளிச் சத்துக்குப் பின்னால் போய் எங்காவது நிப்பம்" என்றாளே பார்க்கலாம்.

இரவிரவாக எங்கெல்லாமோ அலைந்து திரிந்து நள்ளிரவுக்குப் பின்னர் முகாம் திரும்பி, எல்லோரையும் அந்தச் சாமத்தில் எழுப்பி நடந்ததைச் சொல்லி சிரி சிரி என்று சிரித்து...

தளாக்கட்டுடன் மிருதங்கம் வாசிப்பதில் அவள் கெட்டிக்காரி. பாடுவதிலும் கூட. தானே பாடி தானே மிருதங்கம் வாசித்து, இரசிக்கும் படியாக எம்மை ஓரிடத்தில் அமர்த்த அவளால் முடியும். கலை பண்பாட்டுக் கழகத்தில் அவள் செயற்பட்ட காலத் தில் இந்த மாலைநேரக் கச்சேரி சுவையுள்ளதாக இருக்கும். கோண்டாவில் வீதியில் இரவில் செல்லும்போது பாடியபடியே செல்லும் அவளுக்கு புரட்சிப் பாடல்கள் எல்லாம் தெரிந்திருக் கும். அன்றும் அப்படித்தான் கச்சேரி செய்துகொண்டிருந்த சுதாக்காவிடம் மிருதங்கச் சக்கரவர்த்தி என்ற சினிமாப் படத்தில் மிருதங்கம் வாசித்து காயாக இருந்த வாழைக்குலையை பழுக்க வைக்கிறார் சிவாஜி என்ற கதையை யாரோ கூற, மிரு தங்கம் வாசித்துகொண்டிருந்த அவளுக்குச் சுதி ஏறிவிட்டது. அந்த நேரம் பார்த்து முகாமின் பின் வளவில் நின்ற பலா மரத்தின் காய்கள் இரண்டு எதேச்சையாக விழ, சுதாக்கா மிருதங்கம் வாசித்துத்தான் பலாப் பழம் பழுத்து விழுந்ததாக திரிபு படுத்தி நாங்கள் விட்ட கதை ஊரெல்லாம் திரிந்தது.

ஒரு முதிர்ச்சியான தோற்றத்தில் உலாவரும் இவள் சிறு பிள்ளைத்தனமான வேடிக்கையான செயல்களைச் செய்வாள் என்று நினைக்க முடியாது தான். ஆனால், அது அவளது சுபாவம். யாழ்பாணத்திலிருந்து ஆவரங்காலுக்கு மிதிவண் டியில் சென்று கொண்டிருந்த சுதாக்காவுக்கு நீர்வேலியடியில் கைகள் இரண்டும் வலிக்க, இரண்டு கைகளையும் "கான் டிலின்" முன்பக்கத்தில் ஒரேயடியாகத் தூக்கி வைக்க, மிதி வண்டி சமநிலையற்று ஒரு பற்றைக்குள் போய்விழ, காயங் களோடு முகாம் வந்துபோது செய்தி எமக்குப் பரவ,

"என்ன சுதாக்கா எங்க கரும்புலித்தாக்குதல்?"

என்று நாங்கள் சிரிக்க, அவளுக்கு மட்டுமே புரிந்த பாசையில் எம்மை அவள் திட்ட, சுதாக்கா இருக்கும் முகாமில் சிரிப்புக்குப் பஞ்சமேயில்லை.

சண்டைக் களங்களில் ஆசைதீர நின்று பணியாற்றினாலும் வெளிவேலைகள் செய்வதற்காக கடமை யாற்றிய மூன்று வருடங்களும் அடிக்கடி சண்டை, சண்டை என்று சண்டை பிடித்து, எப்படியோ தாக்குதலணிக்குச் சென்றுவிட்டாள். கள முனையில் அவளில் குடிகொள்ளும் "சீரியஸ்" அவள் வாயில் வரும் திட்டுக்களைக் கேட்பவர்களின் சிரிப்பொலியால் குழம்பிப் போக, "சூரியக்கதிர் - 1", ஆரம்பித்த 17.10.1995 வரை அவள் நின்ற சண்டைக்களங்கள் நீண்டன. ஆனால், குழுத்தலைவி யாக, சிறந்த சண்டைக்காரியாக அவளைச் சுமந்துவர காலம் அதன் பின்னர் மறுத்துவிட்டது.

கிழவிபோல விடியக்காலத்தாலேயெ புறுபுறுக்கும் சுதாக்கா, வேடிக்கைச் செயல்களால் ஒன்றிப்போன சுதாக்கா, சண்டை களில் துணிச்சலோடு முன்னிற்கும் சுதாக்கா இனி வரமாட்டாள். மதிவண்டியோடு கரும்புலித்தாக்குதல் நடாத்தியதாக நாம் பகிடி பண்ணும் நீர்வேலிப்பற்றையும், அவளது பாட்டுக்களை அடிக் கடி கேட்டு ரசிக்கும், கோண்டாவில் பிரதான வீதியும், இளமைக் காலத்தில் அவளைச் சுமந்த செம்பாட்டு மண்ணும், இப்போதும் அவளைத் தேடிக் கொண்டிருக்கும். அவள் இனித் திரும்பி வர மாட்டாள் என்ற உண்மையை ஏற்கமுடியாமல் எங்கள் காலம் நகரும்.


★ ★ ★

வசந்தி எப்போதுமே நித்திரை ராணி நம்பர் - 1 என்ற இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டவள். நித்திரை என்றால் அப்படியொரு நித்திரை. "இவள் என்னண்டுதான் இயக்கத்துக்கு வந்தாளோ" என்று நாம் அடிக்கடி சொல்லிச் சிரிப்பதுண்டு.

ஒருமுறை வடமராட்சியிலிருந்து இவளை உடனடியாக வலி காமத்துக்கு வருமாறு இரவு நேரம் அறிவித்தல் கிடைத்தது. வசந்தி உடனே துணைக்கு ஒரு போராளியை அழைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டாள்; நீண்ட நேரமாகியும் வசந்தி வலி காமத்துக்கு வந்து சேரவில்லை. ஆள் வடமராட்சியை விட்டுப் புறப்பட்டும் நீண்ட நேரமாகிவிட்டது. என்ன நடந்ததோ என்று எல்லோரும் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்க, வசந்தி தனது மிதி வண்டியை ஒரு கரையாக நிறுத்திவிட்டு வல்லை வெளி யில் படுத்து நல்ல நித்திரை. கூட வந்த போராளி இவளுக்கா விழித்தபடி. நள்ளிரவில் அவ்வீதியால் வந்த வேறு போராளிகள் இவர்களைத் தமது வாகனத்தில் ஏற்றி வந்து வலிகாமத்தில் இறக்கி விடவேண்டியதாயிற்று.

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினரின் பதினைந் தாவது பயிற்சி முகாமிலே வசந்தி தனது பயிற்சிறைப் பெற்றுக் கொண்டாள். விடுதலைப் புலிகளின் துணைப்படை வீரரான தந்தை வசந்தியை போராட்டத்துடன் இணைத்த போது, அவ ளுக்கு வயது பதினான்குதான். பயிற்சி முகாமின் கலை நிகழ் வுகளில் இவள் அடிக்கடி பங்குபற்றுவாள். பயிற்சி முகாமில் இருந்து வெளியேறி "சூரியக்கதிர் -1" இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றும் வரை வசந்தி எமது பிரிவொன்றின் தொலைத் தொடர்பாளராகப் பணியாற்றினாள். ஆனால், அவளது கலை யார்வமோ, நித்திரைக்குணமோ எப்போதுமே மாற்றமடைய வில்லை.

ஒரு நாள் இரவு இவளது முகாமுக்கு அருகில் உள்ள தெருவில் கலை நிகழ்வொன்று நடைபெற்றது. ஆர்வம் மிகுதியால் ஒருவருக்குமே சொல்லாமல் நிகழ்ச்சி பார்க்கப்போய் விட்டாள்.




முகாமில் நின்ற வசந்தியை திடீரெனக் காணவில்லை என்று எல்லோரும் தேடிக்கொண்டிருக்க அவள் நிகழ்ச்சி முடிந்து ஆறுதலாக வந்து... கிடைத்த தண்டனையை வழக்கம் போலவே விசுவாசமாகச் செய்தாள். முதல் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தால் மறுநாள் அதை அப்படியே எல்லோருக்கும் செய்து காட்டும் திறமை அவளிடம் இருந்தது.

தனது உயிர்த் தோழியான வீரவேங்கை அனுஷா ஆனை யிறவுச் சமரில் வீரச்சாவைத் தழுவியது இவள் மனதைப் பலமாக உலுப்பிவிட்டது. "ஒட்டி" என்று வசந்தியையும் "ஓரா" என்று அனுஷாவையும் கூப்பிடுமளவுக்கு பயிற்சி முகாமில் இருவரும் நல்ல ஒட்டு. இருவருமே நல்ல கறுப்பு. குழப்படி செய் தாலும் இருவரும் சேர்ந்தே செய்வார்கள். ஒட்டி, ஓரா என்ற பட்டப் பெயர்கள் கடைசிவரையில் அழியாமல் அவர்களுடன் நிலைத்துவிட்டன.

சின்னப்பிள்ளை என்றாலும் சில நேரங்களில் பெரிய மனித தோரணையுடன் நடந்து கொள்வாள். கொஞ்சச் சாப்பாடு இருந் தாலும் எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுப்பாள். ஆனால் சில சமயங்களில் குறும்புத் தனம்தான் மேலோங்கியிருக்கும். முகாமிற்கு வந்திருக்கும் பொறுப்பாளருக்கு தேனீர் தயாரிப் பதாகச் சொல்லிக் ரொகண்டு தயாரித்த தேனீரை தானே குடித்து விடுவாள்.

"எனக்கு லீவு தாறதெண்டால் வீட்டை விடவேண்டாம். என்னை இரண்டு நாள் நித்திரை கொள்ளவிட்டாக் காணும்" என்பாள்.

ஆள் வலு நீற். எப்போதுமே பளிச்சென்று இருப்பாள். அவளது மிதிவண்டியும் அவள் போலவே பளீரென்று இருக்கும். தன் னைச் சண்டைக்கு விடுமாறு தொடர்ந்து நச்சரித்ததில் சூரியக் கதிர் -1 இல் பங்கெடுக்க வாய்ப்புக் கிடைத்தது.


சண்டைக்கான பயிற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டாள். ஆனால் அந்த நெருக்கடிக்குள்ளும் அவள் தனது நம்பர் - 1 இடத்தை மட்டும் கைவிடவில்லை. ஒருநாள் பயிற்சி நேரத்தில் வசந்தி நல்ல நித்திரை. நித்திரைக்குத் தண்டனையாக கட்டிலின் மீது ஏறி நிற்குமாறு அவள் பணிக்கப்பட்டாள். தண்டனையை ஏற்று கட்டிலின் மேல் ஏறி நின்ற வசந்தி கொஞ்சநேரத்திலேயே நித் திரை தூங்கி விழுந்துவிட்டாள்.

தனது குறும்புத்தனத்தாலும், நித்திரைக் கணத்தாலும் எல்லோ ரையும் சிரிக்கவைத்த, எல்லோரிடமும் ஏச்சம் வாங்கிய எங் களின் வசந்தி 1995.10.29 அன்று சூரியக் கதிர்- 1 நடவடிக் கையின் போது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

★ ★ ★

மதனா அந்தப் பயிற்சி ஆசிரியர்களுள் மிகவும் சிறியவள். எந் நேரமும் கண்களில் குறும்பு வழிந்தோட கதைகள் சொல்லும் அவளது செய்கை அனைவரையும் உண்மை என்று நம் பவைக்கும்.

புதிய போராளிகளுக்கான பயிற்சி நாட்களில் முன்னணியில் எப்போதும் மதனா நிற்பாள். கூடவே பயிற்சியைக் கொடுக்கும் போதும் சிறந்த பயிற்சி ஆசிரியராக விளங்குவாள்.



கப்டன் மதனா

வவுனியாவின் கொக்கட்டிப் புலவு என்ற ஊரில் ஐந்து சகோதரர்களுடன் கூடப்பிறந்த மதனாவிற்கு சின்ன வயதிலேயே புலி மாமாக்களில் நல்ல பிரியம். மரவள்ளித் தடியை வெட்டி துப்பாக்கி செய்து கயிறு கட்டித் தோளிலே கொழுவித் திரிவாள். இந்திய இராணுவம் வைத்த நீட்டு நீட்டுத் துவக்குகளைத் தானும் தானும் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புவாள்.

விடுதலைக்கான போர் அவளையும் அண்ணனையும் தன்னகத்தே உள்வாங்க, குழப்படியும் குறும்பும் விவேகமும் நிறைந்த போராளியாகப் பயிற்சி ஆசிரியராக மதனா மாறிப் போனாள்.

அப்போது அவள் கனரக ஆயுதப் பயிற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தாள். ஆயுதம் துப்பரவு செய்வதற்குரிய துணிகள் முகாமுக்கு வந்து சேரவில்லை. துணித்தட்டுப்பாட்டை முன்னரே அறிந்திருந்த அவள் எல்லோரும் துப்பரவாக்கி அழுக்குத் துணிகளைச் சேகரித்து வைத்து ஒவ்வொன்றாய்ப் பொருத்தித் தைத்து வைத்திருந்தாள். எல்லோரும் தமது ஆயுதங்களைப் துப்பரவு செய்யத் துணி வேண்டும் என்று பொறுப்பாளரிடம் அடம்பிடித்தபோது தான் பொருத்தி வைத்திருந்த துணியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி எல்லோருக்கும் கொடுத்த போது அவளது பொறுப்புணர்ந்த இயக்கத் தேவை கருதிய செயல் எல்லார் மனதிலும் ஆழப்பதிந்தது.

வலிகாமத்தைச் சூழ்ந்த கருமேகங்களைப் புலிகள் தங்களின் உயிர்களைக் கொடுத்து விரட்டுகின்ற வேளையில் நடந்த உக்கிரமான சண்டையில் மதனாவும் நின்றாள். உரும்பிராய்ச் சண்டையில் அணித்தலைவியாக அவள் செயற்பட்டாள். எறிகணைகளை அள்ளி வீசியபடி எதிரி முன்னேற முயன்ற போதெல்லாம் சட்சடத்த புலிகளது துப்பாக்கிகளுள் அவளுடையதும் ஒன்று. நிலைமையை அவதானித்து கட்டளையை பிறப்பித்தவாறு தொலைத்தொடர்புக் கருவியை அவளது கைகள் பற்றியிருக்கும்.

இடைமறித்து இடைமறித்து அரியாலை - மாம்பழம் சந்திவரை சண்டை நகர்ந்துவிட்டது. அந்தச் சண்டையின் போது சிறப்புத் தளபதியுடன் நின்ற மதனா ஒரு அணிக்கு மேலதிகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தாள் - ஆயினும் களமுனைக்கு அனுப்பப்படவில்லை - அணிகளின் நிலைகள் பற்றிய அவதானிப்பு, தொடர்புகள், வேறுவேலைகள், இரவுக் காவலுக்கான சோதனைகளில் அவள் ஈடுபட்டிருந்தவேளை அது.


அவளுக்குப் பிரியமான நாய்க்குட்டியின் பிரிவு அவளை வாட்டியது. அதை நினைத்தவாறு அவள் உண்ண மறுத்ததும், அவளை நினைத்தவாறு அது உண்ண மறுத்ததும் அளவு கடந்த பாசத்தை எமக்கு உணர்த்தியது. அந்தக் குட்டியை பதுங்குகுழி வெட்டுவதற்காக வந்தவர்களிடம் அவள் பதுங்கிப் பதுங்கிச் சென்று களவாடினாள். மிகுந்த பிரியத்தோடு “மாயாவி” வீரனின் நாயின் பெயரான “டெவில்” என்ற பட்டப் பெயரை இடடாள். வேறு பெயரிட்டு யாராவது அதைக் கூப்பிட்டால் அவளுக்குப் பிடிக்காது. சண்டை அண்மிக்கும் காலத்தில் முகாம்களிலிருந்து பொருட்களை ஏற்றும் பொது அந்த நாய்க்குட்டியும் ஏனைய போராளிகளால் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடம் கொண்டு செல்லப்பட்டது. மதனாவுக்குத் தெரியாமல் இது நடந்தாலும், அறிந்தபின் அவள் உண்வைச் சில நாள் மறந்து போயிருந்தாள்.

சிறீலங்கா இராணுவம் யாழ். நகரப்பகுதியை அண்மித்து விட்டது. 1995.11.23 காலை வேளையில் மதனா அணிகளின் நிலையைப் பார்ப்பதற்காக அரியாலை - கண்டி வீதிக்கு அண்மையான நிலைகளுக்குச் சென்றிருந்தாள். மதியமளவில் அந்தச் செய்தி வந்தது. பெண் போராளிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையேயான நிலைகளில் தனியே அவள் துப்பாக்கியை இறுகப் பற்றியபடி உயிரை விட்டிருந்தாள் - காலில் ஏற்பட்ட சிறு காயத்தைப் பொருட்படத்தாமல் மருத்துவப் பகுதிக்குச் செல்லாமல் அன்றைய இராணுவ நகர்வை எதிர்கொள்ளத் தயாராகத்தான் அவள் வந்திருந்தாள் - அன்று இராணுவத்தின் தாக்குதலும் எம்மவரின் தாக்குதலும் நடைபெற்றது.

அவளது வீட்டுக்குக் கொண்டு செல்வதற்காக வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளின் உடல்களுடன் அவளது உடலும் அன்றிரவு பயணித்தது.

★ ★ ★

இருவரும் ஒரே காலத்தில் இயக்கத்தில் இணைந்து ஒன்றாகவே கரும்புலித் தாக்குதலுக்கு விரும்பம் தெரிவித்தார்கள்.




இருவரும் சின்னவர்கள்தான். இயக்கத்தில் இணைந்த சில மாதங்களுக்குள்ளேயே கரும்புலிகளுக்கான சிறப்புப்பயிற்சி பெறப்போய்விட்டதால், இவர்களைப் பற்றி வெளியில் நின்ற போராளிகளுக்கு தெரிய வாய்ப்பில்லாது போய்விட்டது.

விக்கியைவிட மதனி அக சின்னன். மதனியை சக கரும்புலித் தோழர்கள் சின்னத்தங்கச்சி என்றுதான் கூப்பிடுவார்கள். என்ன உணவு வந்தாலும் அரைவாசியை கரும்புலிப் பயிற்சியில் ஈடுபடும் அண்ணாக்களுக்கு கொடுத்துத்தான் மதனி சாப்பிடுவாள்.

கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி கல்யாணி இவர்களைப் பார்க்கவென்று போனால் மதனி ஓடி வந்து கல்யாணியின் வாகனத்திலேறி சாப்பிடுவதற்கு என்ன இருக்




கின்றது என தேடி எடுத்துக்கொண்டு போய்விடுவாள். இவளுக்காகவே கல்யாணி தின்பண்டங்களை வாங்கி வாகனத்தில் வைப்பதுண்டு.

விக்கி இவளுக்கு நேர்மாறு. இலகுவில் ஒருவருடனும் பழகி விடமாட்டாள். அமைதியாகத் தன்னுடைய வேலைகளில் ஈடுபடுவாள். ஆனால் அவள் கெட்டிக்காரி.

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியின் போது, ஒருநாள் விக்கி தனக்குரிய வெடி பொருட்களோடு நீருக்கு அடியால் நீந்தி வந்தாள். குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் பயிற்சியைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த கடற்புலிகள் மகளிர் படைணயித் தளபதியின் படகு நின்றிருந்தது. விக்கி அந்தப் படகை நீருக்கு அடியால் வந்தடைய வேண்டும். தளபதி கடலையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். எங்கேனும் விக்கியின் அசைவு தெரிகிறதா என்று. ஆனால் படகுக்கு மிக அண்மையில் வந்த விக்கி நீருக்குள்ளிருந்து திடீரென தலையை வெளி நீட்டும் வரை அவள் வந்ததே தெரியவில்லை. தளபதியின் சிறப்பான பாராட்டுக்களைப் பெற்ற அவள், “அக்கா நான் வந்தது தெரிஞ்சதோ? நீங்க்ள கண்டனீங்களோ? இல்லைதானே?”

என்று திரும்பத் திரும்பக் கேட்டுதன் திறமையை உறுதிப் படுத்திக் கொண்டாள்.

மதனியை விட அவள் தலைநகரத்துறைமுகத் தாக்குதலுக்கு கொண்டு சென்ற குண்டு பெரிது. அந்தக் குண்டுடன்தான் பயிற் சிகளிலும் ஈடுபட்டாள். நீரடி நீச்சல் பயிற்சி முடிந்து படகில் ஏறம் போது, மதனி கால் எட்டாமல் சிரமப்பட்ட தளபதி அவளைத் தூக்கிவிட முனைந்தார்.

“விடுங்கோ நான் ஏறுவேன். இதைவிடப் பெரிய சாதனையெல்லாம் செய்யப் போறன். இதிலை ஏறுவதற்கு என்ன” என்று சிரித்தவாறே அவள் ஏறிவிட்டாள்.

விக்கி, மதனி இருவருமே கனரக ஆயுதப் பயிற்சியை எடுத்திருந்தாலும் அதற்கான வாய்ப்பு விக்கிக்குத்தான் கிடைத்தது.

1996.4.12 அதிகாலை கொழும்புத் துறைமுகத்துள் இரும்பு மனிதர்கள் ஊடுருவினர். மதனியும் இன்னும் சில கரும்புலிகளும் தமக்குரிய இலக்குகளான அங்கு தரித்து நின்ற கப்பல்களில் வெடி மருந்தைப் பொருத்தி வெடிக்க வைத்தனர். விக்கியும் மற்றைய கரும்புலிகளும் தமது கனரக ஆயதங்களால் கொழும்புத் துறைமுகக் கட்டிடங்களை சேதப்படுத்தினர். இறுதியில் தம்மையும் அழித்துக் கொண்டனர். எதிரிக்குப் பலத்த பொருளாதாரப் பின்னடைவை ஏற்படத்தியதும், தலை நகரின் மீதான முதல் கடற் தாக்குதலுமான இத் தாக்குதலின் மூலம் உலகத்தின் கவனத்தை ஒரு நிமிடம் தமிழீழத்தின் பால் திருப்பிய அந்த வேங்கைகள் எங்கள் எல்லைக்கும் அப்பால் கடலோடு கலந்துபோயினர்.

★ ★ ★


அவள் இருக்கும் இடம் எப்போதுமே கலகலப்பானது. தனது சோகங்களை எல்லாம் மனதில் ஆழத்துக்குள் அமுக்கி மேலுக்கு சிரிப்புடன் அவள் விடும் பகிடிகள் எல்லோரையும் சிரிக்கவைக்கும். ஆனால், எங்களை எந்நேரமும் சிரிக்கவைத்த மாதுரியின் கண்களில் குடிகொண்டிருந்த அந்த “சீரியஸ்னஸ்” மட்டும் கடைசி வரையில் அகலவில்லை.

அவளுடன் நெருங்கிப் பழகாத, அவளை அறியாத யாருக்கும் அவளின் ஐந்தடி எட்டங்குலம் உயரமும், அந்த முழிக் கண்களும் பயப் பிராந்தியைத் தான் உண்டுபண்ணும். பழகியவர்களுக்கு அவள் தேன். அவளுக்கு “ராணி கொமிக்ஸில்” வரும் மாயாவி பாத்திரத்தில் நல்ல விரும்பம். மாயாவியின் கதைகளை விழுந்து விழுந்து வாசிப்பாள், “நான்தான் மாயாவி” என்று சொல்லிக்கொண்டு பாய்ந்து திரிவாள். தெருவில் அனாதரவாகக் கிடந்த நாய் ஒன்றைப் பிடித்து அதன் கழுத்திலே கயிற்றைக் கட்டி “இது தான் டெவில்” என்று இழுத்துக் கொண்டு திரிவாள். எங்களின் கேலிகளைப் பொருட்படுத்தவே மாட்டாள். இந்தச் சம்பவத்தின் பின் இவளையும் அந்த நாயையும் மாயா வியும் டெவிலும் என்றே அழைக்கத் தொடங்கிவிட்டோம்.

மாதுரி எப்படிப்பட்டவள் என்று யாராலுமே இனம்காண முடியாத அளவுக்கு அவள் வித்தியாசமானவள். எல்லோரும் சீரியஸாக இருந்தால் தான் அவள் சிரிப்பாள். எல்லோரும் சிரிக்கும் போது அவள் சீரியஸாக இருப்பாள். தனக்குக் கவலை வந்தால் அவள் தனியாகப் போய் இருப்பாள். கவலைகளை, சிறிய வயது சோகங்களை யாரிடமுமே அவள் பகிர்ந்து கொள்ள விரும்புவ தில்லை.

சிறு வயதில் பிரிந்து போனதால் முகமே மறந்துபோன தந்தையை, குடும்பத் தலைவனின்றி மூன்று பிள்ளைகளையும் தனித்து வளர்த்து, பிள்ளைகளைப் போலவே புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களையும் ஆதரித்ததால் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தாயை தன்னைத் தொடர்ந்து இயக்கத்தில் இணைத்துக்கொண்ட ஒரே தங்கையை, தாய் கொல்லப்பட்ட பின்னர், தங்கைகளின் வாழ்வுக்காய், தன் படிப்பை இடைநிறுத்தி, உடலை வருத்தி உழைத்து 1990ல் தங்கைகள் இருவரும் இயக்கத்துக்குப் போக அவர்களைத் தொடர்ந்து தன்னையும் இணைத்துக்கொண்ட தமையனை, எல்லோரையும் விட்டு வீட்டில் தனித்திருக்கும் அம்மம்மாவை அடிக்கடி தன் மனத்திரையில் மீட்டுப் பார்த்துக் கொள்வாள். வெளியே சொல்லமாட்டாள்.

www.sangathamil.ca







1994ல் இவளின் தங்கை கப்டன் சாமந்தி கடல் விபத்தொன்றில் சாவைத் தழுவியது இவளை உலுப்பிவிட்டது. எப்போதுமே தன்னைக் கல்லாக்கிக் கொள்ளும் மாதுரி, அப்போது மட்டும் உடைந்துபோய் தன் அண்ணனிடம் அழுதாள். மீண்டும் பாறையாய் இறுகிவிட்டாள். அதற்குப் பின்னர் அவள் ஒரு போதுமே இதுபோல் அழுதது கிடையாது. மாதுரிக்குள் இத்தனை சோகமுண்டு என்று நாம் சொன்னாலும் யாருமே நம்பமுடியாத அளவுக்கு அவள் ஒரு கைதேர்ந்த நடிகையாக நடந்துகொண்டாள்.

நடனம், நடிப்பு எல்லாமே அவளின் இயல்புடன் ஊறியவை. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் தயாரிப்புகளான "கொடியோரின் கொடுமை" நாட்டிய நாடகத்தில் சிறீலங்கா இராணுவத்தினனாகவும் "தீக்குளிக்கோம் தீயிட்டெரிப்பொம்" நாடகத்தில் ஆணாதிக்கம் மேலோங்கிய சமூகப் பிரதி நிதியாகவும் முத்தமிழ் விழா மேடையிலே, 1991லே மாதுரி தோன்றினாள். அந்த நாடகத்தில் அடிக்கடி இவள் நின்றபடியே காலை உதறி உதறி ஆட்டுவாள். முத்தமிழ் விழா முடிந்த பின்னர் நாடகம் பார்த்த இளைஞர்கள் அவள் போலவே தம் கால்களை உதறி உதறி ஆட்டியவாறு திரிந்ததில் அவளது நடிப்பின் வெற்றி தெரிந்தது.

எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிடும் சமயங்களில் உண வில் மொய்க்கும் ஈக்களை கலைப்பது போன்ற பாவனையில் கையை வீசி வீசி "சூய் சூய்" என்பாள். அவளுக்கு முன்னால் இருந்து சாப்பிடுபவர் கொஞ்சம் அசந்தால் போதும், அவரது தட்டில் இரந்த முட்டை ஏதேனும் பொரியல் போன்றவை மாதிரி யின் கைவீச்சுடன் காணாமல் போயிருக்கும். என்ன நடந்தது என்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்க்க முன்னர் கைப்பற்றிய உணவை தன் வாயில் ஒருவாறு அடைத்து விழுங்கிவிட்டு எம்மைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரிப்பாள். சிரிப்பாள் என் பதை விட இளிப்பாள் என்பது தான் சரி. தன் தட்டில் இருப்பதைச் சாப்பிடும் பழக்கம் மாதுரியிடம் ஒரு காலமும் இருந்தது கிடை யாது.

இயக்கத்தில் அவள் எந்த வேலையையும் செய்யக்கூடிய போராளியாகத் தன்னை வளர்த்திருந்தாள். அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் படித்து முடித்த பின் குறிப்பிட்ட காலம் கனரக ஆயுதப் பிரிவின் பயிற்சி ஆசிரியராக இருந்தாள். 1991ல் மணலாறு "மின்னல்", 1992ல் தொண்டைமானாறிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான 150 காவலரண்களை தாக்கியழித்த தாக்குதல், 1993ல் பூநகரி மீதான "தவளைத் தாக்குதல்" அதே ஆண்டில் மணலாறில் உள்ள 5 இராணுவ முகாங்கள் மீதான தாக்குதல் என்பன வற்றில் தன் சிறப்பான முத்திரைகளைப் பதித்தாள். சண்டை என்றாலும் அவள் நிற்குமிடத்தில் சிரிப்புக் குப் பஞ்சமிராது.

1996.4.19 அன்று பிற்பகல் "சூரியக்கதிர் -2" இராணுவ நட வடிக்கை ஆரம்பமாகி சண்டை நடந்துகொண்டிருந்தது. தனது எல். எம்.ஜியுடன் எதிரியை எதிர்பார்த்து தன் நிலையில் காத் திருந்த மாதுரி "சண்டையில மாயாவி விழுந்திடும்; டெவிலைக் கூப்பிட்டு எல்.எம்.ஜியில விடுங்கோ" என்ற அருகில் இருந் தவளிடம் சிரிக்காமல் கூறினாலும் கேட்டுக்கொண்டிருந் தவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. மாதுரியின் எல்.எம்.ஜி அடியுடன் சண்டை தீவிரமாக நடந்துகொண்டிருந்த பொழுது எதிரியின் ரவை அவளின் மார்பை துளைத்துச் சென்றதில், அந்த இடத்திலேயே அந்தக் கல்நெஞ்சக்காரியின் மூச்சு அடங்கியது.

"நான் செத்துப் போனா எப்படியாவது என்ர பொடியை எடுத்துக் கொண்டு போய் அண்ணனுக்குக் காட்டுங்கோ. கடைசி நேரத் தில கூட என்னைப் பார்க்காட்டா அவர் மனவேதனைப் படுவார்"

என்று மாதுரி சொன்னாளாம். மாதுரியைத் தூக்கி வந்தவள் சொல்லி விட்டு அழுதாள். என்நேரமும் எங்களைச் சிரிக்க வைத்தவள்தான் இப்படி அழவைத்துவிட்டு போனாள் என்பதை எங்களால் இன்னமும்...

பாக்கியமக்காவையும் அவள் பெற்ற இரண்டு பெண் பிள்ளை களையும் நினைக்கும் பொழுதுகளில் நெஞ்சம் சிலிர்ப்பதென் னவோ உண்மைதான்.

- செப்டெம்பர் 1996 - எரிமலை






# வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா!

01.09, 2024

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர தேர்த்திருவிழா இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

காலை 6 மணியளவில் ஆரம்பமான விசேட பூசை வழி பாடுகளை தொடர்ந்து திரு ஆறுமுக பெருமான் வள்ளி தெய் வானை சமேதரராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

தொடர்ந்து வள்ளி தெய்வானை சமேதரராய் தேரில் வெளிவீதி உலா வந்த திரு ஆறுமுக பெருமான் காலை 08.45 மணிக்கு தேர் இருப்பிடத்தை வந்தடைந்தது.

இன்றைய தேர்த்திருவிழாவின் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்க பிரதட் சணம் செய்தும், நூறுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் திரு முரக பெருமானை வழிபட்டனர் .



# சுண்ணாகம் பொலிசாரினால் குடும்பஸ்தர் சித்திரவதை!

## விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனிதவுரிமை ஆணைக்குழு

02.09, 2024

யாழ்ப்பாணம் - சுண்ணாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி யில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவு வேளை அத்துமீறி நுழைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் குடும்பஸ்தரை எவ் வித காரணமும் கூறாது கைது செய்துள்ளதாகவும், கைது செய்த பின்னர் அவரை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகவும் பாதிக்கப்பட்டவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக சமயத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 28ஆம் திகதி நள்ளிரவு வேளை எமது வீட்டின் மதில் ஏறி பாய்ந்து, வீட்டின் முன் பக்க கதவினை கால்களால் உதைந்து உடைத்து வீட்டினுள் அத்துமீறி நுழைந்த சுண்ணாக பொலிசார் எனது கணவரை தாக்கி கைது செய்தனர்.

கணவரை எதற்காக கைது செய்கிறீர்கள் என கேட்டவேளை, அதற்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை. கணவரின் கைதினை தடுக்க நிறைமாத கர்ப்பிணியான நானும், கண வரின் அண்ணாவின் பெண் பிள்ளைகள் உள்ளிட்ட நாம் முயன்ற வேளை எம்மையும் தாக்க முறபட்டனர்.

கணவரின் அண்ணாவின் மகள் கைத்தொலைபேசியை கையில் வைத்திருந்த வேளை, வீடியோ எடுக்கிறீயா என போனை பறித்து உடைக்க முயன்றனர்.

நாம் கணவரை பொலிசார் காரணமின்றி கைது செய்து அழைத்து செல்வதனை தடுக்க முயன்ற போதிலும் எம்மை தாக்குவது போன்று அச்சுறுத்தி, கணவனை வீட்டில் இருந்து இழுத்து சென்று, வெளியில் நின்ற முச்சக்கர வண்டியில் ஏற்றி சென்றனர்.

கணவனை அழைத்து செல்லும் போதே. கண்களை கட்டியுள் ளனர். பின்னர் யாருடனோ தொலைபேசியில் தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர், கணவனின் பெயரை கூறி, அவரை கைது செய்து விட்டோம் என கூறியுள்ளார்.

நாம் நள்ளிரவே சுண்ணாகம் பொலிஸ் நிலையம் சென்ற போது, கணவனை அடித்து துன்புறுத்தி இருந்தனர். அது தொடர்பில் கேட்ட போது, சந்தேகத்தில் கைது செய்துள்ளோம் என கூறி எம்மை அங்கிருந்து அனுப்பி விட்டனர்.

மறுநாள் 29ஆம் திகதி நாம் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட் சகரின் அலுவலகம் சென்று முறையிட்டோம். அவர் அது தொடர் பில் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தொலை பேசியில் விசாரித்தார். அவர்கள் ஏதோ கூற எம்மை அனுப்பி வைத்தார்.

நாங்கள் மீண்டும் சுண்ணாகம் பொலிஸ் நிலையம் சென்ற வேளை, கணவரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தரான உப பொலிஸ் பரிசோதகர் உள் ளிட்டோர் பைப், வயர்களால் மிக மோசமாக தாக்கி சித்தரவதை புரிந்துள்ளனர்

கணவனை நிலத்தில் முழங்காலில் இருந்தி தாக்கியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கானவர் சத்தி எடுத்துள்ளார்.

கணவரை கைது செய்த பொலிசார் 24 மணி நேரம் கடந்தும் நீதிமன்றில் முற்படுத்தது, சுண்ணாகம் பொலிஸ் நிலையத்தில்




தடுத்து வைத்து மிக மோசமான முறையில் சித்தரவதைக்கு உள்ளாகியுள்ளனர்.

பின்னர் அவரை விடுத்துள்ள நிலையில் நாம் அவரை தெல் லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளோம். தற்போது எனது கணவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என தெரிவித்தார்.

அதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் இலங்கை மனித வுரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது எனவும், பாதிக்கப்பட்ட நபரை இன்றைய தினம் திங்கட்கிழமை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை யில் நேரில் பார்வையிட்டு, அவரது வாக்கு மூலங்களை பெற் றுள்ளதாகவும், அதன் அடிப்படையில் சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனக ராஜ் தெரிவித்துள்ளார்.

# எங்களை அழிப்பதற்கு சிங்களவர்கள் தேவையில்லை எங்களது தலைவர்களே போதும்!

## வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதியான திரு. அன்னலிங்கம் அன்னராசா

02.09, 2024

தமிழரசு கட்சியானது நேற்று ஞாயிற்றுக்கிழமை (01) கூடி வவுனியாவில் முடிவு எடுத்ததன் அடிப்படையில், தமிழரசு கட்சியானது ஒற்றுமை இல்லாமல் தமிழர்களை பிரிவுக்கும் அல்லது தமிழர் இந்த நிலைக்கு போவதற்கும் காரணமாக இருக்கின்றது என வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதி நிதியான திரு. அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட தமிழரசு கட்சியின் தீர்மானம் குறித்து, சமூகமட்ட பொது அமைப்பின் பிரதிநிதி என்ற வகையில் அவரிடம் இதுகுறித்து கருத்து வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு இன்று வரைக்கும் தமிழரசுக் கட்சி தமிழருடைய உரிமைகளை மீட்பதற்கு உளரீதியாக செயல்படவில்லை. வாய் ரீதியாக மக்களுக்கு ஒன்றை சொல் வதும் அரசாங்கத்திற்கு ஒன்றை சொல்வதுமாக இருக்கின்றது.

ஒட்டுமொத்த கட்சியாக இந்த முடிவை எடுத்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். ஆனால் கட்சியின் தலைவர் ஒன்றினை கூறுகின்றார், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஒன் றினை கூறுகின்றார், பல உறுப்பினர்கள் இதில் கலந்துகொள் ளவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்களின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைப்பதற்கான அடித்தள மாகத் தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம்.

தமிழரசு கட்சியை எடுத்து பார்ப்போமேயானால் சிவஞானம் சிறீதரன், குகதாசன் ஆகியோர் உட்பட்ட கிளிநொச்சி மற்றும் திருகோணமலை கிளைகளினால் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன், சாணக்கியன் ஆகி யோர் அதனை எதிர்க்கின்றனர். இவ்வாறு இருந்தால் தமிழர் களுடைய நிலை என்ன?

தமிழர்களை கூறு போட்டு, தமிழர்களுடைய இருப்புகளை அழிப்பதற்கு ரணிலோ, சஜித்தோ, அனுரவோ அல்லது நாமல் ராஜபக்சவோ தேவையில்லை, எமது கட்சித் தலைவர்களே போதும்.

தமிழ் சிவில் சமூகமாக நாங்கள் எடுத்த பொது வேட்பாளர் என்ற முயற்சியை ஆதரித்து, எதிர்காலத்தில் இவ்வாறான புல்லுருவி களையும், முண்டு கொடுப்பவர்களையும் நிராகரிப்பதற்கு நாங்கள் தமிழர் சமூகமாக ஒன்றுபட வேண்டும்.

வாக்குப் போடுவது மக்களாகிய நாங்கள். ஆனால் இவர்கள் எப் போது மக்களை சந்தித்து, மக்களது கருத்துக்களை கேட்டு தீர் மானம் எடுத்தார்கள்? ஆகவே இவர்கள் மக்களது பிரதிநிதிகள் என்று கூறி எவ்வாறு சர்வதேச சமூகங்களிடம் பேசப் போகின் றார்கள்?

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டமானது



பிரிவினையை காட்டுகின்றது. எனவே மக்களே நீங்கள் இந்த தமிழரசுக் கட்சியை நம்பாதீர்கள். நாங்கள் சுயமாக சிந்தித்து, எங்களுக்கு இருக்கின்ற வாக்குரிமை பலத்தினால் ஒன் றிணைந்து செயற்படுவோம். எமது கட்டமைப்புக்குள் வருமாறு நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியையும் அழைக்கின்றோம்.

தங்களுடைய சுயலாபத்துக்காகவும், தங்களது மதுபான நிலைய அனுமதிப் பத்திரத்துக்காகவும், தாங்கள் கோடிகளை சம்பாதிப்பதற்காகவும் தமிழ்மக்களை எதிர்காலத்தில் விற்றுப் பிழைப்பது சாத்தியமற்றது. 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் அது வெளிச்சத்துக்கு வரும். அப்பொழுது இந்த அர சியல் காட்சிகளும், பேரம் பேசுபவர்களும் புரிந்து கொள் வார்கள்.

# வவுனியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொலிசார் முன்னிலையில் ஊழியர்கள் மீது தாக்குதல்!

02.09, 2024

வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கப்பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவு 12:15 மணியளவில் எரிபொருள் நிரப்ப வருகை தந்த மூவர் அடங்கிய குழுவினர் அங்கு கடமையில் இருந்தவர்கள் மீது தாக்குதல் இடப்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

ஞாயிற்றுக்கிழமை (01) இரவு ஒரு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த மூவர் எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் ஊழியரோடு தர்க்கப்பட்ட நிலையில் திடீரென அவர்களில் ஒருவர் அங்கு வேறு கடமையில் இருந்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது தாக்குதல் நடத்தினார்.

இதன்போது போக்குவரத்து பொலிசார் இருவர் சம்பவ இடத்தில் இருந்துள்ளனர்.

இந்நிலையில், தாக்குதல் நடத்தியவர்களை தடுப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த மற்றைய ஊழியர் சென்றபோது அவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய மூவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்றிருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



# தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது!

03.09, 2024

தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் அலுவலகத்தில் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு இடம்பெற்றது.

தென்னிலங்கை வேட்பாளர்களை நிராகரித்து தமிழ்ப் பொது வேட்பாளர் ஊடாக தமிழர்கள் தேர்தலை எதிர்கொள்வதற்கான அவசியம், புறநிலை, முக்கியத்துவம் என்பவற்றையும் தமிழர்கள் தேசமாக தமது நிலைப்பாட்டினை அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் ஆணித்தரமாக வெளிப்படுத்தும் வகையில் தமிழ் பொது வேட்பாளராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா. அரியநேந்திரன் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பினரால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப் பட்டுள்ளார்.

அந்நிலையில், பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம்



இன்றைய நாள் வெளியிடப்பட்டுள்ளது.

# மருந்து கொள்வனவில் உள்ள ஊழலை தடுப்போம்: மன்னாரில் போராட்டம்!

05.09, 2024

மருந்து கொள்வனவில் உள்ள ஊழலை தடுப்போம் என்று கோரி மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக வைத்தியர்கள் கடந்த செவ்வாய் கிழமை (03) கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தின் போது 'நியாயமான குரல்களை நசுக்காதே' 'தொழிற்சங்க உரிமைகளை நசுக்காதே' ' மருந்து கொள்வனவில் உள்ள ஊழலை தடுப்போம்' போன்ற வாசகங்களை ஏந்தியவாறு வைத்தியர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தின் போது வைத்தியர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு,

நாடு பூராகவும் வைத்தியசாலைகளில் நோயாளிகள் தகுந்த முறையில் மருந்து வகைகளை பெற முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

நோளார்களுக்கு மருந்து வகைகளை வெளியில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கும்போது வைத்தியர்களாகிய எங்களை பொது மக்கள் திட்டும் நிலைக்கு உள்ளாகி வருகின்றோம்.










**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தவேளை காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல்!

05.09, 2024

கிழக்கு பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த வேளை இராணுவத்தினால் விசாரணைக்கு என அழைத்துச்சென்று காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 34வது ஆண்டு நினைவேந்தல் இன்று வியாழக்கிழமை (05) நினைவுகூறப்பட்டதுடன் காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கோரி போராட்டமும் இடம்பெற்றது.




1990ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக முகாமில் தஞ்சமடைந்தவர்களில் 158 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுளளார்கள். இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டாலும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையை இழந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறுகிறார்கள்.

இன்று வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றலில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தலில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி அ.அமலநாயகி, கிழக்கு பல்கலைகழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றிய தலைவர் வி.கஜரூபன், சிவில் சமூக செயற்பாட்டாளர் ரஜனி ஜெயபிரகாஸ், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் திட்ட முகாமையாளர் நா.மிருஜா உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பல்கலைக்கழக வளாகத்தின் முன் பதாதைகளை ஏந்தியவாறு தமது உறவுகளுக்கு நீதி கோரி கவனயீர்ப்பு பேராட்டத்தில் ஈடுபட்டதுடன் உறவுகள் மற்றும் மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து மௌன இறைவணக்கம் செலுத்தியும் மெழுகுவர்த்தி ஏற்றியும் அஞ்சலி செலுத்தினர்.

1990.09.05 அன்று அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்தி, பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி மனிதர்கள் முன் நிறுத்தப்பட்டு, முகமூடி மனிதர்களால் தலையாட்டப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டதாக இந்த சம்பவத்தை வருடங்கள் 34 கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாக பலரும் நினைவுகூருகிறார்கள்.

இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதான குழுவானது பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்தது.

1990 செப்டம்பர் 5ஆம் திகதி 32 பேரை மட்டுமே விசாரணைக்காக கைது செய்து அழைத்துச் சென்றதாகவும் 24 மணிநேரத்துக்குள் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் எனவும் அவ்வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகித்த எயர்மார்சல் பெர்னாண்டோ இதற்கான பதிலை அனுப்பியிருந்தார். இந்த பதிலை மட்டக்களப்பு சமாதானக் குழு நிராகரித்தது.

விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு மூன்றாம் நாள் செப்டம்பர் 8ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமுக்கு சென்று சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக கிழக்கு மாகாண இராணுவ தளபதியாக இருந்த ஜெரி சில்வா உட்பட பாதுகாப்பு உயர்மட்டக் குழுவினரும் சென்றிருந்தனர்.

இராணுவத்தினரே எமது உறவுகளை அழைத்துச் சென்றதாக மக்களும் முகாம் பொறுப்பாளர்களும் இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தவேளை கடும் தொனியில் இராணுவ அதிகாரிகள் பதிலளித்ததாக கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைக்காக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு முன்னிலையில் பலர் சாட்சியமளித்தனர்.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொதுமக்கள் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில் இராணுவத்தினரே செப்டம்பர் 5ஆம் திகதி 158 பேரையும், 23ஆம் திகதி 16 பேரையும் கைது செய்து கொண்டுசென்றனர் என தெரிவித்திருந்தது.













# முல்லைத்தீவு தியோகு நகர வழக்கு மீண்டும் தவணையிடப்பட்டது!

05.09.2024, 2024

முல்லைத்தீவு தியோகு நகரில் அவலோன் நிறுவனத்தின் அடாவடியை எதிர்த்து பொதுமக்கள் போராடியமை தொடர்பான வழக்கு வியாழக்கிழமை (05) நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு - தியோகு நகர்ப் பகுதியில் கடந்த 26.05.2024 அன்று கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குரிய மக்கள் பயன் பாட்டிலுள்ள வீதியை அவலோன் எனப்படும் தனியார் நிறு வனம் அடாவடியாக வேலியிட்டு தடுத்தமையால், அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அடாவடியாக வீதியை தடுத்து அமைக்கப்பட்ட வேலியையும் அப்புறப்படுத் தியிருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்கு 20.06.2024 அன்று விசாரணைக் காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த விவகாரங்களுடன் தொடர்புடைய முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரை ராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன், பீற்றர் இளஞ்செழியன், தியோகு நகர் கிராமமக்கள், அவலோன் நிறுவன முகாமையாளர் உள்ளிட்டவர்களை சொந்தப் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், இந்த வழக்கு மேலதிக விசாரணைக்காக 05.09.2024 என திகதியிடப்பட்டிருந்தது.

அதனையடுத்து, இன்றைய தினம் இந்த வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டத் தரணிகள் வாதாடி 12.12.2024 என்கிற திகதிக்கு மீண்டும் தவணையிடப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டுக்கு முற்பட்டே தியோகு நகர் கிராமம் உரு வாக்கப்பட்டு 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கே வசித்து வருகின்றன. இவர்களின் வாழ்வாதாரம் கடற்றொழிலாகும். இக்கிராமம் உருவாக்கப்பட்டது தொடக்கம் கடலுக்கு செல்லும் பாதை அக்கிராமத்தினூடாகவே அமைக்கப்பட்டு பயன்பாட் டிலுள்ளது.

திடீரென தனியார் நிறுவனம் இது தங்களுடைய காணி என உரிமை கோரி மக்கள் அப்பாதையூடாக கடற்கரைக்கு செல்லாதவாறு பாதையை மறித்ததன் பின்னரே மக்கள் போராடி வீதித்தடையை அகற்றியிருந்தார்கள்.



அதனையடுத்து, இந்த கிராமத்துடன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் விரைந்து, அது பிரதேச சபைக்கு சொந்தமான வீதி என கடிதம் வழங்கியிருந்தார்கள். ஆனால், தனியார் நிறுவனத் தினர் மக்கள் மீதும் இந்த கிராம காணி தமக்கானது என கூறியும் முறைப்பாடு செய்ததோடு வழக்கொன்றும் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கு முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக சேவகர் பீற்றர் இளஞ்செழியன், கிராம மக்கள் உட்பட 13 நபர்களுக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். செம்மணியில் இடம்பெற்ற கிரிசாந்தி குமாரசாமி படுகொலையின் 28ஆம் ஆண்டு நினைவேந்தல்!

07.09, 2024

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசாமி உள்ளிட்ட செம்மணியில் கொன்று புதைக்கப்பட்ட ஆயிரக் கணக்கான தமிழ் உறவுகளை நினைவுகூர்ந்து செம்மணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று 07.09.2024 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் நினை வேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

28 ஆண்டுகளுக்கு முன்னர் காவலரண் ஒன்றில் அவர் சிறீலங்கா இராணுவத்தினரால் வழி மறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் படையினரால் வல்லுறவுக்கு உள்ளாக் கப்பட்டு சித்திரவதைக்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டார்.





இவரோடு ஆயிரக் கணக்கானோர் புதைக்கப்பட்டுள்ளார்கள்.









"நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே!
உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன்.
நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும்.
இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும்.

*- ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் -*

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# சிறீலங்கா இராணுவத்தினரால் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட கு. கிருசாந்தி உட்பட படுகொலையுண்ட மக்களின் நினைவு சுமந்த 28 ஆவது ஆண்டு நினைவேந்தல்!

07.09., 2024

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 28 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றைய தினம் சனிக்கிழமை மாலை செம்மணி பகுதியில் இடம்பெற்றது.





கிருசாந்தி குமாரசாமி

இதன்போது செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட, அங்கு புதைக்கப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டு, அவர்களுக்கும் ஈகைச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப் பட்டது.


ராசம்மா பிரனவன் கிருபாமூர்த்தி

செம்மணிப் படுகொலை நினைவேந்தல் பேரவையின் தலைவர் கிஷோர் தலைமையில், நடைபெற்ற நினைவேந் தலில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

1996 ஆம் ஆண்டு செம்டம்பர் மாதம் 7ஆம் திகதி 18 வயதுடைய யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி வீதியால் சென்று கொண்டிருந்த போது, செம்மணி பகுதியில் இராணுவத்தினரால் வழிமறித்து பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

கிருஷாந்தியை, செம்மணி இராணுவ முகாமில் தடுத்து வைத் திருந்ததை பிரதேச மக்கள் அவதானித்ததையடுத்து மாண வியின் தாயாரிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, மாணவியின் தாயாரான ஆசிரியை குமார சாமி இராசம்மா, மாணவியின் சகோதரன், குமாரசாமி பிரணவன் மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகி யோர் மாணவியை தேடி சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்துள்ளனர்.

அதனையடுத்து மாணவியைத் தேடிச் சென்ற மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்திருந்தனர்.

அன்றைய தினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால் வரின் உடல்கள் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளியில் புதைத்தனர்.







# தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதில் உறுதி!

## பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

07.09, 2024

எனது அரசியல் பயணத்தையும் அது சார்ந்த பணிகளையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருக்கிறேன் என பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தமிழ் தேசிய பொதுக்கட் டமைப்பினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தமிழ் பொது வேட் பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக அறிவித்திருக்கும் நிலையில், தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பதாக சிறீதரன் அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த மாதம் 29ஆம் திகதி லண்டனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சிறீதரன், அங்கு முதலாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந் துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

அதன் ஓரங்கமாக இரு தினங்களுக்கு முன்னர் பிரித்தானிய வாழ் புலம்பெயர் தமிழர்களின் ஏற்பாட்டில் அங்கு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய சிறீதரன், 'ஈழத்தமிழர்களை மையப்படுத்திய தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இனத் தின் இருப்புக்காகவும், இறைமைக்காகவும் அரசியல் பணியாற் றுவதற்காகவே நான் இணைந்துகொண்டேன். எனது அர சியல் பயணத்தையும், அது சார்ந்த பணிகளையும் அதே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதனால் இறுதி வரை அந்தக் கொள்கையில் பிறழ்வற்றுப் பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன்' என்று தெரிவித் துள்ளார்.



அதுமாத்திரமன்றி அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலும் தான் உறுதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தெற்கின் தேர்தல் வெற்றி தினம் என்பது தமிழர்களுக்கு இன்னும் ஒரு கரி நாள் என்பதை வெளிப்படுத்துவோம்!

## அருட்தந்தை மா. சத்திவேல்

07.09, 2024

தெற்கின் தேர்தல் வெற்றி தினம் என்பது தமிழர்களுக்கு இன்னும் ஒரு கரி நாள் என்பதை வெளிப்படுத்துவோம். அதுவே எமக்கான தேர்தல் வெற்றியாக அமையட்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று சனிக்கிழமை (07) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றத்திற்கான சக்தியாக தம்மை அடையாளப்படுத்தும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசநாயக்க அண்மையில் யாழில் நடத்திய ஜனாதிபதி தேர்தல் வாக்கு வேட்டை பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் மக்களின் அபிலாசைகள் என தான் நினைத்ததை மட்டும் காட்டி பேசியதோடு மாற்றத்திற்கான தெற்கின் மக்களோடு இணைந்து வடகிழக்கு தமிழர்களும் தமக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மறைமுகமாக அச்சுறுத்தும் தொனியில் பேசியது அரசியல் அநாகரீகமாகும்.

தமிழர்களின் ஜனநாயக உரிமைக்கு எதிரானதும் இன அழிப்பின் முகம் கொண்டதுமான வார்த்தைகளாகும். இதனை வன்மையாக கண்டிப்பதோடு வடகிழக்கு தாயக மக்கள் பேரினவாத கருத்தியல் கொண்ட இன அழிப்பு ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதோடு இவர்களின் வெற்றி தினத்தினை தமிழ் தேசமெங்கும் இன்னுமொரு ஒரு கரி நாளாக வெளிப்படுத்த வேண்டும்.

அநுரகுமார தமது உரையில் எந்த பாதையை தேர்ந்தெடுக்க, வேண்டும் யாருக்கு வாக்களிக்க வேண்டும், யாருக்கு வாக்களிக்க கூடாது என்பதை மறைமுக அச்சுறுத்தும் பாணியில் கூறியதோடு மாற்றத்தை விரும்பும் தெற்கு மக்களோடு இணைய வேண்டும் என்று அழுத்தமாகவும் குறிப்பிட்டார். அவ்வாறு வாக்களிக்காவிட்டால் தமிழ் மக்கள் அனுபவிக்க நேரிடும் என்பதையும் நாசுக்காக வெளியிட்டார். இது அவர்களின் 1988-89 கால நாகரிகத்தை காட்டி நிற்கின்றது.

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை துண்டாடி பேரினவாதத்தின் வரலாற்று பெருமையை தமதாக்கிக் கொண்டவர்கள் இவர்கள். அவர் அந்த பிரிப்பு நிலையில் நின்று நாட்டின் பிரச்சினையை வடக்கு, கிழக்கு, தெற்கு என ஒன்றாகக்கூடி பேசித்தீர்ப்போம் என தனது உரையில் குறிப்பிட்டார். வடகிழக்கை இனி இணைய விடமாட்டோம் என் நிலைப்பாட்டின் தொனியாகும். இதுவே அவர்கள் அரசியல் கலாச்சாரம். இத்தகைய கலாச்சாரத்தோடா தமிழர்களை ஒன்று சேர அழைப்பு கொடுக்கின்றார்கள்?

யாழின் கூட்டத்தில் மகிந்த, ரணில் மைத்திரி போன்றோரும் அவர்களின் சகாக்களும் புரிந்த பொருளாதார குற்றங்களுக்கும், நாட்டின் பொது சொத்தினை கொள்ளையடித்தமைக்கும் தண்டனை கொடுப்போம் என்று கூறியவர் தமிழர்களுக்கு எதிராக சிங்கள பௌத்த பேரினவாத அரசு படையினர் புரிந்த யுத்தக் குற்றங்களை மறைத்து யுத்தத்திற்கு முகம் கொடுக்காத மக்கள் முன் நிற்பதைக் போல் நின்றார்.

இதே அநுர குமார அண்மையில் இன்னுமொரு தேர்தல் பிரச்சாரத்தின் போது “நாம் ஆட்சிக்கு வந்தால் யுத்த குற்றவாளிகள் என அடையாளப்படுத்துவோரை தண்டிக்க மாட்டோம்” எனக் கூறியது மகிந்த, கோத்தா, மைத்திரி, ரணில் வரிசையில் நின்று இனப்படுகொலை யுத்த குற்றங்களுக்கும் தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி தன்னுடைய ஆட்சியில் இல்லை என்பதை வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்.

உயிர்ப்பு தின (2019) குண்டுத்தாக்குதல்களுக்கு காரணமானோரை கண்டுபிடித்து தண்டிப்போம் என்று தெற்கில் வாக்கு கேட்பவர்கள் வடக்கிலே 30 வருட காலமாக அப்பாவிகளை கொலை செய்தவர்களை, விஷக் குண்டுகளை மக்கள் மீது பொழிந்தவர்களை, பல்லாயிரக்கணக்கானோர் காணாமலாக்கபட்டமைக்கு காரணமானவர்களை வெளிப்படுத்தமாட்டோம் என தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையின் உண்மையை மறைத்து தன்னுடைய அரசியலுக்காக தெற்கில் ஒரு பகுதியினருக்கு எதிராக நடாத்தப்பட்ட தாக்குதலின் உண்மை தன்மையை வெளிப்படுத்துவோம் என கூறுவது அரசியல் வெட்கச் செயலாகும்.

அண்மையில் அநுரகுமார யாழில் நடத்திய கூட்டத்தில் மட்டுமல்ல வெறும் பிரதான வேட்பாளர்கள் வடகிழக்கில் நடாத்திய எந்த ஒரு வாக்கு வேட்டை கூட்டத்திலும் இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழர்களின் நிலங்கள் மற்றும் சிங்கள பௌத்த



தொல்லியல் திணைக்களத்தின் சிங்கள பௌத்த மயமாக்கல், சிங்கள பௌத்த குடியேற்றங்கள், தனியார் காணிகளில் புத்தர் சிலைகளை வைத்தல், அடாத்தாக விகாரைகளை கட்டுதல் போன்றவற்றிற்கு வருத்தமோ தடுத்து நிறுத்துவதாகவோ கருத்து கூற மறுத்துள்ளமை அவையெல்லாம் தமது காலத்திலும் தொடரும் என்பதையே உணர்த்துகிறது. இதுவும் ஒரு வகையில் யுத்த பிரகடனமே.

பேரினவாத ஜனாதிபதி வேட்பாளர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிக் கதிரையை தமதாக்க தமிழர்களை வெறும் கறிவேப்பிலையாகவும் ரம்பையாகவும் பாவித்து விட்டு தூக்கி எறியவே முற்படுகின்றனர். சுயநல அரசியலுக்கு தம்மை இரையாக்கிக்கொண்ட தமிழ் தேசிய அரியதரம் பூசிக்கொண்ட தமிழ் அரசியல் தரப்பினரும் தேர்தல் அரசியல் களத்தில் நின்று தமிழர்களை பலி கொடுக்கும் அரசியலை முன்னகர்த்துகின்றனர்.

சமாதானப்படையாக தமிழர் தாயகத்தில் காலடி வைத்த இந்திய இராணுவத்தையும், இந்தியாவின் முகத்தையும் இதற்கு அவர்கள் யார் என்பதையும் உலகிற்கு வெளிக்காட்டிய தியாகி திலீபனின் உயிர்தியாக மாதம் இதுவாகும். அவரின் உண்ணாவிரத போராட்டம் எமது அரசியலுக்கும் தேசியம் காக்கும் செயற்பாட்டுக்கும் உந்து சக்தியாக இருப்பதோடு எதிராளிகளில் முகத்திரையை கிழிக்க தேசமாக ஒன்று சேர்வோம். தெற்கின் தேர்தல் வெற்றி தினம் என்பது தமிழர்களுக்கு இன்னும் ஒரு கரி நாள் என்பதை வெளிப்படுத்துவோம். அதுவே எமக்கான தேர்தல் வெற்றியாக அமையட்டும்.

# வவுனியா சட்டவிரோத சிங்கள குடியேற்ற கிராமமான காலபோகஸ்வேயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சபுமல்கஸ்கட விகாரையின் தூபி திறந்து வைக்கப்பட்டுள்ளது!

07.09, 2024

வவுனியா சட்டவிரோத சிங்கள குடியேற்ற கிராமமான காலபோகஸ்வேயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சபுமல்கஸ்கட விகாரையின் துாபி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ் விகாரையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன அவர்கள் இதை திறந்து வைத்திருக்கின்றார்.

அங்கு பிரமாண்டமான புத்தர் சிலை, அன்னதான மண்டபம் என்பவற்றையும் திறந்து வைத்திருக்கின்றார். ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களுக்கு மத்தியிலும் கூட திரு ரணில் விக்ரமசிங்கே அரசு தனது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் வடக்கு கிழக்கில் சிங்கள பௌத்த மயமாக்கலை விரிவாக்கம் செய்து வருகின்றது.

அந்த வகையில் வவுனியா வடக்கு தமிழ் கிராமங்களின் எல்லைக்கோட்டின் வழி ஊடக நகர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு சிங்கள குடியேற்றங்களை இணைத்து பரவும் மிக பரந்த குடியேற்றத்தின் மையமாக இவ் விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால் 2023 ஆண்டில் மட்டும் ரூபா 469 பில்லியன் (மொத்த அரசாங்க செலவில் 8%) பாதுகாப்பு அமைச்சுக்கு செலவிடபட்டுள்ளது.

இவ்வாறு செலவிடப்படும் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கில் மிக பாரிய இராணுவ கட்டமைப்பை பேணி வருகின்றார்கள் . அதாவது வடக்கு கிழக்கில் 10 பேருக்கு 1 என்ற விகிதத்தில் இராணுவம் நிலைகொண்டிருக்கிறது. வன்னியில் 1:5 எனும் விகிதத்தில் இராணுவம் இருக்கிறது.

இந்த இராணுவ கட்டமைப்பின் உதவியோடு சிங்கள பௌத்த கட்டமைப்பை தொடர்ந்து தயக்கமின்றி விரிவாக்கம் செய்கின்றார்கள்



www.sangathamil.ca

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ‘நமக்காக நாம்’ வவுனியாவில் மாபெரும் பொதுக் கூட்டம்: ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்பு!

08.09, 2024

வவுனியா மாவட்டத்தில் ‘நமக்காக நாம்’ பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இன்று (08) ஞாயிற்றுக் கிழமை சங்கு சின்னத்துக்கு ஆதரவு கோரி மாபெரும் பொதுக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.





தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு சார்பில் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் மன்னார் வீதி, குருமன்காடு பகுதியில் உள்ள கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று ஆரம்பமான பொதுக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர்.

தமிழர்களின் ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் சார்பில் அரசியல் கட்சித்தலைவர்ள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக உரையாற்றியிருந்தனர்.

இந்த நிலையில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவான பொதுக்கூட்டத்தை ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேரடியாக பிரசன்னமாகி கண்காணிப்பில் ஈடுபட் டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஆவரங்கால் பகுதியிலும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

# “சிறீலங்கா இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டவர்கள்” என்ற கல்வெட்டை பதிப்பதை தடுத்து நிறுத்திய சிறீலங்கா பொலிசார்!

09.09, 2024

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் படுகொலை செய்யப்பட் டவர்களின் நினைவுத்தூபியை புனர்நிர்மானம் செய்து, அதில் “சிறீலங்கா இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட் டவர்கள்” என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை இன்றைய நாள் திங்கட்கிழமை பதித்துக்கொண்டிருந்தபோது, இக்கல் வெட்டை பொலிசார் பலவந்தமாக அகற்றி, அங்கு புனரமைப்பு செய்யவிடாமல் தடுத்துள்ளனர்.




அதனையடுத்து பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதில் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியுள்ளது.

அத்துடன், அங்கு பொலிசார் குவிக்கப்பட்டு சமூக செயற்பாட் டாளர்கள், பொதுமக்கள் உட்பட 7 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

1990 செட்டெம்பர் 9ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள் ளையாரடி, சத்துருக்கொண்டான் முதலான பிரதேசங்களைச் சேர்ந்த 85 பெண்கள், 10 வயதுக்குட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உட்பட 186 பொதுமக்கள் சிறீலங்கா இரா ணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும், ஒட்டுக்குழக் களாலும் படுகொலை செய்யப்பட்டு 34வது நினைவேந்தல் இன்றைய நாள் நினைவுகூறப்பட்டது.

இந்த நினைவேந்தலை முன்னிட்டு சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்ட படுகொலை செய்யப்பட்டவர்களின் தூபியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் நினை வேந்தலை நிளைவுகூறுவதுக்கான முன்னாயத்த வேலை-களை செய்துகொண்டிருந்தனர்.

இதன்போது “1990ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 186 அப்பாவி பொதுமக்கள்” என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மற்றும் உயிரிழந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல் வெட்டை நினைவுத்தூபியில் பதித்துக்கொண்டிருந்தனர்.

அவ்வேளை அங்கு சென்ற கொக்குவில் பொலிசார், “இராணு வத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினர், ஒட்டுக்குழுக் களால் படுகொலை செய்யப்பட்ட” என குறிப்பிடப்பட்டுள்ள கல் வெட்டை பதிக்க முடியாது என கூறி கல்வெட்டை பதிக் கவிடாமல் தடுத்துள்ளனர்.

இதன்போது அங்கிருந்த பொதுமக்கள் சமூக செயற்பாட்டாளர் களுக்கும் பொலிசாருக்கும் இடையே பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அப்போது பொதுமக்கள், இது 1995 சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தபோது ஓய்வுபெற்ற நீதியரசர் கே.பாலிகிட்ணன் தலை மையில் ஆணைக்குழு அமைக்கப்பட்டு, அதில் பாதிக்கப்பட்ட மக்களும் அதில் உயிர் தப்பியவர்கள் பலரும் இராணுவத்தினர், ஊர்காவல் படையினர் படுகொலை செய்ததாக சாட்சியமளித்து, அவை ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் யாரால் படுகொலை செய் யப்பட்டது என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை ஏன் பதிக்கக் கூடாது என பொதுமக்கள் கேள்வியெழுப்பி வாதம் செய்தனர்.

இந்நிலையில் தொடர்ந்தும் கல்வெட்டை பதிக்கவிடாது பொலிசார் தடுக்க முற்பட்டபோது அதனை மீறி கல்வெட்டு பதிக் கப்பட்டுக்கொண்டிருந்தபோது அங்கு நின்ற பொலிஸ் அத்தியட் சகர் பொதுமக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட 7 பேரை அங்கிருந்து இழுத்துச் சென்று ஜீப் வண்டியில் ஏற்றி யுள்ளார்.

அத்துடன் கல்வெட்டு பதிக்கும் வேலையை செய்துகொண் டிருந்த மேசனை இழுத்துத் தள்ளி, கல்வெட்டை அகற்றியதில் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து ஜீப் வண்டியில் ஏற்றப்பட்ட 7 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, பின்னர் இறக்கிவிடப்பட்டனர்.

அதேவேளை அங்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வருகிறது.







# சத்துருக்கொண்டான் படுகொலை நினைவு தூபி புனர்நிர்மானப் பணிக்கு பின்னால் பிள்ளையான்!

09.09, 2024

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை செய்யப்படவர்களுக்கு அமைக்கப்பட்டிருந்த நினைவு தூபியில் புனர் நிர்மானம் செய்ய முற்பட்ட தமிழ் பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் பிள்ளையான் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.





தூபியில் இராணுவத்தினால் படுகொலை செய்யப்படவர்கள் என்ற பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை இன்று திங்கட் கிழமை உயிரிழந்தவர்களது குடும்பங்கள் பதித்தனர்.

எனினும், அதனை சிறீலங்கா காவல்துறையினர் பலவந்தமாக கழற்றி எடுத்து அங்கு புனரமைப்பு செய்யவிடாது தடுத்ததையடுத்து முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

அதனையடுத்து அங்கு சிறீலங்கா காவல்துறையினர் குவிக்கப்பட்டதுடன், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் மிரட்டப்பட்டனர்.

1990ஆம் ஆண்டு செட்டெம்பர் 9ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக் கொண்டான் உட்படபிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உட்பட 186 அப்பாவி பொதுமக்களை சிறீலங்கா இராணுவத்தினராலும், ஊர் காவல் படையினராலும், ஒட்டுக்குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், உயிரிழந்தவர்களின் 34வது நினைவேந்தல் இன்றைய நாள் நினைவுகூறப்பட்டது.

அதனை முன்னிட்டு சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்ட படுகொலை செய்யப்பட்டவர்களின் தூபியில் நினைவேந்தல் 1990 ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 186 அப்பாவி பொது மக்கள் என்ற பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டை நினைவு தூபியில் பதிக்கமுற்பட்டுள்ளனர்.

அதன்பொது அங்கு சென்ற சிறீலங்கா காவல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் கல்லெட்டை பதிக்க முடியாது என தடுத்துள்ளனர்.

இந்நிலையில் அக்காலப்பகுதியில் புலிகள் அமைப்பிலிருந்த பிள்ளையானின் தூண்டுதலிலேயே தேர்தல் வாக்களிப்பில் பொது வேட்பாளரிற்கு வாக்கு வீழ்வதை தடுக்கவென தூபி நிர்மாணத்தை தடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.







# சங்கு சின்னத்திற்கு புள்ளடி போட்டு ஒற்றுமையை வெளிப்படுத்துவோம்!

## முன்னாள் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் ஆனந்தி சசிதரன்

10.09, 2024

தமிழின விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களது தியாகத்தையும், போரின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் இழப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி செப்டம்பர் 21 ஆம் திகதி தமிழ்ப் பொது வேட்பாளரின் சங்கு சின்னத்துக்கு வாக்களிப்போம் என முன்னாள் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.





தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு அதரவாக முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பரப்புரை நடவடிக்கை அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம் பெற்ற பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றும் போது அனந்தி சசிதரன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது கணவர் எழிலனை இராணுவத்திடம் நேரடியாக கையளித்து இன்று 15 ஆண்டுகளாகியும் நீதி கிடைக்கவில்லை. சர்வதேச அளவில் நீதிகேட்டு போராடிக்கொண்டிருக்கிறேன். கடந்த தேர்தல்களில் மாறி மாறி சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்தோம். ஆனால் எவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை காணவில்லை.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இரண்டு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்தார். இம்முறை தமிழ் மக்கள் சார்பில் கூட்டாக பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் கொண்டுவரப்பட்டுள்ளார். தமிழர்களுடைய வாக்கு தமிழருக்கே என்ற அடிப்படையில் நாங்கள் அவருக்கு வாக்களிக்க வேண்டும்.

தமக்காக வாழாது எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் உயிர்நீத்த பல்லாயிரம் மாவீரகளது தியாகத்தையும், போரின் போது கொல்லப்பட்ட மக்களது இழப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி தமிழர்களின் உரிமைச் சின்னமான சங்கு சின்னத்திற்கு நேராக ஒரே ஒரு புள்ளடியை போட்டு தமிழர்களின் ஒற்றுமையை எடுத்துக்காட்ட வேண்டும் என்றார்.

# தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல!

## முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ்

11.09, 2024

தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. மாறாக இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் மக்கள் வரலாற்று ரீதியில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கானது என தழிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து நேற்றைய நாள் செவ்வாய்க்கிழமை வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியம் இன்று பலவாறாக அகத் துண்டாலுக்கு உட்பட்டு வருகின்றது. இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளியுலகிற்கும் ஆட்சியில் அமர்பவர்களுடன் பேசுவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான நிலைமைகளை பலமிழக்கச் செய்து விடுமோ என்ற நியாயபூர்வமான அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. அவ் அச்சத்தில் நியாயபூர்வமான யதார்த்தம் உள்ளது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இனமான நாம் எமது அரசியல் அபிலாசைகளை சாதாரண ஜனநாயக உரிமைகளுடன் மட்டும் மட்டுப்படுத்திவிடமுடியாது.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எந்தளவு தூரம் ஆட்சியில் அமரக்கூடிய ஒருவருக்கு ஆதரவு அளிக்கலாம் என்று சிலர் அல்லும் பகலும் அறைபோட்டு சிந்திக்கின்றனர். செயற்படுகின்றனர். அவர்கள் இந்த நாட்டில் வெல்லக்கூடிய ஒருவரை தேடிப்பிடித்து சலுகைகளைப் பெற்று பெற்று சகித்து வாழுவோம் என்ற என்ற மனநிலையில் இனத்தினை அடமானம் வைக்கின்றனர்.

நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வாழ்கின்றனர் என்பதற்காக எண்ணிக்கையில் குறைந்த அளவுடைய நாட்டின் தேசிய இனமான தமிழ் இனம் இன உரிமைகளை விற்று வாழ முடியாது. சிங்கள பேரினவாதிகளுக்கு நோகக்கூடாது என்று வாழ்பவர்கள் எம்மிடத்தில் அதிகரித்துவிட்டனர். முக்களின் இட்சியத்தினையும் தியாகத்தினையும் விற்றுப்பிழைப்பதில் முன்டியடிக்கின்றனர்.

மண்ணுக்காக எத்தனையோ தியாகங்களை எம் இனம் மேற்கொண்டிருக்கின்றது. ஆடிப்படையில், எமது மக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியும் எமக்கு சமஸ்டி அடிப்படையிலான உலகம் ஏற்றுக்கொண்ட அரசியல் தீர்வினை முன்வைக்கக் கோரியும் நாம் பொது வேட்பாளரை முன்நிறுத்திச் செயற்படுவது நியாயபூர்வமாகச் சிந்திக்கும் எந்தவொரு சிங்களப் பிரஜைக்கும் எதிரான வேலைத்திட்டம் கிடையாது. சிங்கள முற்போக்கு சக்திகளும் சொந்த தாய் நாட்டில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் தமிழ்



மக்களின் கருத்து வெளிபாட்டு உரிமைக்கும் ஜனநாயக உரிமைக்கும் மதிப்பளித்து வாக்களிக்க முடியும்.

தமிழ் மக்களைப் பொருத்தளவில் எமது அரசியல் அபிலாசைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்றும் உள்ள நிலையில் ஒருமித்து தமிழ் பொது வேட்பாளரின் சின்னமான சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கடமையினை நிறைவேற்றுவோம் என ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

# சங்கு சின்னத்திற்கு மாத்திரம் வாக்களியுங்கள்!

## தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேந்திரன்

13.09, 2024

ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னத்திற்கு மாத்திரமே வாக்களியுங்கள். ஏனையவர்களுக்கு விருப்பு வாக்கு போட வேண்டாம் என தமிழ் பொது வேட்பாளர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

எட்டு மாவட்டங்களிலும் எமது பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எதிர்பார்த்த வாக்குக்களை விட அதிக வாக்குகள் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு வந்துள்ளது.

மக்களிடம் நாம் சங்கு சின்னத்திற்கு மாத்திரம் வாக்களிக்க வேண்டும் என்றே கோரி வருகிறோம். ஆனால் சிலர் சங்கு சின்னத்துக்கு வாக்களித்த பின்னர் விரும்பிய மற்றைய வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு சிலர் கூறு கின்றனர். இது எனதோ, பொது கட்டமைப்பை சார்ந்தவர்களுடைய கருத்தோ இல்லை.

தற்போதைய நிலவரப்படி எவருமே 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதானல் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் வடக்கு கிழக்கில்




முகாமிட்டு பிரச்சாரங்களை முன்னெடுக்கின்றனர்.

நல்லூர் திருவிழாவிற்கு காப்புக்கடை போடுவது போன்று, கொக்கட்டிசோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயத்தில் இனிப்பு கடை போடுவது போன்று, வடக்கு கிழக்கில் வந்து தங்கி பிரச்சாரம் செய்கின்றனர்.

அவர்களுக்கு முகவர்களாக சில தமிழர்கள் செயற்படுகின்றனர். எமது இனத்திற்காக அவர்கள் சிந்தித்து சங்கு சின்னத்திற்கு ஆதரவு வழங்க முன் வரவேண்டும். என மேலும் தெரிவித்தார்.

# யாழில். ஈகைச்சுடர் திலீபனின் தினைவேந்தலுக்கு தடைகோரி மனு தாக்கல் செய்த சிறீலங்கா பொலிசார்!

13.09, 2024

ஈகைச்சுடர் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை கோரி யாழ்ப்பாண பொலிசாரினால் யாழ். நீதவான் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


ஈகைச்சுடர் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

அந்நிலையில், யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை விதிக்க கோரி யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிசார் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை மனு தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் 18ஆம் திகதி முன்னெடுப்பதாகவும் அன்றைய நாள் மனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செல்வராசா கஜேந்திரன் மற்றும் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரை மன்றில் முன்னிலையாகுமாறு




மன்று கட்டளையிட்டுள்ளது



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# திருகோணமலையில் அதிகரித்துவரும் சிங்களக் குடியேற்றங்கள்!

## த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்

12.09, 2024

யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்தும் இராணுவக் கண்காணிப்பின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்து வருகின்றது.

வடக்கு, கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல் செய்யும் அதேவேளை, அவர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் அவர்களது சரித்திரம் மற்றும் கலாசாரம் என்பவற்றை முற்றாக அழிப்பதே இந்த நில அபகரிப்பு முயற்சிகளின் பிரதான இலக்காகும் என த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்டினால் வெளியிடப்பட்டுள்ள நில அபகரிப்பு தொடர்பான புதிய ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இயங்கிவரும் 'த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்' என்ற கல்வியகத்தின் ஸ்தாபகரும் நிறைவேற்றுப்பணிப்பாளருமான அனுராதா மிட்டால்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இயங்கிவரும் 'த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்' என்ற கல்வியகத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் நில அபகரிப்புக்கள் தொடர்பான தரவுகளையும், ஆவணப்படுத்தல்களையும் உள்ளடக்கிய 'ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை: இலங்கையில் தமிழர் தாயகத்தை இலக்குவைக்கும் நில அபகரிப்பு' எனும் தலைப்பிலான 32 பக்க ஆய்வறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் அபிவிருத்தி என்ற போர்வையில் இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு குடியேற்றங்கள் நிறுவப்பட்டிருப்பதாகவும், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதிலிருந்து இக்குடியேற்றங்கள் அதிகரித்திருப்பதாகவும் அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை வலுவற்றவர்களாக்கும் பொருட்டு அரசாங்கங்கள் மற்றும் இராணுவத்தினரால் கையாளப்பட்டுவரும் பலதரப்பட்ட உத்திகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

'யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்தும் இராணுவக் கண்காணிப்பின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்து வருகின்றது. வடக்கு, கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல் செய்யும் அதேவேளை, அவர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் அவர்களது சரித்திரம் மற்றும் கலாசாரம் என்பவற்றை முற்றாக அழிப்பதே இந்த நில அபகரிப்பு முயற்சிகளின் பிரதான இலக்காகும்' என த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்டின் ஸ்தாபகரும் நிறைவேற்றுப்பணிப்பாளருமான அனுராதா மிட்டால் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்த ஆய்வறிக்கையின் பிரகாரம், நில அபகரிப்புக்களின் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் தற்போது 27 சதவீதமாக இருக்கும் சிங்கள மக்கள், அந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 36 சதவீதத்தைத் தம்வசம் வைத்திருக்கின்றனர். அங்கு 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு (41,164 ஏக்கர்) அபகரிக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த 10 வருடங்களில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்திட்டங்கள், துறைமுக நவீனமயமாக்கல், சக்திவலு உற்பத்தி, சுற்றுலாத்துறை மேம்பாடு என்பன உள்ளடங்கலாக 'அபிவிருத்தி' எனும் போர்வையில், 'சிங்களமயமாக்கல்' நடவடிக்கையின் ஓரங்கமாக இந்த நில அபகரிப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன.

அதேபோன்று தொல்லியல் திணைக்களம், வன இலாகா, மகாவலி அதிகாரசபை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு அரச கட்டமைப்புக்கள் இந்த நில அபகரிப்பின் மூலம் இடம்பெறும் 'சிங்களமயமாக்கல்' நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் 'ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை' என்ற ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

'தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை விஸ்தரிப்பதானது பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்கும், குடித்தொகைப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசார சின்னங்களை அழிப்பதற்கும் வாய்ப்பேற்படுத்துகின்றது.




2009 ஆம் ஆண்டிலிருந்து குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 3887 ஏக்கர் நிலப்பரப்பில் 26 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இலங்கை இராணுவத்தின் 7 பிராந்திய தலைமையகங்களில் ஐந்தை வட, கிழக்கு மாகாணங்களில் நிறுவியிருப்பதன் மூலம் இம்மாகாணங்கள் தொடர்ந்து உச்சளவில் இராணுவமயமாக்கப்பட்டுள்ளன. இது அப்பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கும், சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கும், நிலங்களை அபகரிப்பதற்கும் உதவுகின்றது' எனவும் த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட் தெரிவித்திருக்கிறது.

# தமிழர்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தி நிற்கும் பொது வேட்பாளருக்கு வாக்களியுங்கள்!

## யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன்

13.09, 2024

தமிழ் மக்களின் விருப்பங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றாத தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களிக்காது, தமிழர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தி தேர்தலில் போட்டியுடன் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என யாழ் . மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்

யாழ் . ஊடக அமையத்தில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் எமக்கு என்ன தேவை என கூறியுள்ளோம். ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு எந்த சுபீட்சமும் இல்லை. யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களில் தமிழர் தாயகத்தில் என்ன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது? அரசாங்கத்துடன் சேர்த்து இயங்கியவர்களுக்கு கூட அபிவிருத்தி சார்பான அமைச்சை கூட கொடுக்கவில்லை.

பலாலி விமான நிலையத்தில் இருந்து சென்னை செல்லும் விமானத்திற்கு கூட தடைகளை ஏற்படுத்தும் முகமாக சர்வதேச விமான நிலையத்தை கூட அவர்கள் அபிவிருத்தி செய்யவில்லை. காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களை கூட அபிவிருத்தி செய்யவில்லை.

யுத்தம் முடிவைடைந்து 15 வருடங்களில் வடக்கு கிழக்கில் செய்த அபிவிருத்தி என்ன? ஒரு சர்வதேச மைதானங்களை கூட அமைக்கவில்லை. சர்வதேச மைதானங்களை அமைத்தால், அந்த இடம் தானாக அபிவிருத்தி அடையும். நட்சத்திர ஹோட் டல்கள் வரும் தமிழர் தாயக பிரதேசங்கள் அபிவிருத்தி அடைந்துவிடும் என்ற நோக்கிலேயே சர்வதேச மைதானங்களை அமைக்கவில்லை.

தமிழர் தாயகத்தில் பொருளாதார மையங்கள் கூட இல்லை.

நாம் எம்மை பொருளாதார ரீதியாக முன்னேற்ற எங்களுடைய கைகளுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும். அதன் ஊடாகவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாம் கொண்டு வர முடியும்.

தமிழர்கள் விரும்பிய எதனையும் செய்யாத தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்காது, தமிழர்களுக்கு என்ன தேவை என தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம்

2009ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழ் மக்கள் மத்தியில் பல பிளவுகள் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு பிளவு பட்டுள்ள எங்களுடைய தமிழ் இனத்தை ஒன்றிணைக்க வேண்டும்.




அதற்காகவே தமிழ் தேசிய கட்சிகளில் 7 தமிழ் அரசியல் கட்சிகள், கடற்தொழிலாளர்கள் அமைப்புக்கள் , உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் உள்ளடங்கிய 80 சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தி உள்ளோம். தமிழரசு கட்சியில் கூட பெரும்பாலானவர்கள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றார்கள்

எனவே தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை காட்ட தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# சங்குக்கான ஆதரவு புதிய திசை நோக்கிய பயணத்தின் ஆரம்பமாகும்!

## தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பை சேர்ந்த செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

13.09, 2024

தமிழர் விவகாரங்களுக்கு தீர்வுகாணும் முயற்சியை புதிய திசை நோக்கியதாக நகர்த்துவதற்கான ஆரம்பப் புள்ளியாக தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக செப்டெம்பர் 21 ஆம் திகதி தமிழர்கள் அனைவரும் சங்கு சின்னத்துக்கு நேரே புள்ளடியிடுவோம் என தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பை சேர்ந்த செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை தெரிவித்தார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பரப்புரை நடவடிக்கையின் தொடர்ச்சியாக மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பேச்சி அம்மன் கோயில் முன்றலில் இரா.மயூதரன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை (13) இடம்பெற்ற பரப்புரை கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தி என்று எம்மை ஏமாற்றிவிட்டு எமக்கு எதிரான செயற்பாடுகளே இலங்கை அரசு தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மயிலிட்டி துறைமுகம் அதற்கு சாட்சியாகும்.

மயிலிட்டியை சேர்ந்த மக்களின் மீன்பிடி நடவடிக்கைக்காக துறைமுகத்தை புனரமைத்து தருவதாக வாக்குறுதியளித்த நிலையில் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டபோதிலும் இதுவரை இந்த மண்ணுக்கு சொந்தமான மக்கள் தொழிலினை சீரான முறையில் மேற்கொள்வதற்கேற்ற அடிப்படை விடயங்கள் எவையும் செய்துதரப்படவில்லை.

வெளிமாவட்ட பலநாட் படகுகளும், பறிமுதல் செய்யப்படும் இந்திய இழுவைப் படகுகளுக்குமாகத்தான் இத்துறைமுகம் பயன்படுவருகிறது.

கடல் மீது நாம் கொண்டிருக்கும் உரிமையை எம்மிடம் இருந்து பறித்தெடுக்கும் வகையிலேயே எமது கடற்றொழிலினை மேற்கொள்ள பல்வேறு வழிகளில் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி என்ற போர்வையில் மயிலிட்டி மக்களாகிய நீங்கள் இவ்வாறு ஏமாற்றப்பட்டதை போன்றே தமிழர்களாக நாமும் ஏமாற்றப்படு வருகின்றோம். சிதறிப்போய் இருக்கும் நாம், தமிழர் தேசமாக ஒன்றிணையும் போதே இந்த அவலங்களுக்கு முடிவுகட்ட முடியும்.



செப்டெம்பர் 21 ஆம் திகதி காலையிலேயே நாம் அனைவரும் சென்று சங்கு சின்னத்துக்கு நேராக ஒரு புள்ளடியை மட்டும் இட்டு தமிழர் ஒற்றுமையை வெளிக்காட்டுவோம்.

தென்னிலங்கை வேட்பாளர்களை இரண்டாம் மூன்றாம் தெரிவுகளாக கூட தமிழர்கள் சிந்திக்கவே முடியாது. ஆகவே எமது வாக்கினை சங்குக்கு மட்டுமே வாக்களிப்போம் என்றார்.

# தமிழர்களின் ஒற்றுமையை சிதைக்கும் படித்த முட்டாள்களுக்கு பாடம் புகட்டுவோம் – க.வி. விக்னேஸ்வரன்

13.09, 2024

தமிழகளின் ஒற்றுமையை சிதைக்கும் வகையில் செயற்பட்டு வரும் படித்த முட்டாள்களுக்கும் தமிழ்ப் பொதுவேட்பாளரை இழிவாகப் பேசி சிங்கள வேட்பாளர்களுடன் கூட்டு என்று கூறி அவரையும் நிராகரிக்க கோரும் பகிஸ்கரிப்பாளர்களுக்கும் தகுந்த பாடம் புகட்டும் வகையில் வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி காலையிலேயே சென்று சங்கு சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை - சுப்பர்மடம் பொது மண்டபத்தில் இன்று (13) வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு இரா.மயூதரன் தலைமையில் இடம்பெற்ற நமக்காக நாம் பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

சுப்பர்மடம் கடற்றொழிலாளர்களுடன் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் அவர்களுக்காக சங்குச் சின்னத்தில் வாக்களிக்க கோரி இடம்பெற்ற பரப்புரை கூட்டத்தில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பை சேர்ந்த செல்வின் இரணியேஸ் மரியாம்பிள்ளை, புலம்பெயர் செயற்பாட்டாளர் பீற்றர், சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூ.சங்க நிர்வாகிகள் மற்றும் அவ்வூர் மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு இருதய சத்திரசிகிச்சை பொருந்துமா அல்லது Stent என்னும் உறைகுழாய் பொருத்தப்படுதல் பொருந்துமா என்று மருத்துவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு உங்களுடன் இணைந்து பொது வேட்பாளரை ஆதரிக்கும் கூட்டத்தில் பங்கு பற்ற வந்திருக்கின்றேன் என்றால் எந்த அளவுக்கு பொது வேட்பாளருக்கு மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்க வேண்டும் என்று ஆவலாய் இருக்கின்றேன் என்பது உங்களுக்குப் புரியவரும்.

எமது வடகிழக்கு மாகாணங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? நேற்று எனக்குக் கிடைத்த ஆய்வு விபரங்களின் படி (இன்று அவை பத்திரிகைகளிலும் வந்துள்ளன) திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறும் காணி ஆக்கிரமிப்பின் காரணமாக தற்போது அம் மாவட்ட சனத்தொகையில் 27 சதவிகிதமானோர் சிங்கள மக்கள் என்றும் அம் மாவட்டத்தின் மொத்த நில விஸ்தீரணத்தில் 36 சதவிகிதத்தை அம் மக்கள் தம் கைவசம் வைத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆய்வறிக்கையைத் தந்துள்ளவர்கள் கலிபோர்ணியாவில் இருந்து கடமையாற்றும் ஒக்லண்ட் நிறுவனத்தார்.

அவர்களின் ஆய்வாளர்கள் இங்கு வந்து நிலைமையை அறிந்தே தமது ஆய்வறிக்கையைத் தந்துள்ளார்கள். இதைவிட மிகவும் ஆபத்தான ஒரு விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் திருகோணமலையின் குச்சவெளிப் பிரதேசம் கடந்த பத்து ஆண்டுகளில் மிக மோசமான மாற்றங்களைச் சந்தித்துள்ளது என்றும் அப்பிரதேசத்தின் 50 சதவீத நிலங்கள், அதாவது 41,164 ஏக்கர் காணிகள், பல அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் பௌத்த கோயில்களைக் கட்டுவதற்காகவும் அரசாங்க திணைக்களங்களால் கையேற்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்த மக்கள் விரட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் 3887 ஏக்கர் கையேற்க்கப்பட்ட காணிகளில் 26 பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறான மிகவும் செழிப்பான காணிகளிலும் கரையோரப் பிரதேசங்களிலும் இருந்து வந்த தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. விரட்டப்பட்ட மக்கள் தமது காணிகளுக்குப் போக முடியாதபடி இராணுவம் அங்கு நிலை கொண்டிருக்கின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலகங்கள் ஏழில் 5 செயலகங்கள் வடக்கு கிழக்கில் குடிகொண்டிருக்கின்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

இது நடைபெறுவது இன்றைய ஜனாதிபதி பதவி வகிக்கும் காலகட்டத்தில் என்பதை நாங்கள் மறக்கக்கூடாது. பௌத்த விகாரைகளை வடக்கு கிழக்கில் கட்ட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தவர் சஜித் பிரேமதாச அவர்கள். சேர்ந்திருந்த வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் நீதிமன்றம் மூலம் பிரிக்க நடவடிக்கை எடுத்தவர் அனுரகுமார அவர்கள். மூவருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். இளவல் நாமல் பற்றிக் கூறவே தேவையில்லை. இராபக்சக்களின் மோசமான இனவாத தோற்றத்திற்கு அவர் மெருகூட்டி வருகின்றார். எந்த சிங்கள வேட்பாளர் வந்தாலும் வடக்குக் கிழக்கின் நிலங்கள் கையேற்கப்படுவதுடன் அவற்றின் தொடர்ச்சி துண்டிக்கப்படுவதும், அங்கு சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவதும் பௌத்த கோவில்கள் கட்டப்படுவதும் ஓயாமல் நடக்கப் போகின்றன. எமது இளைஞர்கள், படித்தவர்களும் பாமரர்களும், நாளாந்தம் வெளிநாடுகளுக்கு செல்ல ஆயத்தமாகி வருகின்றார்கள். எமது சனத்தொகை இதனால் குறையப் போகின்றது. ஆகவே சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு எம் மக்கள் வாக்களிப்பது இவ்வாறான தமிழர் எதிர்ப்பு செயல்களை முடக்கி விடப்போகின்றது என்பதில் சந்தேகமில்லை.

இதனால்த்தான் எமது தமிழ் வேட்பாளருக்கு உங்கள் மேன்மையான வாக்குகளை அளியுங்கள் என்று கேட்கின்றோம். அவரால் இவ்வாறான காணி ஆக்கிரமிப்புகளை நிறுத்த முடியுமா என்று கேட்பீர்கள். முடியும் என்பது எனது பதில். எமது மக்கள் ஒன்றிணைந்து தமது தனித்துவத்தைக் காட்டும் வண்ணம் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்தால், ஆறு இலட்சத்துக்கு மேல் எமது மக்களின் வாக்குகள் பதியப்பட்டால், நாம் உலக அரங்கிலே எமது தனித்துவத்தையும் எமக்கு நேர்ந்த கதியையும் தற்போது எமக்கெதிராக நடக்கும் நடவடிக்கைகளையும் கோடிட்டு சொல்லமுடியும். எமது பொது வேட்பாளரும் அவருடன் சேர்ந்தவர்களும் உலகநாடுகளிலே மற்றும் ஐக்கிய நாடுகளிலே தற்போதைய அவலங்கள் பற்றியும், தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்கள் எமக்கு செய்து வரும் அநியாயங்கள் பற்றியும் கூற முடியும்.

நான் 2018ல் புதிய கட்சியைத் தொடங்கிய பின்னர் பாராளுமன்ற உறுப்பினராக வர வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லை. 2020ல் எனக்கு 81 வயது ஆகியிருந்தது. எனினும் உலக நாடுகளில் உள்ள அரச அலுவலர்களிடம் இணையத் தொடர்புகள் மூலம் எமது நிலை பற்றிக் கூறி, எம் மக்களுக்கான சேவைகளைச் செய்து கொண்டு போக முடியும் என்று நினைத்திருந்தேன். அப்பொழுது எனது நண்பர்கள் ஒன்றைக் கூறினார்கள். நீங்கள் நீதியரசராக இருந்திருக்கலாம். முதலமைச்சராக இருந்திருக்கலாம். ஆனால் வெளிநாட்டு அரச அதிகாரிகளுடன் பேசும் போது இப்பொழுது நீங்கள் யார் என்று கேட்பார்கள். நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் என்று கூறும் போது மக்களின் பிரதிநிதி நீங்கள் என்ற ரீதியில் உங்கள் கூற்றுக்களுக்கு வலு இருக்கும் என்றார்கள். ஆகவே தான் நானும் தேர்தலில் போட்டியிட்டேன்.

அதேபோல்த்தான் திரு.அரியநேத்திரன் அவர்களுக்கு எமது மக்கள் வெகுவாக வாக்களித்தால் அந்த வாக்குகளுக்கு ஒரு மதிப்புண்டு மாண்புண்டு! அதை வைத்து அவரை தமிழ் மக்களின் ஒரு அடையாளமாகக் காட்டி எமக்கு நடந்து வரும் அநியாயங்கள் பற்றி நாடுகளுக்குக் கூறி இலங்கை அரசாங்கம் எமக்கு தொடர்ந்தும் இன்னல்களை விளைவிப்பதைத் தடுக்



கலாம். தற்போது வெளிநாடுகள் எமது அரசாங்கத்திற்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகளின் அறிக்கைகள் இலங்கையை சரிவர எடை போடுவதாகவே அமைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தமிழ் மக்கள் ஒருமித்து தமது ஒற்றுமையை, தேசியத்தை, ஒருங்கிணைந்த குறிக்கோள்களை இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளார்கள் என்ற செய்தி எமது அரசாங்கத்தை விழித்தெழச் செய்யும். அதனால்த்தான் எமது தமிழ் பொது வேட்பாளருக்கு நீங்கள் உங்கள் வாக்கினை அளிக்க வேண்டும் என்று தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது ஒற்றுமை ஒன்றே எம்மை இரட்சிக்கும். எமது ஒற்றுமையைச் சிதைக்கும் வகையில் படித்த முட்டாள்கள் சிலர் நடந்து வருகின்றார்கள். சிலர் சிங்கள வேட்பாளர்களுடன் கைகோர்க்க வேண்டும் என்கின்றார்கள். மற்றும் சிலர் தேர்தலைப் பகிஸ்கரிக்கக் கோருகின்றார்கள். சிங்கள வேட்பாளர்களுடன் கைகோர்ப்பது குறித்த அரசியல்வாதிகளுக்கு அமைச்சர் பதவிகளை வழங்க இடமளிக்கலாம். அதனால் தமிழ்ப் பேசும் மக்களுக்கு என்ன இலாபம்? நல்லாட்சி அரசாங்கத்தை ஆதரித்து இந்தா தீர்வு வருகின்றது. அந்தா தீர்வு வருகின்றது என்று திரு.சம்பந்தன் அவர்கள் நம்பிக்கையுடன் கூறிவந்தார். ஆனால் தீர்வு வந்ததா? அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் உத்தியோகபூர்வ வாஸஸ்தலமும் கிடைத்தன. தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. எனவே பெரும்பான்மையின வேட்பாளர்களை ஆதரிப்பது தமிழ்ப்பேசும் அரசியல் வாதிகளுக்கு தனிப்பட்ட நன்மைகளைத் தரும். ஆனால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காது.

பகிஸ்கரிப்பவர்கள் ஏன் நாம் பகிஸ்கரிக்க வேண்டும் என்ற கேள்வியைத் தம்மைத் தாமே கேட்க வேண்டும். புலிகள் முன்னர் பகிஸ்கரித்தார்கள் ஆகவே நாமும் பகிஸ்கரிக்க வேண்டும் என்று கூறுபவர்கள் சூழலையும் கால கட்டத்தையும் மறந்து பேசுகின்றார்கள். அன்று புலிகளுக்குப் பலம் இருந்தது. அன்று மலையக மக்களுக்கு அவர்களின் அரசியல் போராட்டங்களின் போது தொழிற்சங்க பலம் இருந்தது. இன்று இவர்களுக்கு என்ன பலம் இருக்கின்றது? இவர்கள் பகிஸ்கரித்தால் அது யாருக்கு நன்மை? எவருக்கும் இல்லை. யாருக்குப் பாதிப்பு? எவருக்கும் இல்லை. சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று தொடங்கிய இந்த பகிஸ்கரிப்பாளர்கள் இப்பொழுது தமிழ் வேட்பாளரையும் பகிஸ்கரியுங்கள் என்கின்றார்கள். ஏன் என்றால் திரு.அரியநேத்திரன் அவர்கள் சிங்கள வேட்பாளர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார் என்ற அப்பட்டமான பொய்யை அவிழ்த்துவிட்டுள்ளார்கள். திரு.அரியநேத்திரன் அவர்கள் தனது கட்சியுடன் முரண்டே பொது வேட்பாளராக நிற்கின்றார். அவர் தமது வருங்கால அரசியல் வாழ்க்கையைத் தியாகம் செய்தே பொது வேட்பாளராக நிற்கின்றார். இந்தத் தேர்தலில் அவருக்கு தனிப்பட்ட ரீதியில் எந்த நன்மையும் கிடையாது. அவர் தேர்தலில் வெல்லப் போவதும் இல்லை. அப்பேர்ப்பட்ட ஒருவரை இழிவாகப் பேசி சிங்கள வேட்பாளர்களுடன் கூட்டு என்று கூறி இந்த பகிஸ்கரிப்பாளர்கள் தங்களை தமிழ் மக்கள் மனதில் தாழ்த்தியே வருகின்றார்கள்.

அவர்களுக்கு பாடம் கற்பிக்கும் விதமாக நீங்கள் ஒவ்வொருவரும் இம் மாதம் 21ந் திகதியன்று காலையிலேயே நேரத்துடன் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம்!

## யாழ். பல்கலைக்கழக சமூகம் அறிக்கை

14.09, 2024

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள பா.அரியநேத்திரனின் சங்குச் சின்னத்திற்கு வாக்களிப்போம் என அறைகூவல் விடுத்துள்ளது யாழ். பல்கலைக்கழக சமூகம்.

யாழ். பல்கலைக்கழக சமூகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேரன்புமிக்க தமிழ் மக்களிற்கு வணக்கம்,

நூற்றாண்டுகள் கடந்த கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளிற்குள் (Structural Genocide) சிக்குண்டு இன விடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள் எங்களின் அரசியல் விடுதலைப் பயணத்தில் தவிர்க்க முடியாதவொரு தேர்தலாக எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சிறீலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் மாறியுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகமாக இம்மடலினை எங்கள் பேரன்புமிக்க தமிழ் மக்களை நோக்கி மாணவர்கள் நாங்கள் எழுதுகின்றோம்.

தமிழ் மக்கள் உதிரிகளாக்கப்படுதலும் கூட்டு மனவலு சிதைக்கப்படுதலும்

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் தமிழ் மக்கள் தேசமாகச் சிந்திப்பதிலிருந்தும், எழுச்சியடைவதிலிருந்தும் எங்களை விலகியிருக்கச் செய்வதில் சிங்கள - பௌத்த பேரினவாதம் ஏறக்குறைய வெற்றியடைந்திருக்கின்றது. சாதிகளாக, மதங்களாக, பிரதேசங்களாக தமிழ் மக்களையும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளையும் உதிரிகளாக்கி, எங்களின் கூட்டு மனவலுவைத் தகர்த்தெறிந்து உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனோநிலையினை எங்கள் மக்களிடையே விதைப்பதனை சிறீலங்கா அரசின் முகவர்களும் அவர்களது அமைப்புக்களும் கனகச்சிதமாகச் செய்து முடித்துள்ளன.

தமிழ் மக்களினது அரசியற் பலத்தினையும் எழுச்சியினையும் இல்லாதொழிப்பதற்காகச் சாணக்கியம், ராஜதந்திரம் என்று பெயரிட்டு தமிழ்த் தரப்புகளால் முன்னெடுக்கப்பட்ட வெற்றுக் காசோலை அரசியல் பயன்படுத்தப்பட்டது. அதன் விளைவே கடந்த 2010, 2015, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சிறீலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் தமிழ் இனப்படுகொலை பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் (Genocide) குற்றத்தைப் புரிந்த சிறீலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கு வாக்களித்தோம். பரிகார நீதியைக் கோர வேண்டிய நாம், எமது அரசியற் தலைமைகளினால் கண்மூடித்தனமாக வழிநடத்தப்பட்டோம்.

எம்மைச் சூழும் பொருளாதார நல்லிணக்க மாயைகள்!

சிறிலங்காவின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வங்குரோத்து நிலையைக் காரணங்காட்டி கவர்ச்சிகர வாக்குறுதிகளை முன்வைத்து வரும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்கள் நாட்டின் இந்நிலைக்குத் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளும், வலிந்து திணிக்கப்பட்ட போருமே அடிப்படைக் காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

அடிப்படையில் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு அரசியல் உறுதித் தன்மை அவசியமாக உள்ள நிலையில், தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள், ஒடுக்குமுறைகளை நிறுத்தும் சித்தம் ஏதுமின்றி, தமிழ் மக்களின் உரிமைக்கான குரல்களை இனிப்புத் தடவிய வார்த்தை ஜாலங்களினால் அறுத்தெறியும் பணிகளிலேயே நாட்டமும் மும்முரமும் காட்டுகின்றனர். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பையோ அல்லது பௌத்தத்திற்கு முதன்மை வழங்கும் அதன் கட்டமைப்பையோ இவர்கள் எவரும் கேள்விக்குள்ளாக்காமல் நல்லிணக்கம் பேசுவதென்பது அற்ப வாக்குகளிற்காகவேயன்றி வேறெதற்காக?

தமிழர் தேசமாய்த் திரள்வோம்!

தொடர்ந்தும் தமிழர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை எதிர்கொள்வதற்கேற்ற பலமானதொரு திரளாக அரசியல் மற்றும் கட்டமைப்பு ரீதியாகத் தமிழ் மக்கள் நாங்கள் எழ முடியாது உதிரிகளாக்கப்பட்டு, கூட்டு மனவலு சிதைக்கப்பட்டுள்ளது. இக்கையறு நிலையாவது கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து, சுதாகரித்து முன்னகர வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம்.

அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற ஒற்றையாட்சி, அரசியலமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தினுள் தமிழரின் அரசியலை சுருக்கியது என்பது சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி என்பதோடு, தமிழ் மக்களிற்கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளவல்ல திடசித்தமுள்ள தலைவர் ஒருவரையேனும் சிங்கள மக்கள் மத்தியில் காண முடியவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளில் பயணிப்போர்கள் அனைவரும் தமிழினத்தின் விடுதலைக்கு, மேன்மைக்கு உழைப்பவர்கள் என்று நம்பி ஏமாந்த எங்களுக்கு, புலித்தோல் போர்த்திய நரிகளின் ஊளையிடுதல்களையும் கூச்சல்களையும் உதறித்தள்ளி, தமிழர் தேசமாக, எங்கள் தலைவிதியை நாங்களே மாற்றி எழுதும் பெருவாய்ப்பு இனப்படுகொலை நிகழ்ந்து 15 ஆண்டுகளின் பின் கனிந்துள்ளது.

தமிழரை அணிதிரட்டி வெல்லட்டும் தமிழ்ப் பொதுவேட்பாளர் !

தமிழ் மக்களைத் தேசமாய் அணி திரட்டுவதற்கும், பன்னாட்டுச் சமூகங்களிற்கு விடுதலைக்கான எங்களின் கூட்டு வேட்கையினையும், கூட்டு மனோபலத்தினையும் வெளிப்படுத்துவதற்கும் எங்களிற்குள்ள ஒரேயொரு வாய்ப்பாகத் தமிழ்ப் பொதுவேட்பாளர் எண்ணக்கருவினை நாங்கள் பலப்படுத்த வேண்டும். இது ஒரு காத்திரமான வழிமுறை. இது எமது வரலாற்றுக் கடமை. தமிழ்ப் பொதுவேட்பாளர் சிறீலங்காவின் அரச தலைவர் இருக்கையை வெல்லப் போகின்றவரல்ல˙ மாறாக தமிழ் மக்களை அணிதிரட்டுவதில் வெல்லப் போகின்றவர்.

இனியாவது ஏமாற்றும் கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புக்களுக்கோ சென்று சேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களைத் தமிழ் மக்கள் கூட்டாக மேற்கொள்ள வேண்டும். தவறுவோமேயானால் நாங்கள் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

நாங்கள் மாறி மாறி சிங்கள ஆட்சியாளர்களுக்கு வாக்களிக்க வழிநடத்தப்பட்டோம். இதனால் தமிழ் மக்களின் நிலை, அரசியல், சமூக ரீதியில் பரிதாபகரமாய்ப் போனதேயன்றி வேறேதும் நிகழவில்லை. உரிமைகளுற்கான தமிழரின் அரசியல் இன்று சலுகைகளுக்காகத் துவண்டு போயுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள திரு.பா.அரியநேத்திரன் அவர்களுக்கு, அவரின் சங்குச் சின்னத்திற்கு வாக்களிப்போம். மாற்றுக் கருத்துக்கள்




இருப்பினும், கட்சி வேறுபாடுகள் கடந்து வடக்கு - கிழக்கு, மலையகம், இதர பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும், சங்கு சின்னத்திற்கு வாக்களித்து எங்கள் திரட்சியை, இத் தேர்தலில் வெளிப்படுத்துவோம் – என்றுள்ளது.






# கனடாவின் மத்திய வங்கி வட்டி வீதத்தை 4.25% ஆக குறைத்துள்ளது!

04.09, 2024




கனடாவின் மத்திய வங்கி வட்டி வீதங்களை குறைத்துள்ளது. இன்றைய நாள் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி வங்கி வட்டி வீதம் 4.25 வீதமாக பேணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்மைய நாட்களாக தனது மத்திய வங்கி வட்டி விகிதங்களை தொடர்ச்சியாக குறைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பொருட்களின் விலைகள் குறைவடைந்து வரும் நிலையில் இந்த வட்டி வீத குறைப்பு அறிவிக்கப்படுவதாக கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் நாட்டின் பொருளாதாரம் வேகமான வளர்ச்சியை பதிவு செய்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

குறிப்பாக இரண்டாம் காலாண்டு பகுதியில் இவ்வாறு வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் பணவீக்கம் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்தால் வட்டி வீதங்களை மேலும் குறைக்க முடியும் என மதிய வங்கி தெரிவித்துள்ளது.

கனடாவில் தற்பொழுது பணம் வீக்க வீதம் 2.5 வீதமாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# சாம்சங் நிறுவனத்தின் அடுப்புக்களை திரும்பப் பெறுவதாக அறிவிப்பு!

04.09, 2024




கனடாவில், சாம்சங் நிறுவனம் தனது தயாரிப்பான மின்சார அடுப்புகளை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான, Electric Range என அழைக்கப்படும் மின்சார அடுப்பு மற்றும் ஓவன் இணைந்த சாம்சங் நிறுவனத் தயாரிப்புகளை அந்நிறுவனம் திரும்பப் பெறுகிறது.

பக்கவாட்டில் அடுப்பைப் பற்றவைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மழெடிகள் மீது மனிதர்களோ செல்லப்பிராணிகளோ தெரியாமல் மோதினால் கூட, தீவிபத்து ஏற்படும் அபாயம் உள்ளதாக கனடா சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கனடா முழுவதும், இதுவரை, சாம்சங் நிறுவனத்தில் இந்த அடுப்பால் சுமார் 57 அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ளதாகவும், ஏழு பேர் காயமடைந்துள்ளதாகவும் கனடா சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் 250 தீவிபத்துக்கள் ஏற்பட்டு, பலர் காயமடைந்ததாக தகவல்கள் கிடைத்ததையடுத்து ஆகத்து மாதத்தில் சுமார் 1.12 மில்லியன் மின்சார அடுப்புகளை சாம்சங் நிறுவனம் திரும்பப் பெற்றது.

அந்த விபத்துக்களில், 18 விபத்துக்களால் வீடுகளுக்கு பலத்த சேதமும் ஏழு செல்லப்பிராணிகளுக்கு மரணமும் நேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

# ஒன்ராரியோவின் பள்ளிகளில் மாணவர்களின் கவனச் சிதறல்களை குறைக்க அரசு நடவடிக்கை!

04.09, 2024




ஒன்ராரியோவிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கவனச்சிதறல்களற்ற, தமது கற்கையில் கவனம் செலுத்துவதற்கு ஏதுவான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கான தீர்க்கமான முடிவை எடுத்துள்ள ஒன்ராரியோ அரசு, அதற்கென 47.5 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. செப்டெம்பர் 1, 2024 முதல் மாநிலம் முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ள இந்நடவடிக்கையானது மாணவர்களின் கற்கையில் செல்லிடப் பேசிகள், சமூக ஊடகங்கள் மற்றும் புகைத்தல் போன்றவை ஏற்படுத்தும் எதிர்மறை மாற்றங்களைக் கட்டுப்படுத்தும். இது தொடர்பாக அமைச்சர் விஜய் தணிகாசலம் கருத்துத் தெரிவிக்கையில், "மாணவர்களின் கல்விக்கும் அவர்களின் உடல் நலத்துக்கும் நாம் எப்பொழுதும் முன்னுரிமை கொடுப்பதற்கு உறுதிபூண்டுள்ளோம்" எனத் தெரிவித்தார். செல்பேசிக்கான கட்டுப்பாடுகள், பள்ளியில் மின்புகைப்பிடித்தல் கருவிகளைப் பயன்படுத்தலுக்கான தடை போன்றவற்றுடன் மாணவர்களுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் என்பன அவர்களைத் தடையற்ற விதத்தில் தமது கல்வியாண்டை வெற்றி

# தமிழ் இனப்படுகொலை கல்விவாரச்சட்டம் கனடாவின் அரசியலமைப்புக்குட்பட்டது என கனடா நீதிமன்றம் தீர்ப்பு!

05.09,, 2024



கனடாவின் மேல்முறையீட்டு நீதிமன்றம் தமிழ் இனப்படுகொலை கல்வி வாரச்சட்டத்திற்கு எதிராக இலங்கையை சேர்ந்த குழுக்கள் தாக்கல் செய்த மனுவை நிராகரித்துள்ளதுடன் இனப்படுகொலை கல்வி வாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்குட்பட்டது என தெரிவித்துள்ளது.

கனடா நீதிமன்றம் இனப்படுகொலை கல்விவாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்கு உட்பட்ட விடயம் என தெரிவித்ததை தொடர்ந்து இலங்கை கனடா செயற்பாட்டு கூட்டமைப்பு என்ற அமைப்பு இதற்கு எதிராக மேல்முறையீடு செய்திருந்த நிலையிலேயே மேல்முறையீட்டு நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

கனடா அரசாங்கம் தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்படுகின்றது, கருத்துசுதந்திரம் சமத்துவ உரிமைகளை மீறுவதாக தெரிவித்திருந்த இலங்கை அமைப்பு தமிழ் இனப்படுகொலை குறித்த மாற்றுக்கருத்துக்களை முடக்குவதற்காக இந்த சட்டம் பயன்படுத்தப்படும் என தெரிவித்திருந்தது.

எனினும் அந்த அமைப்பின் வேண்டுகோளை நிராகரித்துள்ள ஒன்ராரியோ மேல்முறையீட்டு நீதிமன்றம் இனப்படுகொலை கல்விவாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்குட்பட்டது அது பாரபட்சமான தாக்கங்களை ஏற்படுத்தாது என தெரிவித்துள்ளது.

இந்த சட்டம் சிங்களபௌத்தர்களிற்கு எதிரான வெளிப்படையான இனவேறுபாட்டை கொண்டுள்ளது என திருஹேவகே சமர்ப்பித்துள்ளதை நாங்கள் நிராகரிக்கின்றோம், என கனடாவின் மேல்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தின் முன்னுரையில் இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலை கொள்கைகள் என குற்றம்சாட்டப்படும் கொள்கைகள் சிங்கள பௌத்த மையப்படுத்தப்பட்டவை என்றே குறிப்பிடப்படுவதாகவும், சிங்கள பௌத்தர்கள் ஒரு இனக்குழுவாக அதற்கு பொறுப்பாளிகள் என தெரிவிக்கவில்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

www.sangathamil.ca

# ஒன்ராரியோ மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைக்கான சட்டமூலம் – 104ஐ உறுதிப்படுத்தியது!

## விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர்

05.09, 2024

இன்று, செப்டம்பர் 5, 2024 அன்று, ஒன்ராரியோவுக்கான மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைக்கான சட்டமூலம் - 104ஐ உறுதிப்படுத்தியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழின அழிப்பு நடைபெற்றதென்பதை மறுப்பவர்களால் மேன்முறையீடு செய்யப்பட்டு முன்வைக்கப் பட்ட அரசியலமைப்புக்கான சவால் நிராகரிக்கப்பட்டதோடு, இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்புக் குறித்து ஒன்ராரியோவில் வாழ்வோர் தொடர்ந்தும் கல்வி கற்கவும் அதனைப் பற்றிக் கற்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



இச்சட்டமூலம் 104 ஐப் பாதுகாக்க அயராது உழைத்த அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும், சமூக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தமிழ் இளையோர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒன்ராறியோவில் மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் சட்டமூலம் 104 நிறைவேற்றப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும் என்றால் அது மிகையாகாது.

இவ்வண்ணம்,

விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர்
ஸ்காபரோ – றூஜ் பார்க்.





VIJAY THANIGASALAM, MPP
Scarborough—Rouge Park

ஒன்றாறியோ மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைக்கான சட்டமூலம் - 104ஐ உறுதிப்படுத்தியது

இன்று, செப்டம்பர் 5, 2024 அன்று, ஒன்றாறியோவுக்கான மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைக்கான சட்டமூலம் - 104ஐ உறுதிப்படுத்தியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழின அழிப்பு நடைபெற்றதென்பதை மறுப்பவர்களால் மேன்முறையீடு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புக்கான சவால் நிராகரிக்கப்பட்டதோடு, இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்புக் குறித்து ஒன்றாறியோவில் வாழ்வோர் தொடர்ந்தும் கல்வி கற்கவும் அதனைப் பற்றிக் கற்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டமூலம் 104 ஐப் பாதுகாக்க அயராது உழைத்த அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும், சமூக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தமிழ் இளையோர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒன்றாறியோவில் மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் சட்டமூலம் 104 நிறைவேற்றப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும் என்றால் அது மிகையாகாது.

இவ்வண்ணம்,

T. Vijayasiluthayan

விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர்
ஸ்காபரோ - றூஜ் பார்க்.

# எயார் கனடா பயணிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்!

09.09, 2024

கனடாவின் முதல்நிலை விமான சேவை நிறுவனமான எயார் கனடா விமான சேவை தனது பயணிகளுக்கு விசேட அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

எயார் கனடா விமான சேவையை பயன்படுத்து பயன்படுத்தும் பயணிகள் முன்கூட்டியே விமான நிலையங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வழமையை விடவும் முன்கூட்டியே விமான நிலையங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விமானபம் புறப்படுவதற்கு முன்னதாக விமான நிலையத்திற்கு செல்லக்கூடிய ஆக குறைந்த நேரம் 60 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 45 நிமிடங்களுக்குள் பயணிகள் விமான நிலையத்திற்கு வருகை தர வேண்டும் என்ற அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

தற்பொழுது இந்த அறிவிப்பு மேலும் பதினைந்து நிமிடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வழமையை விடவும் பயணிகள் முன்கூட்டியே விமான நிலையத்திற்கு செல்ல வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயணப் பொதிகளையும் பயணிகளின் ஆவணங்களையும் சரிபார்த்து சுமூகமான முறையில் பயணங்களை முன்னெடுப்பதற்காக இவ்வாறு முன்கூட்டியே பயணிகள் விமான நிலையத்திற்கு செல்வது அவசியமானது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் செக்இன் செய்துகொள்ள விரும்பும் பயணிகள் இவ்வாறு முன்கூட்டியே விமான நிலையத்திற்கு செல்ல வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விமான பயணம் செய்யும் நேரத்திற்கு நான்கு மணித்தியாலத்திற்கு முன்னதாகவே பயண பொதிகளை ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



இதேவேளை, எயார் கனடா விமான சேவையின் விமானிகள் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கனடாவில் கல்கரி புயல் காற்று தேசம் 2.8 பில்லியன் டொலர் நட்டயீட்டுக் கோரிக்கை!

12.09, 2024

கல்கரியில் புயல் காற்று காரணமாக 2.8 பில்லியன் டொலர் நட்டயீட்டுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கல்கரியில் கடந்த ஆகஸ்ட் மாதம் ஏற்பட்ட புயல் காற்று காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்காக இவ்வாறு 2.8 பில்லியன் டொலர்கள் நட்டஈடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கனடிய வரலாற்றில் பதிவான இரண்டாவது மிகப் பெரிய இயற்கை அனர்த்தம் இது என தெரிவிக்கப்படுகிறது.

கனடிய காப்புறுதி நிறுவனம் இது தொடர்பிலான தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி புயல் காற்று, மழை வெள்ளம், கடும் மழை என்பவற்றினால் கல்கரி நகரம் பாதிக்கப்பட்டது.







இதனால் பெரும் எண்ணிக்கையிலான வீடுகள் சேதமடைந்திருந்தன. சுமார் 20 வீதமான வீடுகள் சேதமடைந்து இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மொத்தமாக புயல் காற்று சீற்றத்தினால் சேதங்களை எதிர்நோக்கிய 130000 பேர் காப்புறுதி இழப்பீடுகளுக்காக விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் மொத்தமாக 2.8 பில்லியன் டொலர் நட்டஈட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# தமிழக செய்திகள்



## தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் கல்வி சாராத நிகழ்ச்சி நடத்த கூடாது: பள்ளிக்கல்வி துறை உத்தரவு!

07.09, 2024

சென்னையில் உள்ள 2 அரசுப் பள்ளிகளில் நடத்தப்பட்ட சொற்பொழிவு நிகழ்ச்சி சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பள்ளிகளில் கல்விக்கு தொடர்பு இல்லாத எந்த நிகழ்ச்சிகளையும் அனுமதி இன்றி நடத்த கூடாது என பள்ளிக்கல்வி துறை உத்தரவிட்டுள்ளது.

சென்னை அசோக் நகர் மற்றும் சைதாப்பேட்டையில் உள்ள அரசுப்பள்ளிகளில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கடந்த ஆகஸ்ட்28-ம் தேதி சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. இதில், கலந்துகொண்ட மகாவிஷ்ணு என்ற தன்னம்பிக்கை பேச்சாளர், பாவ - புண்ணிய பலன்கள், குருகுலக் கல்வி முறை ஆகியவை மட்டுமின்றி, மாற்றுத் திறனாளியாக பிறக்க முன்ஜென்ம பாவங்களே காரணம் என்றும் பேசியுள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சங்கர் என்றமாற்றுத் திறன் ஆசிரியருடன் மகாவிஷ்ணு வாக்குவாதமும் செய்துள்ளார்.

இந்த வீடியோ காட்சிகள், வலைதளங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. மாணவர்களை தவறாக வழிநடத்துவதா என கேள்வி எழுப்பி, அசோக் நகர் பள்ளி முன்பு, பல்வேறு மாணவர் அமைப்பினர் நேற்று காலை ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த சூழலில், பள்ளிக்கல்வி துறை சார்பில் அசோக் நகர் அரசுப் பள்ளியில் ‘கல்வியே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்’ என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடத்தப்பட்டது. பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் மற்றும் துறை உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்றனர். சர்ச்சை பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்த மாற்றுத் திறன் ஆசிரியர் சங்கருக்கு இக்கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் அன்பில் மகேஸ் கூறியபோது, “இந்த விவகாரம் தொடர்பாகபள்ளிக்கல்வி துறை இயக்குநர் தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மீதுதுறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். சொற்பொழிவாளர் மகாவிஷ்ணு மீது காவல் துறையில் புகார் அளிக்கப்படும். என்னுடன் அவர் புகைப்படம் எடுத்துக் கொண்டதால் அவரை பேச அனுமதித்ததாக கூறுவது தவறான செய்தி” என்றார்.

நிகழ்ச்சிக்கு பிறகு, 2 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடமும் பள்ளிக்கல்வி துறை இயக்குநர் கண்ணப்பன் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தினர். இதைத் தொடர்ந்து, அசோக் நகர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை ஆர்.தமிழரசி, திருவள்ளூர் பென்னலூர்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்கும், சைதாப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் கே.சண்முகசுந்தரம், செங்கல்பட்டுஅணைக்கட்டு அரசு மேல்நிலைப் பள்ளிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அசோக் நகர் பள்ளி ஆசிரியர்கள் நேற்று மதியம்வகுப்பை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், முதல்வர் ஸ்டாலின்தனது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளதாவது: மாணவர்கள் அறிந்துகொள்ள தேவையான சிறந்த அறிவியல் சிந்தனைகள் நமது பாடநூல்களில் உள்ளன. எதிர்கால சவால்களை, தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளவும், அறிவாற்றலை கூர்மைப்படுத்திக் கொள்ளவும் தேவையான கருத்துகளை ஆசிரியர்களே எடுத்துக் கூறமுடியும். அதற்கு தேவையான புத்தாக்க பயிற்சியை துறைசார் வல்லுநர்களை கொண்டு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதவிர, பள்ளிகளில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளை வரைமுறை செய்வதற்கு, புதிய வழிகாட்டுதல்களை வகுத்து வெளியிட உத்தரவிடப்பட்டுள்ளது. தனிமனித முன்னேற்றம், அறநெறி சார்ந்து வாழ்தல், சமூகமேம்பாட்டுக்கான சீரிய கருத்துகள்தான் மாணவர்களின் நெஞ்சங்களில் விதைக்கப்பட வேண்டும். அறிவியலே முன்னேற்றத்துக்கான வழி. இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் அனைத்துமாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுடனும் காணொலியில் உடனடியாக ஆலோ சனை நடத்தினார். “பள்ளிகளில் நடத்தப்படும் நிகழ்ச் சிகளில் பங்கேற்கும் சொற்பொழிவாளர்கள் கல்வி சார்ந்து இயங்குபவர்களாக இருக்க வேண்டும். துறை அனுமதியின்றி தன்னார்வ




அமைப்புகள், தனியார் நிறுவனங்களின் பயிற்சி முகாம், சொற்பொழிவு போன்ற நிகழ்ச்சிகளை நடத்த கூடாது. சுற்றறிக்கைகூட சரியாக தயாரிக்க தெரியாத சிலரால் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. எனவே, அனைவரும் கவனத்துடன் செயல்பட வேண்டும்” என்று இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை 3 நாட்களில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. பள்ளிகளில் கல்விக்கு தொடர்பு இல்லாத எந்த நிகழ்ச்சிகளையும் முறையான அனுமதி இன்றி நடத்த கூடாது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பள்ளிக்கல்வி துறை செயலர் மதுமதியும் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே, தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள், பாதுகாப்போர் உரிமைகளுக் கான சங்கம் சார்பில் சென்னை சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் சொற்பொழிவாளர் மகாவிஷ்ணு மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது. ‘பரம் பொருள்/பவுண்டேஷனை சேர்ந்த மகாவிஷ்ணு என்பவர் சென்னை சைதாப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் கடந்த 28-ம் தேதி நிகழ்த்திய சொற்பொழிவின்போது, மாற்றுத் திறனாளிகளை இழிவுபடுத்தும் வகையில்பேசியுள்ளார். எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான வன்கொடுமை சட்டப்படியும், ஊனமுற்றோர் உரிமைகள் சட்டப்படியும் மகாவிஷ்ணுவை கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்’ என்று அந்த புகாரில் கூறப்பட்டுள்ளது.

## சிறீலங்காவில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு உண்ணாநிலைப் போராட்டம்!

09.09, 2024

சிறீலங்கா கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட மீனவர்களை மீட்க வலியுறுத்தி தருவைகுளத்தில் இன்று மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பில் கடையடைப்பு மற்றும் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தில் இருந்து கடந்த மாதம் 2 விசைப்படகுகளில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் 22 பேரை சிறீலங்கா சிங்கள கடற்படையினர், இலங்கை எல்லைக்குள் நுழைந்தாக கூறி கைது செய்தனர். தொடர்ந்து கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் கல்பிட்டி மீன்வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். விசாரணைக்கு பின்னர் 22 மீனவர்களும் புத்தளம் மாவட்டம் கல்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதுதொடர்ந்து அங்குள்ள நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்தது.

இந்த வழக்கு கடந்த 3 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி அயோனா விமலரத்ன, தருவைகுளத்தை மிக்கேல் ராஜா படகில் இருந்த 12 மீனவர்களுக்கும் தலா ரூ.42 லட்சம் (இலங்கை பணம் ரூ.1.5 கோடி) அபராதம் செலுத்தவும், செலுத்த தவறினால் 6 மாதம் சிறை



தண்டனையும் விதித்து தீர்ப்பு கூறினார்.

மற்றொரு படகான தேன் டெனிலா என்பவர் விசைப்படகில் இருந்த 10 பேர் மீதான வழக்கு விசாரணையின் போது, படகு உரிமையாளரையும் சேர்க்க வேண்டும் என்று இலங்கை மீன் வளத்துறை கூறி உள்ளது. அதற்கு இந்திய துாதரகம் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து 10 பேர் மீதான வழக்கு செப்.10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.



இந்நிலையில், சிறீலங்கா கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட 2 விசைப் படகுகளையும், 22 மீனவர்களையும், அங்குள்ள நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அபராதத்தை ரத்து செய்து மீட்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி இன்று தருவைகுளத்தில் பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் சார்பில் கடையடைப்பு மற்றும் உண்ணாவிரத போராட்டம் நடந்தது. பேருந்து நிறுத்தம் அருகே நடந்த போராட்டத்தில் வணிகர்கள், பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். இதனால் மீனவ கிராமமே வெறிச்சோடி காணப்பட்டது.

அதனை தொடர்ந்து ஜீப் வண்டியில் ஏற்றப்பட்ட 7 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, பின்னர் இறக்கிவிடப்பட்டனர்.

அதேவேளை அங்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# தமிழ்நாட்டு மீனவர்களின் படகை மோதி கவிழ்த்ததாக சிறீலங்கா கடற்படை மீது குற்றச்சாட்டு!

11.09, 2024

தமிழ்நாட்டு மீனவர்களின் படகு மீது சிறீலங்கா கடற்படையினர் தங்களின் கப்பலை விட்டு மோதி படகை கவிழ்த்ததாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நாகை மாவட்டம் செருதூர் மீனவ கிராமத்தைச் சேர்ந்த தர்மன் என்பவருக்குச் சொந்தமான ஃபைபர் படகில் கடந்த 9-ம் தேதியன்று அதே பகுதியைச் சேர்ந்த சக்திவேல், தேவராஜ், கார்த்திகேயன், சதீஷ் ஆகிய 4 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இந்த நிலையில், நேற்று மாலை அவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த சிறீலங்கா கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களின் படகின் மீது கடற்படை கப்பலைக் கொண்டு மோதியதாக கூறப்படுகிறது.

கப்பல் மோதியதில் தமிழ்நாட்டு மீனவர்களின் ஃபைபர் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் கடலில் காயங்களுடன் வலைகளில் சிக்கி மீனவர்கள் தத்தளித்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து மீனவர்களை தங்களது கப்பலில் ஏற்றிய சிறீலங்கா கடற்படையினர், அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை எதுவும் செய்யாமல் சுமார் 6 மணி நேரமாக அவர்களை மிரட்டி விசாரணை நடத்தியுள்ளனர்.

அப்போது, தங்கள் எல்லைக்குள் தான் மீன்பிடித்தோம் என தமிழ்நாட்டு மீனவர்கள் சிறீலங்கா கடற்படை அதிகாரிகளிடம் கெஞ்சியதாக கூறப்படுகிறது. அதன் பின்னர் அங்கு வந்த சக தமிழநாட்டு மீனவர்களிடம் செருதூர் மீனவர்களை ஒப்படைத்த சிறீலங்கா கடற்படை அதிகாரிகள், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். அதன் பின்னர் சக மீனவர்களின் உதவியோடு நடுக்கடலில் கவிழ்ந்த தங்களது படகை மீட்ட நாகை மீனவர்கள் காயங்களுடன் இன்று (புதன்கிழமை) காலை கரை திரும்பியுள்ளனர்.

சிறீலங்கா கடற்படை அதிகாரிகள் கப்பலை கொண்டு மோதியதில், படகில் இருந்த வலை, ஜிபிஎஸ் கருவி, செல்போன், மீன்பிடி தளவாட பொருட்கள் என ரூ.6.50 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் கடலில் விழுந்து மூழ்கியதாக மீனவர்கள்



வேதனை தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, செருதூர் மீன் இறங்குதளம் வந்து சேர்ந்த காயமடைந்த மீனவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக ஒரத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவையின் தலைவர் பெருமதிப்பிற்குரிய ஐயா த. வெள்ளையன் அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்திய செய்தியறிந்து பெருந்துயருற்றேன்!

## நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான்

11.09, 2024

வணிகப் பெருமக்களின் உரிமைகளுக்காகவும், வாழ்வாதார சிக்கல்களுக்காகவும் மட்டுமின்றி தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும், தமிழர் நலன் சார்ந்த சிக்கல்களுக்காகவும் வணிகர்களை ஒன்றுதிரட்டி போராடிய பெருந்தகை ஐயா வெள்ளையன் அவர்கள்.








தழல் ஈகி வீரத்தமிழ்மகன் அன்புத்தம்பி முத்துக்குமார் இறுதி நிகழ்வு, மூவர் தூக்குத் தண்டனை எதிர்ப்பு, காவிரி நதிநீர் உரிமை, வெளிநாட்டு குளிர்பானங்களுக்கு எதிர்ப்பு, இணைய வழி சில்லறை வணிகத்திற்கு எதிர்ப்பு, அன்னிய நேரடி முதலீட்டுக்கு எதிர்ப்பு, மீத்தேன், ஹைட்ரோ கார்பன், நியுட்ரினோ, கூடங்குளம் அணுவுலை மற்றும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர ஆலை போன்ற மக்கள் விரோதத் திட்டங்களுக்கு எதிர்ப்பு என மண்ணுக்கும், மக்களுக்குமான எண்ணற்ற போராட்டங்களில் நேரடியாகப் பங்கேற்றவர் ஐயா வெள்ளையன் அவர்கள்.

தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை மூலம் அனைத்துத்தரப்பு வணிகர்களையும் ஒருங்கிணைத்து, சிறப்பாக வழிநடத்திய ஐயா வெள்ளையன் அவர்களது மறைவு வணிகப் பெருமக்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்குமான பேரிழப்பாகும்.

ஐயா வெள்ளையன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மற்றும் வணிகப் பெருமக்களுக்கும் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்து, துயரில் பங்கெடுக்கிறேன்.

பெருமதிப்பிற்குரிய ஐயா த.வெள்ளையன் அவர்களுக்கு என்



னுடைய கண்ணீர் வணக்கம்!

# பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்!

## திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா. செ. மணி!

11.09, 2024

தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க வேண்டும் என்பதை ஓர் அறைகூவலாக விடுக்கின்றேன் என திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி அறிக்கை ஒன்றை வெளியிட்டு தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் வருகிற செப்டமர் 21ஆம் நாள் நடக்கவுள்ள குடியரசு தலைவருக்கான தேர்தலில் தமிழீழ மக்களின் விடுதலை, நீதிக்கான கோரிக்கைகளின் குறியீடாக பொது வேட்பாளர் ஒருவரைப் போட்டியிடுகின்றார்.

இதன் மூலம் உலகத்திற்கு தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பையும் விருப்பையும் அறிவிப்பது என்ற நோக்கில் அங்குள்ள விடுதலை ஆற்றல்கள் முன்முயற்சி எடுத்துள்ளன.

இதன் பொருட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரிய நேத்திரன் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க வேண்டும் என்பதை ஓர் அறைகூவலாக விடுக்கின்றேன்.

இம்முயற்சிக்கு நமது ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கில் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் இன்று காலை 11 மணி அளவில் ஊடகச் சந்திப்புக்கு ஒழுங்கு



செய்துள்ளோம் என்றார்.

# உலக செய்திகள்

## ஜேர்மனியில் "மானிட உரிமைக்குரல்" விராஜ் மெண்டிஸ் அவர்களின் புகழுடலுக்கு தமிழீழ தேசியக் கொடி போர்த்தி மதிப்பளிப்பு!

01.09, 2024



தமிழின விடிவிற்காக நீண்டகாலமாகப் பாடுபட்டுவந்த அனைத்துலக மனித உரிமைகளின் அமைப்பின் தலைமை இயக்குனராகிய "மானிட உரிமைக்குரல்" விராஜ் மெண்டிஸ் அவர்களின் வணக்கநிகழ்வு 31.08.2024 சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் இடம்பெற்றது.

நந்திக்கடல் மண் அவரது பேழையில் வைக்கப்பட்டு அவரது புகழுடலுக்கு தமிழீழ தேசியக்கொடி போர்த்தப்பட்டு மதிப்பளிப்பு செய்யப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்துலகத்தொடர்பகம் அமரர் விராஜ் மெண்டிஸ் அவர்களுக்கு "மானிட உரிமைக் குரல்" என மதிப்பளிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்தும் உணர்வாளர்கள்



பலரும் கலந்து கொண்டு இறுதி வணக்கம் செலுத்தி இருந்தனர்.

## 'அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு அவசியம்' பல வருடங்களாக வலியுறுத்துகிறோம்!

### பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பெட்ரிக்

03.09, 2024

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வருகின்ற புதிய அரசாங்கத்துடன் அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வு தொடர்பாக இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம் என்று இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பெட்ரிக் தெரிவித்தார்.

பிரித்தானியா பல வருடங்களாக அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய அரசியல்தீர்வு தொடர்பாக வலியுறுத்தி வருகிறது என்றும் சுட்டிக்காட்டிய பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பிரதான வேட்பாளர்கள் இந்த விடயம் தொடர்பில் தமது கொள்கைகளை வெளியிட்டுள்ளமையையும் எடுத்துக் கூறினார்.

பாத்பைன்டர் நிறுவனம் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்ற பிரித்தானிய உயர்ஸ்தானிகர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டினார்.

பிரித்தானியாவின் புதிய அரசாங்கத்தின் வெளியுறவு அணுகுமுறை, தெற்காசியாவில் பிரித்தானியாவின் பிரசன்னம், பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவு உள்ளிட்ட பல்வேறு தொடர்பான விடயங்கள் அவர் கருத்துக்களை முன்வைத்தார்.

"பிரித்தானியாவுக்கு தெற்காசிய பிராந்தியம் முக்கியத்துவமிக்கது. எதிர்காலம் இங்கு முக்கியத்துவமிக்கதாக உள்ளது. இலங்கையின் இரண்டாவது ஏற்றுமதி வர்த்தக பங்காளராக தொடர்ந்தும் இருந்து வருகிறது" என்று உயர்ஸ்தானிகர் அன்றூ பெட்ரிக் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையிலும் இலங்கையில் இரண்டாவது இடத்தை பிரித்தானிய சுற்றுலாப் பயணிகள் பெறுவதாகவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

மேலும் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்காததன் காரணமாக இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவும் நோக்கில், "அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தக திட்டம்" என்ற செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பெட்ரிக் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான உறவு முக்கியத்துவமிக்கது. பிரித்தானியா தொடர்ந்தும் இலங்கையிலிருந்து அதிக இறக்குமதிகளை செய்கிறது. இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்தில் பிரித்தானியா இரண்டாவது இடத்தைப் பிடிக்கிறது. சுற்றுலாத்துறை இலங்கையில் மிக முக்கியமான ஆற்றலை கொண்டிருக்கிறது. அதிலும் பிரித்தானிய இலங்கைக்கு சிறந்த பங்களிப்பை வழங்குகிறது.

சட்டவிரோத குடியேற்றவாசிகளை ருவாண்டாவுக்கு அனுப்புகின்ற திட்டம் புதிய பிரித்தானிய அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு நாட்டுக்கும் இது தொடர்பான பிரச்சினை சவாலாகவே இருக்கும். அதிகமான மக்கள் 20ஆயிரம் டொலர்களுக்கும் அதிக பணத்தை கடத்தல் காரர்களுக்கு கொடுத்து பிரித்தானியாவுக்கு வர முயற்சிக்கின்றனர்.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் புதிய அமர்வு நடைபெறவுள்ளது. இதில் இணை அனுசரணை நாடுகள் குழு எவ்வாறான முடிவை எடுத்துள்ளது என்று தற்போது கூற முடியாது. ஆனால், இப்போது இலங்கையில் தேர்தல் காலம் என்பதால் தேர்தலின் பின்னர் இந்த விடயத்தில் செயற்படுவதற்கு புதிய கதவுகள் திறக்கப்படும் என்று நம்புகின்றோம் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை கொண்டு வரப்படுமா என்ற எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த உயர்ஸ்தானிகர் அதற்கு அமர்வு தொடங்கும் வரை காத்திருக்க வேண்டியது அவசியம் என்று



பதிலளித்தார்.

இது இவ்வாறிருக்க அரசியல் தீர்வு தொடர்பில் வடக்கு, கிழக்கு மக்கள் மற்றும் தலைவர்கள் எவ்வாறான விடயங்களை உங்களிடம் தெரிவித்தார்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த உயர்ஸ்தானிகர், இந்த விடயம் தொடர்பில் நான் மிகக் கவனமாக பேச வேண்டியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வருகின்ற புதிய அரசாங்கத்துடன் அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வு தொடர்பாக இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம்.

பிரித்தானியா பல வருடங்களாக அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய அரசியல்தீர்வு தொடர்பாக வலியுறுத்தி வருகிறது. பிரதான வேட்பாளர்கள் இந்த விடயம் தொடர்பில் தமது கொள்கைகளை வெளியிட்டுள்ளனர் என்றார்.

www.sangathamil.ca

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# காசாவில் 22 இலட்சம் பாலஸ்தீனர்களுக்கு 'அவசர உதவி' தேவை!

## உலக உணவுத்திட்ட அமைப்பு

09.09, 2024

காசாவில் உள்ள 22 இலட்சம் பாலஸ்தீனர்களுக்கு 'அவசர' உணவு மற்றும் வாழ்வாதார உதவி தேவைப்படுகிறது என உலக உணவுத் திட்ட (WFP- The World Food Programme) அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் 10-ஆம் திகதி தொடங்கிய காசா மீதான இசுரவேலின் போரில் 40,972 பேர் கொல்லப் பட்டுள்ளனர். 94,761 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,139 ஆகும், அதேசமயம் 200-க்கும் அதிக மானோர் சிறைபிடிக்கப்பட்டனர். 11 மாதங்களாக போர் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இசுரவேலின் தாக்குதலால் காசாவில் அதிகப்படியான பள்ளிகள், வீடுகள் சேதமடைந்துள்ளன. குறிப்பாக, கல்வித் துறையில் பணிபுரியும் 750-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கொல்லப் பட்டுள்ளனர் மற்றும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந் துள்ளனர் என்று பாலஸ்தீன கல்வி அமைச்சகம் தெரிவித் துள்ளது.

இந்நிலையில், காசாவில் உள்ள 6,30,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்று பள்ளிக்கு திரும்ப மாட்டார்கள் என்று அதிகாரிகள் கூறியிருந்தனர்.

கடந்த மாதத்தில் 16 பள்ளிக் கட்டிடங்களை இசுரவேலியப் படைகள் குறிவைத்து தாக்கியதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், குழந்தைகள் படிக்க ஆர்வமாக உள்ளதாக கூறப் படுகிறது.

காசாவின் மீதான இசுரவேலின் தாக்குதல் முடிவில்லாமல் சென்று கொண்டிருக்கும் நிலையில், காசாவில் உள்ள 22 இலட்சம் பாலஸ்தீனர்களுக்கு இன்னும் 'அவசர' உணவு மற்றும் வாழ்வாதார உதவி தேவைப்படுகிறது என்று உலக உணவுத் திட்டம் (WFP-The World Food Programme) அமைப்பு தெரிவித்துள்ளது.

அதோடு போர் நிறுத்தமும் தேவைப்படுகிறது என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின்



தலைவர் வோல்கர் டர்க் கூறும்போது, “ஒவ்வொரு நாளும் பாலஸ்தீனர்கள் உயிர்வாழ போராடுகிறார்கள், கிட்டத்தட்ட 19 இலட்சம் மக்கள் பலமுறை பலவந்தமாக வெளியேற்றப் பட்டனர். இந்த மோதலை விரைவில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்” என்றார்.

# இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் தொடர்கின்றன...!

## வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா நடவடிக்கைக்குழு

11.09, 2024

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்புக் குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையைக் கண்டறியும் நோக்கில் தொடர்ச்சியாகப் போராடிவரும் உற வினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகப் பல்வேறு வழிமுறைகளில் ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவது குறித் துத் தாம் கரிசனையை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அவ் வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா நடவடிக் கைக்குழு விசனம் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்ப மானது. இக்கூட்டத்தொடரில் வலிந்து காணாமலாக்கப்பட் டவர்கள்தொடர்பான ஐ.நா நடவடிக்கைக்குழு அதன் 48 பக்க அறிக் கையை சமர்ப்பித்திருக்கின்றது.

இவ்வறிக்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் 2023 மே மாதம் - 2024 மே மாதம் வரையான காலப் பகுதியில் செயற்பாட்டுக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட நட வடிக்கைகள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள மற்றும் தேர் தல்கள், காணி, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாது காப்பு போன்றவற்றின் பின்னணியில் வலிந்து காணாம லாக்கப்பட்டவர்கள், அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன்படி இலங்கையைப் பொறுத்தமட்டில் வலிந்து காணாம லாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையைக் கண்டறியும் நோக்கில் தொடர்ச்சியாகப் போராடிவரும் உறவினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகப் பல்வேறு வழிமுறைகளில் ஒடுக்குமுறைகள் பிர யோகிக்கப்படுவது குறித்துத் தாம் ஏற்கனவே கரிசனையை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அத்தகைய ஒடுக்குமுறைச் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் தொடர்ந்து கிடைக்கப் பெறுவ தாக ஐ.நா நடவடிக்கைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோன்று இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் பதிவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் குறித்து தாம் தொடர்ச்சியாகப் பதிவுசெய்துவருவதாகவும் அக்குழு அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலு வலகத்தினால் 'இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாம லாக்கப்படல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல்' எனும் தலைப் பில் வெளியிடப்பட்ட அறிக்கையை வரவேற்கும் அதேவேளை, அதில் உள்ளடக்கப்பட்டிருந்த முடிவுரை மற்றும் பரிந் துரைகளை குறித்து இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத் தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்களின் பின் னரும் கூட, இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக் கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யப்



படவில்லை எனவும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதாகவும் உயர்ஸ்தானிகர் அலுவலக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது' என்று ஐ.நா நடவடிக்கைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டுவரும் விசாரணைப்பொறிமுறை, அதுகுறித்து பாதிக்கப் பட்ட தரப்பினரின் நிலைப்பாடு உள்ளிட்ட விடயங்களும் சுருக்க மாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா நடவடிக்கைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# யுத்த குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையர்களிற்கு எதிரான தடைகள் விதிக்கப்படுமா?

## பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய, அபிவிருத்தி இராஜங்க அமைச்சர்

12.09, 2024

யுத்த குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையர்களிற்கு எதிராக தடைகள் விதிக்கப்படுமா என்பது குறித்து பிரித்தானியா கருத்து தெரிவித்துள்ளது.

யுத்த குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையர்களிற்கு எதிரான, எதிர் கால தடைகள் குறித்த ஊகங்களை வெளியிடுவது பொருத் தமற்ற விடயம், ஏனென்றால் தடைகளினால் ஏற்படக்கூடிய தாக் கத்தினை அது குறைக்கலாம் என பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய, அபிவிருத்தி அலுவலக இராஜாங்க அமைச்சர் கதெரின் வெஸ்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களிற்கு எதிரான தடைகளின் தாக்கம் குறித்த எழுத்துமூல கேள்விக்கே அவர் இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

மனித உரிமை விவகாரத்தில் இலங்கை பிரிட்டனிற்கு தொடர்ந் தும் முன்னுரிமைக்குரிய நாடாக காணப்படுகின்றது என தெரி வித்துள்ள அமைச்சர் கதெரின் வெஸ்ட், உண்மை நீதி பொறுப் புக்கூறல் ஆகிய விடயங்களில் பிரிட்டன் தொடர்ந்தும் இலங் கையுடன் ஈடுபாட்டை பேணுகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமை தடைகள் என்பது பிரிட்டனின் வெளி விவகார கொள்கையின் முக்கியமான ஒரு சாதனம் என தெரி வித்துள்ள அவர் பரந்துபட்ட வெளிவிவகார கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியம் என கருதப்படும் தருணத்தில் தடைகளை பயன்படுத்துவதாகவும் குறிப் பிட்டுள்ளார்.




AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள்
அனைத்து வீட்டு
வேலைகளிற்கும்
அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்தபடி
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# “இன்று இரத்தம் வழிந்தோடும் எமது மண் நாளை ஒரு சுதந்திர பூமியாக மாறும்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



வரலாற்று ரீதியாக ஈழத்தமிழினம் ஒரு அப்பட்டமான இன அழிப்பை எதிர்நோக்கி நிற்கின்றது. தமிழரின் தேசிய அடையாளத்தைச் சிதைத்துவிடும் நோக்கில் மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு இந்த இன அழிப்பு நிகழ்கின்றது. இதன் உண்மையான முகம் பிரச்சாரப் பொய்களால் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றது. இதனை சர்வதேச சமூகம் இன்னும் புரிந்து கொள்ளாதது எமக்கு வேதனையையும், கவலையையும் திருகின்றது.

தமிழின அழிப்பை அடிப்படையாகக் கொண்ட சிங்கள இனவாதத்தின் அடக்குமுறைக்கு எதிராகவே தமிழீழ மக்கள் அன்று தொட்டு இன்று வரை போராட்டங்கள் நடத்தி வருகின்றார்கள். எமக்கு முந்திய பரம்பரையினர் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் அறவழிப் போராட்டங்களை நிகழ்த்தினர். அறவழிப் போரின் ஆன்மீகப் பண்பியல்பை சிங்கள அரசு உணர்ந்து கொள்ளவில்லை.

அதற்கு மதிப்பும் அளிக்கவில்லை அகிம்சைப் போராட்டங்களை ஆயுத வன்முறையால் மிருகத்தனமாக நசுக்கியது. அறவழியில், சனநாயக வழியில் தொடங்கப்பட்ட போராட்டங்கள் ஆயுத வன்முறையால் நசுக்கப்பட்ட நிலையில், இன அழிப்பு மேலும் தீவிரமடைந்து தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை என்ற இக்கட்டான வரலாற்றுக் காலகட்டத்தில்தான் விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழரின் ஆயுதப் போராட்டமும் தோற்றம் கொண்டது.

தன்னாட்சி உரிமைகோரி தமிழீழத்தில் தோற்றம் கொண்ட ஆயுதப் போராட்ட வடிவத்தைப் பயங்கரவாதம் என்று பிரிவினை வாதம் என்றும் சித்தரித்துவிட சிங்கள அரசு பகீரத முயற்சி செய்கிறது. இத்தகைய தவறான கருத்து இந்திய மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தச் சித்தரிப்பில் எவ்வித உண்மையும் இல்லை. ஈழத்தமிழரின் போராட்ட வடிவத்தை திரிபுபடுத்தி கொச்சைப்படுத்தும் நோக்கில் இவ்விதம் பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

நாம் பயங்கரவாதிகளும் அல்லர், பிரிவினைவாதிகளும் அல்லர், ஆயுதக் கலாச்சாரத்தை வழிப்படுத்தும் வன்முறையாளரும் அல்லர். நாம் ஒரு இலட்சியத்திற்காக, ஒரு உயரிய குறிக்கோளுக்காகப் போராடுகின்றோம். இன அழிவிலிருந்து எமது இனத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாம் போராடுகின்றோம்.

இனக்கொலை வடிவம் எடுத்துள்ள ஆயுத வன்முறைக்கெதிராகவே நாம் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். உயிர் வாழும் உரிமைக்காக உயிரைக்கொடுத்துப் போராட வேண்டிய ஒரு சிக்கலான, நெருக்கடியான ஒரு வரலாற்றுச் சூழலை நாம் எதிர்கொண்டு நிற்கின்றோம்.

இலங்கைத்தீவில் சுதந்திரம் பெற்றதிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களப் பௌத்த பேரினவாத அரசுகள் தமிழரை அரவணைத்து வாழ விரும்பாது அடிமைகொண்டு ஆளவிரும்பியதால் தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ள விரும்பினர். ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்ட இனம் என்ற ரீதியில் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். அதுவும் அரச ஒடுக்குமுறையானது இன அழிப்பு வடிவமெடுத்து சூழ்நிலையில்தான் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்காகப் போராடத் துணிந்தார்கள்.

நாம் விடுதலையில் பற்றுக்கொண்ட ஒன்றுபட்டு உறுதி கொண்டு நிற்கின்றோம். இன்றைய பின்னடைவுகளை நாளைய வெற்றிகளாக மாற்றிவிடத் திடசங்கற்பம் பூண்டு நிற்கின்றோம். இன்று இரத்தம் வழிந்தோடும் எமது மண் நாளை ஒரு சுதந்திர பூமியாக மாறும் நம்பிக்கை எமக்கு உண்டு.

(28.12.1995 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் இருந்து)



மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000





தமிழ் பொது வேட்ப்பாளர்
பா. அரியநேத்திரன்
அவர்களுக்கான ஆதரவுக் கூட்டம்
Sunday, September 15, 2024 at
3:00 PM EDT (Toronto, Canada)
Venue: Canadian Tamil Chambers' of Commerce
80 Travail Rd, Unit 1 & 2
Markham, ON, L3S 3J1
தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு: +1-416-669-6437,
+1-416-648-3373, +1-647-771-1969, or
tamilforums@gmail.com
பா. அரியநேத்திரன்
ஏற்பாடு: தமிழ் பொது வேட்பாளர் ஆதரவாளர்கள்
"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால்சங்காரம் நிசம்என்று சங்கேமுழங்கு"
"எங்கள்பகைவர் எங்கோமறைந்தார் உலகெங்குமுள்ளதமிழர்கள் ஒன்றாதல்கண்டே!"
தமிழர்கள் அனைவரும்சங்குச்சின்னத்துக்கு ஒற்றுமையாய் வாக்களிப்போம்

# திலீபாஞ்சலி!
# “நீ அழைத்தது”



இதுவரை பார்த்தோம்
மற்றவர் மரணத்தை
அன்றுதான் பார்த்தோம்
எங்களின் மரணத்தை!

உண்மையில் அன்று
இறந்தது நாங்கள்
ஆனால்
ஏனோ உன்னைப் புதைத்தார்?

சிதையில் தீமூட்டி
உடலை எரிப்பர்
நீயோ...
உயிரில் தீமூட்டி
உன்னை எதிர்தாய்!

சாவுக்குப் பயந்த நாங்கள்
உன்னைச் சாகவிட்டு
பார்த்துக் கொண்டோம்
ஈழத்தை
நாம் பார்க்க வேண்டும்
என்பதற்காகவோ
உன் கண்களை நீ
மூடிக் கொண்டாய்?

சுதந்திரக் காற்றை
நாம் சுவாசிக்கட்டும்
என்பதற்காகவா
உன் சுவாசத்தையே
நீ நிறுத்திக் கொண்டாய்?

இந்த உலகிற்கு
வேறு சூரியன் இருக்கலாம்
எங்களுக்கு
நீதானே என்றென்றும்
இளஞ்சூரியன்!

சூரியனை இழந்தும்
இந்தப் பூமி உயிர் வாழலாம்
ஆனால்
நீ இல்லாத ஈழத்தை
எங்களால்
அனுபவிக்க முடியவில்லையே!

இந்த மண்ணை
இந்த இனத்தை
நேசித்த உந்தனுக்கு
நாங்கள்
பட்டினிச் சாவைத்தானே
பரிசளித்தோம்!

உனக்கு வெறும்
கண்ணீர் அஞ்சலி மட்டும் போதாது
நீ நேசித்த இந்த மண்ணை
அன்றைக்கே
காணிக்கையாய்த்
தந்திருக்க வேண்டும்!

கண்டவர்கள் சொல்லுங்கள்
அன்று நடந்தது என்ன?
கொலையா...
இல்லை தற்கொலையா?

உன் எதிரியைக் கூட
மன்னித்துவிடு
வஞ்சனையாக
உன்னை வதை செய்து
கொன்ற எங்களை
மறந்தும் மன்னிக்காதே!

காந்திதான் நீயும்
காந்தியைக் கொன்றவனும்
ஒரு கணம்தான்
கல்லாயிருந்திருப்பான்
நாங்களோ...
நீ சாகும் வரை
கல்லாகத்தான் இருந்தோம்!

போர்க்களம்...
அதுதானே நீ வாகை சூட வேண்டிய
இடம்!
ஆனால் நல்லூர் வீதியிலே
ஏன் தொடுத்தாய்
அறப்போரை?

நீ நினைத்திருந்தால்
துப்பாக்கி முனையிலேயே
எதிரியை நிறுத்தயிருக்கலாம்
மாறாக..
உன்னோடு
நீயே போர் தொடுத்து
ஏன் வென்றெடுத்தாய்
எங்கள் இதயத்தை?

உன் அறப்போருக்கு
அர்த்தங்கள் ஆயிரம்!
அது எங்கே புரியப் போகிறது
அவர்களுக்கு?
அவர்களோ...
காந்தி தேசத்தில்
பிறந்தவர்களாயிற்றே!

ஈழம் தவிர
இன்னொரு தீர்வா?
முடியாது!
அது உனக்கு நாங்கள் செய்யும்
நம்பிக்கைத் துரோகம்!

உன்னைக் கொன்றுவிட்டு
நாங்கள் மட்டும் வாழ நினைப்பது
மாபெரும் வஞ்சகம்!

நீ அழைத்தது ஈழத்தைத்தான்
ஆனால் சாவு முதல் வந்து
ஏனோ தழுவிக் கொண்டது?

எங்களுக்கு வேண்டாம்
இன்னொரு தெய்வம்!
நீ வந்தாலே போதும்
நிச்சயம் விடியும்
நாளை தமிழீழம்!
இது சத்தியம்!
உன் விருப்பம் நிறைவேறும்.
ஈழப்பிரகடனம்
நல்லூரின் வீதியிலிருந்தே
நாளை நடைமுறைப்படுத்தப்படும்!

\- எரிமலை, செப்டம்பர் 1995

*- துரையூரன்; யாழ்ப்பாணம்*





# மருத்துவ மாணவனாக தேர்வாகி விடுதலைப் போராளியாக மாறிய ஈகைச்சுடர் திலீபன்!



1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் தமிழீழத்திலே பிறந்த திலீபனின் பெயர் தான், இன்று திலீபன் எனும் பெயர் கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களை உருவாக்கியிருக்கிறது. திலீபனின் இயற்பெயர் பார்த்திபன். மிகச் சிறந்த அறிவாளியான திலீபன் 1980 காலக்கட்டத்திலேயே மருத்துவ மாணவனாக தேர்வானவர். 80-களின் துவக்க காலங்களில் சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகளை நேரில் பார்த்தவர், போராடால் இங்கு எதுவும் மாறாது என முடிவெடுத்து, படிப்பை நிறுத்திவிட்டு போராளியாய் மாறினார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அரசியல் துறை பொறுப்பாளராய் உருவெடுத்தார். இந்தியா - இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு 1987-ம் ஆண்டு ஈழத்து மண்ணிலே இந்திய அமைதிப்படை நிலை கொண்டு, பல்வேறு அநீதிகளை தமிழர்களுக்கு அங்கு நிகழ்த்திய போது, இந்திய அமைதிப்படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அமைதி வழியில் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருக்கத் துவங்கினார் அந்த 23 வயது இளைஞர்.



### திலீபனின் ஐந்து கோரிக்கைகள்:

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2. சிறைக் கூடங்களிலும் இராணுவ காவல் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக காவல் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

### செப்டம்பர் 15 அன்று துவங்கிய உண்ணாவிரதம்



செப்டம்பர் 15, 1987 அன்று யாழ்ப்பாணத்தின் நல்லூர் வீதியில் முருகன் கோயில் அருகில் உண்ணாவிரதத்தை திலீபன் தொடங்கினார். விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு ஆயுதம் மட்டுமே தூக்கி சண்டை போடத் தெரியும் என உலகம் நினைத்ததற்கு மாறாக, திலீபன் அகிம்சை பாடத்தினை சர்வதேசத்தினருக்கு நடத்த ஆரம்பித்தான். அதுவரை உலகில் யாரும் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர்விட்டதாய் வரலாறு இல்லை.

தனக்கு என்ன நேர்ந்தாலும் தனக்கு சுய நினைவு இருந்தாலும், இல்லாவிட்டாலும் யாரும் தனக்கு உணவோ, சிகிச்சையோ அளிக்கக் கூடாது என உறுதியாக சொல்லிவிட்டார் திலீபன். இந்த உண்ணாவிரதத்தில் தான் இறந்து விடுவேன் எனத் தெரிந்தும், மக்களுக்கு உண்மையை உணர்த்த, இலட்சியத்திற்காக உயிர்விடத் துணிந்தவராய் உண்ணாவிரதக் களத்தில் இறங்கினார்.

தமிழீழம் என்பதை நாம் எதற்காகக் கேட்கிறோம் என்பதை திலீபன் உறுதியாகச் சொன்னார்.




"எமது நாட்டில் எமது இராணுவம் நிலைபெறும் வரை, எமது நாட்டில் நாம் நிலைபெறும் வரை, எமது சுதந்திரத்தை எவரும் உறுதிபடுத்த முடியாது. அதற்காகத்தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் நாம் தமிழீழம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்த ஓர் சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும். அதுவரை நாம் ஒருபோதும் எமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை.

ஒன்றை மிகத் தெளிவாகவும் அறுதியாகவும் கூறுகின்றோம். நாம் மீண்டும் ஆயுதம் ஏந்துவோம். எமது மக்கள் அழிக்கப்படும் நிலை தோன்றுமானால் நாம் மீண்டும் ஆயுதம் ஏந்திக் கூட போராடுவோம்."

### திலீபன் அழைப்பது சாவையா?

திலீபன் புத்தகங்கள் வாசிப்பதில் மிகுந்த ஆர்வமுடையவர்.




குறிப்பாக உலகத்தில் உள்ள போராட்ட இயக்கங்களைப் பற்றியும், போராளிகளைப் பற்றியும் படித்துத் தெரிந்து கொள்வதில் அதீத ஆர்வமுடையவர். பாலஸ்தீனத்தின் போராட்டத்தின் மீது அவருக்கு மிகப்பெரிய ஈர்ப்பு இருந்தது. பாலஸ்தீனக் கவிதைகளைப் படித்து அதைப் பகிர்ந்து கொள்ளும் வழக்கமும் உடையவர். உண்ணாவிரத மேடையிலும் புத்தகங்களை வாசிப்பதற்கு கேட்டு வாங்கிக் கொண்டார். பாலஸ்தீன கவிதைத் தொகுப்பு அவருக்கு உண்ணாவிரத மேடையில் வாசிப்பதற்கு வழங்கப்பட்டது.

"திலீபன் அழைப்பது சாவையா? இந்த சின்ன வயதில் இது தேவையா? என்று கவிஞர் காசி ஆனந்தன் உண்ணாவிரத மேடையில் உருக்கமாக உரையாற்றிக் கொண்டிருந்தார். தொடர்ந்து திலீபனின் போராட்ட நாட்கள் முழுவதும் மேடைகளில் மாணவர்கள், பெண்கள், போராளிகள் என பலரும் கவிதைகளை ஒலிப்பெருக்கிகளில் வாசித்துக் கொண்டே இருந்தனர்.

தனது உண்ணாரவிரதத்தின் இரண்டாவது நாளில் பேசிய திலீபன், "அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மக்களே! நாளை நான் சுய நினைவுடன் இருப்பேனா என்று தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன்"

என்று பேசத் துவங்கினார். திலீபனின் அந்த பேச்சைக் கேட்டு கூட்டம் கண்ணீர் சிந்தியது.

முதல் இரண்டு நாட்களில் சில ஆயிரங்களாய் இருந்த மக்கள் கூட்டம், மூன்றாம் நாளிலிருந்து இலட்சமாய் மாறியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அமைப்பின் பொறுப்பாளனாய் மட்டுமே இருந்த தீலிபன் இப்போது தமிழினத்தின் பிரதிநிதியாகவே மாறிப் போனார். தமிழர்களின் குடும்பங்களின் ஒருவராய் மாறிப் போனார்.

### இலட்சியத்திறாக இறப்பேனே தவிர நீர் அருந்த மாட்டேன்

மூன்றாவது நாளின் போது நீராவது அருந்த வேண்டும் என பலரும் மேடையில் தொடர்ந்து வற்புறுத்திய போது, மைக்கை வாங்கிய திலீபன்,

"என்னை நீர், உணவு அருந்தும்படி கூறுவது என்னை அவமானப்படுத்துவது போல இருக்கிறது. இந்த மேடையில் நீராகாரம் எதுவும் எடுக்காமல் தான் உண்ணாவிரதம் ஆரம்பித்தேன். இறுதிவரை இந்த இலட்சியத்தில் இருந்து மாற மாட்டேன். நீரே எடுக்காமல் இறப்பேனே தவிர இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்திலிருந்து ஒரு போதும் பின்வாங்கவே மாட்டேன்"

என கூட்டத்தின் முன்பு உறுதியிட்டுக் கூறினார்.



உணவு அருந்தும்படி கூறாதீர் என பேசும் திலீபன்

ஒவ்வொரு முறையும் இந்திய அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதாய் செய்தி பரவும்போதும் கூட்டத்தினரிடையே மகிழ்ச்சி பொங்கியது. திலீபன் காப்பாற்றப்பட்டு விடுவான் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்த மக்களுக்கு ஒவ்வொரு முறையும் கிடைத்தது ஏமாற்றம்தான்.

4-வது நாளில் பேசிய திலீபன், "விளக்கு அணையும் முன் பிரகாசமாக எரியுமாம். அதுபோல் நான் உற்சாகமாக இருக்கிறேன். என்னால் தாராளமாகப் பேச முடிகிறது. எனக்கு விடை கொடுங்கள். போராடுவதற்குத் தயாராகுங்கள்." என்று தன்னைப் பற்றி கவலைப்படாமல் மக்கள் போராட வேண்டும் என்று அழைத்தார்.

## திலீபனுக்காக கண்ணீரைக் கொட்டிய மக்கள்

5-ம் நாளிலிருந்து திலீபன் சோர்வடைய ஆரம்பித்தார். நான்கு நாட்களாக பத்திரிக்கைகளையும், புத்தகங்களையும் வாசித்த திலீபனால் தற்போது எதையும் வாசிக்க முடியவில்லை. போர்வைக்குள்ளேயே புதைந்து கிடந்தார்.

ஒவ்வொரு நாளும் மக்கள் கூட்டம் அதிகரிக்க ஆரம்பித்தது. நல்லூர் கந்தசாமி கோயிலில் திலீபன் பேரில் தமிழ் மக்களால் அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை மேடையில் குவிந்து கொண்டிருந்தன. திலீபன் எப்படியாவது காப்பாற்றப்பட்டு விட வேண்டும் தமிழர்கள் எல்லா கடவுள்களையும் வணங்கிக் கொண்டிருந்தனர்.

தன்னை நோக்கி கதறி அழுதவர்களுக்கும், தன்னை போராட்டத்தைக் கைவிடக்கோரி கேட்டுக் கொண்டவர்களுக்கும், எந்த சவாலையும் சமாளிக்கக் கூடிய தனது சிறு புன்னகையை பதிலாகக் கொடுத்துக் கொண்டிருந்தார் திலீபன். ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் போதும் எந்த தீர்வையும் தரவில்லை என சொல்லும் போது "தான் இறுதிவரை போராட்டத்தைக் கைவிட மாட்டேன்" என்பதை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தார்.

## மக்களிடையே எழுந்த எழுச்சி

8-வது நாளில் திலீபன் சோர்ந்து மயங்கிய நிலையிலேயே இருந்தார். உதடுகள் வறண்டு பிளந்து கிடந்தன. இப்போது தமிழீழப் பகுதிகள் முழுவதும் மக்கள் பல்வேறு போராட்டங்களை தொடங்கியிருந்தனர். பொதுமக்கள் ஆங்காங்கே உண்ணாவிரதம் மேற்கொள்ள ஆரம்பித்தனர். நல்லூர் வீதியில் கூட்டம் உச்சத்தை தொட்டிருந்தது. இந்த போராட்டத்திற்கு இத்தனை மக்களின் ஆதரவு கிடைக்கும் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

திலீபன் மயங்கிய நிலையில், வாய்திறந்து பேசாமலேயே ஒரு மிகப்பெரும் விடுதலை உரையாடலை மக்களுடன் நிகழ்த்திக் கொண்டிருந்தான். 1970-களின் துவக்கத்திலிருந்து ஆயுதம் சுமந்த மண் இப்போது மீண்டும் அகிம்சைப் போராட்டத்தினை நடத்திக் கொண்டிருந்தது.

பேருந்துகள், மாட்டு வண்டிகள், மிதிவண்டிகள் என கிடைக்கும் வாகனங்களில் எல்லாம் ஏறிவந்து மக்கள் யாழ்ப்பாணத்து நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் அருகே குவிந்து கொண்டிருந்தனர். தமிழ் மக்களிடையே ஒரு புரட்சிக்கான சரித்திரத்தை எழுதியவன் வயிறு ஒட்டிப் போய், உடம்பெல்லாம் சருகாய் காய்ந்து போய் கட்டிலில் துவண்டு கிடந்தான்.

## சோகமும், கோபமும் கலந்துவிட்டிருந்த தமிழீழ மண்

9-ம் நாளில் உடல் உறுப்புகள் எல்லாம் செயலற்றுக் கிடக்க சிறு அசைவுகள் மட்டும் அவ்வப்போது இருக்கின்றன. 17 பாடசாலைகளிலிருந்து 5,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் அணிவகுத்து வந்து திலீபனைப் பார்த்து கண்கலங்கி அழுது கொண்டிருந்தனர்.

யாழ் கோட்டையிலிருந்த இந்திய அமைதிப் படையினர் வெளியே வர முடியாதவாறு மறித்து தமிழர்கள் மறியல் போராட்டத்தினை தொடங்கினார்கள். யாழ்ப்பாணம் முழுதிலும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை பார்த்தோர் வேலை நிறுத்தத்தினை மேற்கொள்ள முடிவெடுத்தனர். திலீபன் விரும்பிக் கேட்கும் பாடலான:

"ஓ..மரணித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்கு தா!
உன் பாதணிகளை எனக்கு தா!
உன் ஆயுதங்களை எனக்கு தா!" எனும் பாடல் உண்ணாவிரதக் களத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. கூட்டத்தின் கண்ணீருக்கு மத்தியில், மக்கள் நாம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கிறோம் என்பதை உணரத் தொடங்கினார்கள்.

10-ம் நாள் அணு அணுவாக மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தான் திலீபன். காந்தியின் தேசம் அகிம்சைக்கு மதிப்பளித்து கோரிக்கைக்கு செவி கொடுக்கும் என நம்பியிருந்த தமிழர்களின் எண்ணம் தகர்ந்திருந்தது. ஈழத்தமிழர்களை கண்ணீரில் மிதக்க விட்ட திலீபனின் போராட்டம் தமிழ்நாட்டு தமிழர்களையும் எழுச்சி கொள்ள வைத்தது. திலீபனின் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டின் சாலைகள் போராட்டங்களால் நிறைய ஆரம்பித்தன. திலீபன் தமிழீழத்திற்கு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிற்கும் சேர்த்து ஒட்டுமொத்த தமிழினத்தின் அடையாளமாய் மாறியிருந்தான்.

## திலீபன் எனும் காவியத்தின் இறுதி அத்தியாயம்

11-ம் நாள் மாலை 4 மணியளவில் திலீபன் முற்றிலுமாக சுயநினைவை இழந்து கோமா நிலைக்கு சென்றுவிட்டார். சுவாசிக்கவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அன்றிரவு திலீபனுக்கு பிடித்த "ஓ மரணித்த வீரனே" பாடல் மீண்டும் ஒலிபரப்பப்பட்ட போது மக்கள் பெரும் அழுத்தத்தில் வெடித்து அழுதனர்.



உண்ணாவிரதப் போராட்டத்தின் 12-ம் நாள் செப்டம்பர் 26, 1987 அன்று காலை 10:48 மணிக்கு திலீபன் உயிர் பிரிந்தது. 265 மணிநேர உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தி முடித்து விடை கொடுத்துச் சென்றிருந்தான் திலீபன். தமிழீழப் பிரதேசம் முழுவதும் சோகத்திலும், கோபத்திலும் ஆழ்ந்தது. திலீபனின் உடல் விடுதலைப் புலிகளின் கொடி போர்த்தப்பட்டு இறுதி மரியாதை செய்யப்பட்டு, அவருக்கு லெப் கேணல் பட்டம் வழங்கப்பட்டது.

திலீபன் இறப்பதற்கு முன் இறுதியாக ஆற்றிய உரையில் இதைத்தான் சொல்லியிருந்தார்.

"என் அன்பிற்கினிய மக்களே என்னால் பேச முடியவில்லை. பேச முடியாத நிலையில் இருந்தும் என்னை நீங்கள் தரும் உற்சாகம் பேச வைக்கிறது. நான் மீட்கப்பட முடியாத இடத்திற்கு




போய்க் கொண்டிருக்கிறேன். நான் வாழ்நாள் முழுவதும் நேசித்த என் தேசத்து மக்களே, உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும். இங்கே ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். மறைந்த போராளிகள் 650 பேருடன், 651வது போராளியாக நான் மேலே இருந்து மலரும் தமிழீழத்தை மகிழ்வோடு பார்ப்பேன். போராடத் தயாராகுங்கள். எனக்கு விடை தாருங்கள்."

திலீபனின் உயிர்த்தியாகம் தமிழர்களை தட்டி எழுப்பியது. 23 வயதிலேயே இனத்துக்காக தன் வாழ்வை முடித்துக் கொள்ள முடிவெடுத்துவிட்ட திலீபன் ஒரு வரலாற்று தியாகச் சின்னமாக மாறினான்.

"நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்றரீதியில் அவன் மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடித்துச் செத்துக்கொண்டிருந்த போதெல்லாம். என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன்."



என்று திலீபனைப் பற்றிய அஞ்சலியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டார்.

ஒரு திலீபன் மறைந்தான், ஆனால் உலகில் தமிழர்கள் வசிக்கும் நாடுகளெங்கும் ஆயிரமாயிரம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு திலீபன் என்று பெயர் சூட்டினர். அந்த தியாக இளைஞனின் பெயரை தன் அடையாளமாய் தமிழ் சமூகம் ஏற்றுக் கொண்டது.

தமிழ்நாட்டில் நீங்கள் உங்கள் வாழ்வின் பல்வேறு காலக்கட்டங்களில் உங்கள் காதுகளில் கேட்ட, இப்போதும் கேட்கிற 'திலீபன்' எனும் பெயரைக் கொண்ட இளைஞர்களின் பெயர்க் காரணத்துக்குப் பின்னால் இந்த இளைஞனின் மாபெரும் தியாகம் இருக்கிறது.

37ஆண்டுகள் கடந்துவிட்டன...

இன்னமும் வானத்திலிருந்து பசியோடு பார்த்துக் கொண்டிருக்கிறான் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்!




**ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்**

நாமூன்று நாட்களாய்
நாவினிலே ஏதுமில்லை
நாவரண்டு போனபின்பும் - உன்
நாவில் சொல் வரவில்லை
ஒட்டிய வயிறும்
ஓய்ந்த தான் போகவில்லை
புலியாய் நீ எழுந்ததினால்
ஆசொகச் சக்கரமும்
அரசமரக்கிளைக் கிளைகளும்
புரண்டது புழுதியிலே
கொன்றவர்களையே
வென்றவன் நீ

அன்று நீ உரசிவிட்ட சிறுநெருப்பு
எம்மக்கள் காட்டுத்தீயாகி
கயவர்களைக் கலைக்கிறது - நீ
காத்திருந்த தமிழீழம்
கனவாகிப் போகாது
விழித்திரு தாரகையாய்
விடிவு நாளை நிச்சயமே!

**கேணல் சங்கர்**

கங்குல் ஏறி விளையாடும்
கனவோடு காத்திருந்தோம்
கண்ட கனா நனவாகி
கண்முன்னே நிழலாட
கறுப்புப் பெட்டி ஒன்றை
கை தவற விட்டோமே.
கப்பல் கரை சேரும் போது
கை - துடுப்பிழந்து போனாலும்
கை இரண்டும் உண்டென்று
கலங்காது உன் வழி நடப்போம்
கற்பகதருவாகி - நீ
வளர்த்துவிட்ட வடலிகள் - நாளை
வானளாவி முகில் தட்டி
உன்வீரம் உரைத்து நிற்கும்
அண்ணா நீ, வித்தாக வீழ்ந்தாலும் - எம்
வேர்களுக்கு பலமாகி
விடுதலைக்கு துணைநிற்பீர்.

- பே. சுகந்தன்



## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# திருமலைப் படுகொலைகள் யூன், ஒகஸ்ட், செப்டம்பர் – 1985

இம்மாதங்களில் திருமலை மாவடடத்தில் பல படுகொலைகள் நடந்தேறின. பிரசைகள் குழுக்களின் இணைப்பு அமைப்பின் அறிக்கைகளின் படி முன்னூற்று பதினொரு தமிழர்கள் யூன் 1985 இல் திருமலையில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. சற்றடே ரீவ்யூ நாளேடு 21.12.1985 இன்று வெளியிட்ட செய்தியில் இத்தொகை முன்னூற்று எண்பத்துமூன்று எனக் கூறியுது. ஜெரமி கிளிங் என்கிற செய்தியாளர் சாம்பல் தீவில் பலர் காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென டெல்லி நீயூசில் தகவல் வெளியிட்டிருந்தார்.

1985 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதிக் கும் ஒன்பதாம் திகதிக்குமிடையில் திட்டமிடப்பட்ட முறையில் மகிப் பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை நகரின் வடபகுதியிலிருந்து தமிழர்களைத் துரத்தும் நடவடிக்கையாக இவ்விராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆகாய வழியாக உலங்கவானூர்தியும் கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. சென்றல் வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, மூன்றாம் கட்டை, நாவலர் றோட், உப்புவெளிச் சந்தி ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஊர்காவற்படையினரும் இங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு குழுக்களும் சேர்ந்து தமிழாகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்து ஐநூறு வீடுகளும் கடைகளும் கட்டடங்களும் அழிக்கப்பட்டதுடன் தமிழர்களுக்குச் சொன்தமான வள்ளங்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது இருநூறு சிறுவர்கள் தங்கியிருந்த சிவானந்த தபோவனத்தின் கட்டடமும் தகர்த்து அழிக்கப்பட்டது. இந்தக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இருபத்தைந்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அழிப்பதற்கு தமிழர்களுக்கு எந்தச் சொத்தும் இல்லை என்றவுடன், இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை வெளியிற் தெரியாமல் இருக்க நாளேட்டு நிருபர்களோ, வெளிநாட்டு நிருபர்களோ இப்பகுதிக்குச் செல்லத் தடைவிதிக்கப்பட்டனர்.

# பருத்தித்துறை திக்கம் படுகொலை – 16.09.1984

16.09.1984 அன்று நாலு சிறீலங்கா படையினர் ஒரு கண்ணணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தில் சிறீலங்கா பொலிசார் 16 பொதுமக்களை தாக்கிக்கொன்றனர். அதோடு பருத்தித்துறையில் அமைந்துள்ள ஹாட்லிக்கல்லூரி நூல் நிலையமும் அதன் விஞ்ஞான பரிசோதனை அறைகளும் பொலிசாரால் தீமூட்டி எரிக்கப்பட்டது.



# நிலாவெளி படுகொலை – 16.09.1985

திருகோணமலை மாவடடத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நிலாவெளிப் பிரதேசமானது. திருகோணமலை நகரிலிருந்து பத்த கி. மீ. தூரத்திலுள்ளது. 1983 ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நிலாவெளி அகதி முகாம் மக்களால் நிறைந்து காணப்பட்டது.

16.09.1985 அன்று நிலாவெளியில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவமும் ஊர்காவற்படையினரும் சேர்ந்து அகதிமுகாமைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைதுசெய்து. அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துச் சுட்டத்தில் அனைவருமே உயிரிழந்தனர்.

**16.09.1985 நிலாவெளிப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. முருகேசு தங்கராசா (46)
2. கச்சுமுகைதீன் முகம்மது காலித் (33)
3. வேலு சிவசுந்தரம் (24)
4. வேலு சிதம்பரநாதன் (25)
5. செல்லத்தம்பி நிர்மலானந்தன் ( 26)
6. சோசுந்தரலிங்கம் அருட்குமரன் (20)
7. அந்தோனிப்பிள்ளை கபிரியேல் (-)
8. இராஜேந்திரன் (29)
9. செய்யதுபுகாரி அப்துரசாக் (32)
10. கந்தையா கந்தசாமி (28)
11. கணபதிப்பிள்ளை சௌந்தரராஜன் (28)
12. செல்லத்தம்பி ரட்ணராஜா (41)
13. நேசதுரை றெறன்ஸ் (19)
14. கதிர்காமத்தம்பி கனகசபை (39)
15. முகமட் காசிம் முகமட் ராசிக் (31)
16. தாமோதரம் பிள்ளை நேமிநாதன் (19)
17. வல்லிபுரம் தருமலிங்கம் (18)
18. தர்மதாஸ் உதயநேசன் (19)
19. சுப்பிரமணியம் காளிராஜா (20)
20. செல்வவினாயகம் ஜெயகோபன் (26)
21. இராசையா துரைநாயகம் (36)
22. தாமோதரம்பிள்ளை சண்முகதாசன் (24)
23. மாமாங்கம் ரஞ்சநேசன் (21)
24. அபுசாலிபு அப்துல்நாயீர் (21)
25. சித்திரவேல் மாரிமுத்து (53)
26. சிங்கராயர் கிலீற்றஸ் பிரேமதாஸ் (20)
27. சிவபாலன் கெங்காதரன் (34)
28. பொன்னுத்துரை பார்த்தீபன் (34)
29. யோகராசா (27)
30. இரத்தினசாமி பார்வதி (23)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மண்டைதீவில் கைது செய்து காணாமற் போனவர்கள் 25.08.1990 – 23.09.1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசேயலகப் பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற்துறையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப்புக் கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானுர்தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடமபத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பதிரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப் பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக்களும் (ஈ.பி.டி.பி) சேர்நது மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைதுசெய்யபட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரோ குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:
“கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சிறிதர் விதியில் இருக்கும் ஈ.பி.டி.பி. செயலகத்திற்குச் சென்று திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். ஜி அப்போது அவர் “அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அனுராதபுரம் போய்வந்து சொல்கிறேன். ஜி என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படி கேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம்.

அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இரந்த திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடு தொடர்பு கொண்டார்களா” என்று தான் கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப் பகுதி பிரதி அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலெந்திரன் அவர்களும் திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்டபோது, அவர் நான் இம்முறை தீவுப்பகுதிக்ப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன் பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் திரு. டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார்.

14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக் குழு விசாரணை செய்யப்போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம்.

12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளை திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை” எனத் தெரிவித்தார்.

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக்குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற்போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட்டுள்ளது.

**25.08.1990 – 23.09.1990 வரை மண்டைதீவில் கைது செய்து காணமற்போனவர்கள் விபரம்**

1. சூசைப்பிள்ளை செல்வநாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தா் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்தியபாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20 )
23. ரி. சிமோன் (20 )
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாதபிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கியராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்னதாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

**வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்**

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) – 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) – 25.05.1993
3. தாவீது பென்ஜமீன் (25) – 1992 ஓகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) – 1986
5. வி. பாலரஞ்சன் (39) – 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மாத்தளன் படுகொலை 18.09.1993

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரப்பினை ஒரு பக்க எல்லையாகக் கொண்டமைந்த கிராமங்களில் மாத்தளன் கிராமமும் ஒன்று. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கடற்றொழிலையே நம்பியிரந்தனர். அத்தோடு தமது பொழுதுபோக்கு மையங்களாக இந்தக் கடற்கரைகளையே பயன்படுத்தி வரலாயினர். இவர்கள் தமது நாளாந்த தேவைகளை ஈடுசெய்ய வேண்டுமாயின் நான்கு கி.மீ. இற்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதிக்கே செல்லவேண்டிய நிலையும் இரந்தது. தமது கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்களைக்கூட இவர்கள் நீண்ட தூரம் சென்றே மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சனை தொடங்கிய காலத்திலிருந்து கடற்படையினர் கடலில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்ததுடன்., மீனவர்களைக் கடலில் தாக்கியும் வந்ததர்கள். ஆனாலும் மீனவர்கள் தொடர்ந்தும் கடற்றொழிலைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செய்து வந்தனர்.

18.09.1993 அன்று மாலை 3:45 மணியளவில் மாத்தளன் சந்தியில் கட்டப்பட்ட பொது மண்டபத்தின் திறப்புவிழாவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த இடம் பொயர்ந்த மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்த மக்களும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களும் அங்கு கூடினர். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் மாலை நான்கு மணியளவில் விமானப்படையின் “உலங்கு வானூர்தி” அப்பகுதியால் சென்றது. நேரம் மாலை 5:30 மணிக்கு மாத்தளன் வான்பரப்பிற்குள பிரவேசித்த சிறீலங்காவின் விமானப் படையின் “புக்காரா” குண்டுவீச்சு விமானங்கள் பத்திற்கும் அதிகமான றொக்கட் குண்டுகளை மண்டபத்தினை நோக்கி வீசியதில் மூன்று குண்டுகள் மண்டபத்தின்மீது விழுந்தன. ஏனைய குண்டுகள் மண்டபத்தின் முன்புள்ள சிறிய வயற்பகுதிகளில் விழுந்து வெடித்தன. எங்கும் “ஐயோ” என்ற அவலக்குரலுடன் மக்கள் திக்குத்திசையறியாது சிதறியோடினர். மண்டபம் புகைமண்டலமாக மாறியது. இவ்விமானத் தாக்குதலில் இருபது பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள்.

நாற்பதிற்கும் அதிகமானனோர் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட பொதுமண்டபமும் முற்றாகச் சேதத்திற்குள்ளானது. தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின்பின் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படடனர்.

**18.09.1993 மாத்தளன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இன்ரிகிறேஸ் ஜோசப் (31)
2. இம்மானுவேல் ஆனந்தராஜா (19)
3. பிரான்சிஸ் அருள்தாஸ்(23)
4. பிலிப்புதவராசா சுஜாத்தா (10)
5. பரமானந்தம் (40)
6. தம்பிராசா குணசிங்கம் (18)
7. தியாகராஜா கண்ணன் (16)
8. மரியதாஸ் அன்ரன் ஜெயபாலன் (32)
9. மரியதாஸ் அன்ரன் யேசுதாஸ் (30)
10. முத்தையா துரைசிங்கம் (45)
11. மரியதாஸ் இன்மானுவேல் ஆனந்தராசா (19)
12. டானியல்பிள்ளை பிலிப்புதவராசா (39)
13. அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி (18)
14. யோசப் வினிற்றா கிறேஸ் பிரெட்றிக் (31)
15. யேகமார்க் அன்ரனிதாஸ் (29)
16. செல்லையா செல்வம் (கண்ணன்) (16)
17. சியாத்தா திலீப்மேரி (09)
18. சின்னப்பு அல்போண்ஸ் (22)
19. சங்கரசிவம் புலேந்திரன் (15)
20. சங்கரசிவம் சுரேந்திரன் (18

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. கந்தையா குமாரசாமி (45)
2. அன்னலிங்கம் சொர்ணலிங்கம் (37)

குறிப்பு: - இச்சம்பவத்திற் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# சாவகச்சேரி - சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு 28.09.1993

யாழ் நகரிலிருந்து கிழக்குப்புறமாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி நகர் அமைந்துளள்து. சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து ஐநூறு யார் தொலைவில் கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக சங்கத்தானைக் கிராமம் அமைந்துள்ளது.

1990 இன் பின்னர் போர் தீவிரமடைந்தது. இதன்போது விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்களென எங்கும் தமது தாக்குதலை நடத்தின.

அத்துடன், சிங்கள இராணுவத்தினர் நீண்டதூர எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இதன்விளைவாகப் பொதுமக்கள் தம்மை விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காப்பகளழிகளை அமைத்து வந்தனர்.

இக்கிராமத்தில் “உதயன் மரக்காலையில்” அமைந்திருந்த பதுங்குகுழி அயலில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பரனாக இருந்தது. 28.09.1993 அன்று மாலை 5 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் இரைச்சலுடன் வந்த ஆஜன்ரினா நாட்டுத் தயாரிப்பான இரண்டு “புக்காரா” விமானங்கள் இரு தடவைகள் வானில் வட்டமிட்டன. பீதியுற்ற மக்களில் முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்க உதயன் மரக்காலையில் அமைக்கப்பட்ட காப்பகழிக்குள் சென்றனர். இவ் விமானங்கள் வீசிய முதலாவது குண்டு காப்பகழி மீது வீழந்து வெடித்ததால், காப்பகழிக்குள்ளிருந்த குழந்தைகள் உட்பட முப்பது பேர்வரை சம்பவ இடத்தில் மண்ணுக்குள் புதைந்த நிலையில் உயிரிழந்தார்கள். காப்பகழியில் தஞ்சமடைந்த மக்களில் ஐந்துபேர் மட்டும் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் நினைவாக சாவகச்சேரி சங்கத்தானை “உதயன் மரக்காலையில்” நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.

**28.09.1993 அன்று சாவகச்சேரி - சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டடோர் விபரம்**

1. இரத்தினகோபால் சுதர்சன் (11)
2. நாகேஸ்வரி குருநாதன் (56)
3. கந்தையா செல்வராசா (40)
4. கணேசன் கௌசிகா (12)
5. பாலசுந்தரம் சந்திரசேகரம் (09)
6. பாலசுந்தரம் சுரேஸ் (12)
7. பாலசுந்தரம் ரதி (03)
8. தஸ்யனி பாலசுந்தரம் (02)
9. தங்கம்மா கணபதிப்பிள்ளை (56)
10. தங்கராசா சுசீலா (21)
11. மகேஸ்வரி செல்லையா (52)
12. அமுதலிங்கம் லச்சம்மா (53)
13. ஜெகதீஸ்வரன் ஜனனி (07)
14. ஜெகதீஸ்வரன் தினேஸ் (08)
15. ஜெகதீஸ்வரன் தசாஜினி (11)
16. ஜெகதீஸ்வரன் சாந்தினி (31)
17. கோபாலபிள்ளை சுதர்சன் (09)
18. கோபாலரத்தினம் சுபாஜினி (15)
19. பொன்னுத்துரை ஞானேஸ்வரி (60)
20. தெய்வேந்திரன் நாகேந்திரன் (19)
21. செல்வராசா யசோதா (18)
22. செல்வராசா சுஜாதா (16)
23. சுரேக்கா கோபாலரட்ணம் (09)
24. சின்னராசா நிறஞ்சினி (13)
25. சின்னராசா பிரபா (10)
26. சின்னராசா பிரபாலினி (10)
27. சின்னராசா பவானி (21)
28. ரட்ணகோபால் துஸ்யேந்திரன் (09)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் 29.09.1993

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேசத்தில் கொக்குவில் கிராமம் அமைந்துள்ளது. சைவசமய வளர்ச்சிக்கும், சைவ அபிவிருத்திக்கும் முன்னோடியாக இக்கிராமத்தில் நந்தாவில் எனும் ஊரில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு இருநூற்றைம்பது வருடம் பழமை வாய்ந்ததாகவும், பல வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினராலும், 1993 ஆம் ஆண்டு சிறீலங்கா விமானப்படையாலும் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை 8:00 மணியளவில் ஆலயப் பகுதியாற் சென்ற இந்திய இராணுவத்தினர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டு நின்றவர்களைச் சுட்டதில் எஸ். சண்முகம் (நல்லூர் ப.நோ.கூ.ச. ஊழியர்), கண்ணன் (ஆலய பூசகர்), குலேந்திரன் (A.G.A கோப்பாய்) ஆகியோர் உயிரிழந்தார்கள். மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

29.09.1993 காலை 10:00 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் “புக்காரா” விமானம் ஆலயம் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆலய வழிபாட்டில் நின்றவர்களில் மூன்று பெண்கள்



# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22









# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22





யாழ் மாவட்டத்தில் வடமராட்சியில் நாகர்கோயிற் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் ஆகும். கிராமத்தில் 15.02.1956 இல் திரு. வி. நாகநாதன் அவர்களின் முயற்சியினால் நாகர்கோயில் வடக்கில் யாழ். நாகர்கோயில் நாகேஸ்வரர் வித்தியாலயம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. பின்னர் 1967 இல் யாழ். நாகர்கோயில் மகாவித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சிங்கள இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஆறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன. நாறூறு மாணவர்களைக்கொண்டிருந்த பாடசாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற்றிலைக்ணேி, ஆழியாவளை, கட்டைக்காடு போன்ற கிராமமக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்சமடைந்தனர். 1993 ஆம் ஆண்டுக்குப் பின்பு மாணவர்களின் எண்ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித்துக் காணப்பட்டது.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் அருபத்தோராம் திகதி வடமராட்சியின் பல பாகங்களுக்கும் பலாலியிலிருந்து சிங்கள இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். மறநாள் இருபத்திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறீலங்கா விமானப் படையின் “புக்காரா” குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (08), மனோகரதாஸ் மரியஜித் (10), ஜோன்பொஸ்கோ கார்மிளா (05) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்தனர்.

அன்றைய நாள் (22.09.1995) வடமாரட்சி கிழக்கில் காலை பதற்றமாக இருந்தபோதும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர். அன்றையநாள் எண்ணூற்றுமுப்பது மாணவரில் எண்ணூற்றுபத்து மாணவர்கள் வந்திருந்தனர். வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது. இறைவழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந்தனையினை ஏழாம் ஆண்டில் கல்விகற்கும் “நவரத்தினசாமி உமாதேவி” எல்லோரையும் கவரக் கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு “புக்காரா” விமானங்களிலிருந்து மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலையையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகை மண்டலமானது.

இத்தாக்குதலில் காலைப் பிரார்த்தனையில் உல்லோராலும் பாராட்டப்பட்ட “நவரத்தினசாமி உமாதேவி” உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார்கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்திய சாலையிலும் இறந்தனர். மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்தனர். அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோயில் கிராமத்தைச் சேர்நத இருபத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந்ததுடன், எண்பதைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள். அன்றை தாக்குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந்தனர்.

**இச்சம்பவத்தில் வலது காலை இழந்த ச. சிறிவித்தியா கூறுகையில...**

“அன்று புக்காரா விமானம் பாடசாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரிதாகக் கேட்ட போது நான் பாடசாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்து விட்டேன். குண்டு பாடசாலை வளாகத் திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண் டலமாக இருந்தது. எங்கும் ஓரே அழு குரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந்தது. எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன அப்போது நான் அத்திமரத்தை பிட்டு எனக்கருகிலிருந்து எனது ஒன்றுவிட்ட சகோதரியையும் கூட்டிக்கொண்டு ஓடும் நோக்குடன் எழும்ப முயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது. அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் துக்கிக்கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டுமென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சை பெற்றுகுணமடைந்தேன்.”

**22.09.1995 அன்று யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராமநாதன் மேதினி (13)
2. இராமச்சந்திரன் சங்கீதா (14)
3. இராசரத்தினம் உமாகாந்தன் (16)
4. இராசரத்தினம் கவிதா (10)
5. இரவீந்திரராசா அமிர்தா (10)
6. உ.தர்சினி (12)
7. நாகமுத்து செல்தில்வேல் (15)
8. நவமணி மிதுரா (14)
9. நவரத்தினசாமி உமாதேவி (12)
10. குகசரவணைமலை தர்சினி (13)
11. கிருஸ்ணகோபால் தவசீலன் (13)
12. பூலோகராசா துஸ்யந்தி (13)
13. பாலச்சந்திரன் றெஜிதா (10)
14. த.சமித்தா (10)
15. தர்மலிங்கம் உசாநந்தினி (14)
16. தாமோதரம்பிள்ளை சகுந்தா (12)
17. தம்பிப்பிள்ளை கோபிதரன் (-)
18. மயில்வாகனம் கணநாதன் (13)
19. மகாலிங்கம் சண்முகவடிவேல் (16)
20. மார்க்கண்டு நாகலோசனி (10)
21. அன்ரன் மரிய மனோகரதாஸ் மரியறஜித் (09)
22. அன்ரனி மரியறோஸ் அன்ரனிதாஸ் (08)
23. அல்போன்ஸ் அமலவிஜி (14)
24. யோன் பொஸ்கோ கார்மிலரா (04)
25. செல்வகுலசிங்கம் செல்வதி (17)
26. செல்வம் (16)
27. சிதம்பரப்பிள்ளை சசிரூபி (11)
28. ராகவன் (16)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. தங்கவேலாயுதம் றேணுகாயினி (12)
2. அ.றோமியா (10)
3. அக்கினேஸ்திரேசா கலிமண்ட் (12)
4. அக்கினேஸ் திரேசா அகிலதாஸ் (06)
5. அருமைலிங்கம் தாட்சாயணி (13)
6. சி. நரோசினி (09)
7. சி. சாரதா (45)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை – 17.09.2006

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11 கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன் குளம் உள்ளது. இந்த அணைக்கட்ட அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குப்பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லபுகல கிராமசேவகர் பரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர்சிலை ஒன்றினை நிவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் சிங்களவர்களக்கும். தமிழ் முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து தமிழ் முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெனகல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேசசெயலகர் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்து வண்ணமே இருந்தன. இதனால் இரு இனத் தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றது.

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற்காக 2006 செப்ரெம்பர் 17 ஆம் நாள் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து தமிழ் முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப்பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள தமிழ் முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிகள், சிங்களவர்களுக்கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வாறு தமிழ் முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வரவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொட்ந்தும் தமிழ் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடக்கும் நோக்கிலேயே சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படுகின்றது.

**இச்சம்பத்தின் போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்**

1. எம் அனுர்தீன் (15)
2. எம். நபார் (15)
3. எம். சமுதீன் (18)
4. எ.எம். பைசல் (19)
5. எல். அனிஸ் (19)
6. எம். ஜப்பர் (20)
7. எஸ்.எல். றிசாட் (-)
8. ஏ.எம். அஜ்மீர் (18)
9. எம். பைரூப் (19)
10. எம். ஐ. சியம் (-)

**காயமடைந்தவர்**

1. எம். மீரமுகைதீன் (55)

# கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் 27.09.1996

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ள கிராமங்களில் ஒன்று கோணாவிலாகும். அத்துடன் இது ஒரு விவசாயக்கிராமமாகும், இங்கு பலர் கூலித்தொழிலிகளாவர். இந்தக் கிராமத்து மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து பற்பல இன்னல்களையும் அனுபவித்தவர்களாவார்கள்.

1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தேழாம் திகதி காலை 11:30 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் இரண்டு "கிபிர்" விமானங்கள் கோணாவில் காந்தி கிராமச்சந்தியில் குண்டுகளை வீசியது. இவ்விமானக்குண்டு வீச்சில் காந்தி கிராமச்சந்தியில் நின்ற மூன்று பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானதுடன், பலர் படுகயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் இருவர் அக்கராயன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பின் சிகிச்சை பலனழிக்காமல் உயிரிழந்தனர்.

**இச்சம்வத்தில் தகப்பனையிழந்த விமலேஸ்வரி சம்பவம் பற்றி கூறுகையில்**

"1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து போய் இராஜன் குடியிருப்பிலே இருந்தோம். அன்றை தினம் அம்மா மதிய உணவைச் சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா மரக்கறி வாங்குவதற்காக காந்தி கிராமம் சந்திக்குச் சென்ற போது தான் கிபீர் விமானம் குண்டு போட்டது. அப்பா நெஞ்சுப்பகுதி முழுவதும் சிதைந்து போய் அவ்விடத்திலேயே இறந்து விட்டார். இதை அறியாத நானும் அம்மாவும் காந்தி கிராமத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அப்பாவைக் காணவில்லை. சிலவேளை வீட்டிற்கு வந்தீருப்பார் என்று நினைத்து திரும்பவும் வீடு போய்ப் பார்த்த போது அங்கேயும் இல்லை. அப்பா இறந்தது தெரியாது நாங்கள் தேடித்திரிந்த போது தெரிந்த ஒரு அண்ணா வந்து சொன்னார், உங்களுடைய அப்பா காலில் காயம்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் இருக்கிறார் என்று. உடனே நாங்கள் அவருக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே எனது அப்பாவின் உடலையும் தாத்தாவின் உடலையும் அத்தையும் சில உறவினர்களும் எடுத்து வைத்திருந்ததை கண்ட போது தான் இருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்தது. பின்னர் இருவரது உடல்களையும் அக்கராயன் முதலாம் இலக்க அரிசி அலை வளவில் வைத்து இறுதிக் கரியைகளைச் செய்தோம். அப்பா இல்லாததுடன் வீடு வாசல்கள் இல்லாமல் மரங்களுக்கு கீழே இருந்து சரியாகக் கஸ்ரப்பட்டோம். மில்லுக்கப் போய் உமியைப் பிடைத்து அதில் வரும் அரிசியை எடுத்துச் சாப்பிட்டோம். அது இல்லாத வேளை வேறு ஆட்களின் காணியிற் போய் தேங்காயை எடுத்து வந்து அதை உரித்துச் சாப்பிட்டு வந்தோம். பின்னர் கஸ்ரம் தாங்கமுடியாமல் திரும்ப சித்தியினுடைய வீட்டிற்கு வந்து அதிலிருந்து எங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்திருத்தோம். சரியான கஸ்ரத்தின் மத்தியில் நெல்லுப் பிடைச்சுத் தான் சாப்பிடுகின்றோம். நான் படிப்பை விட்டு விட்டேன். எனது அண்ணாவும் அப்படித்தான் படிப்பை விட்டு விட்டார். தற்போது நானும் ஒரு அண்ணாவும் தங்கையும் அம்மாவும் மட்டுந்தான் இருக்கின்றோம். அம்மா புல் பிடுங்கப் போனாற் தான் நாங்கள் சாப்பிடுவது. இல்லாது விட்டால் நான் தான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். நாங்கள் எந்தவிதக் குறையும் இல்லாது வாழ்ந்த வேளை எங்களுடைய அப்பாவை சிறீலங்கா விமானப்படை கொடூரமாகக் கொன்றதாற் தான் நாங்கள் இப்படிக் கஸ்ரப்படவேண்டி வந்திருக்கிறது. அப்பா அருந்திருந்தால் எங்களை நல்லபடியாகப் பார்த்து படிக்க வைத்திருப்பார். இப்போது எதிர்காலம் தொடர்பான கேள்விக் குறியுடன் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே எமது நாட்கள் செல்லுகின்றது."

**இச்சம்பவத்தின் கணவனை இழந்த வைகுந்தவாசன் பரிமளா என்பவர் கூறிகையில்...**

"எனது கணவர் ஒரு ஓவியர், விளம்பரம் பலகைகள் வரைவது அவரது தொழில், கிளிநொச்சி மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்கராயன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். கணவர் சந்தைக்குப் போய்விட்டு வருவதாகச் கூறிச் சென்ற சில நேரத்தின் பின் கிபீர் விமானங்கள் சுற்றி குண்டு போட்டவுடனேயே நான் சந்திக்குப் போனேன். அங்கு அவரில்லை. அங்கு நிற்பவர்கள் சொன்னார்கள் அவர் காயப்பட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று விட்டார்கள் என்று. பின்னர் நானும் மூத்த மகனுமாக வைத்திய சாலைக்குச் செனன்றபோது அவர் உயிரிழந்துவிட்டார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தான் அவரின் உடலை வீட்டிற்குக் கொண்ட வந்து தந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்தோம். அவர் இறந்த பிறகு பிள்ளைகளும் பெரிதாகப் படிக்கவில்லை. அக்கராயனுக்கு இடம் பெயர்ந்தும் பெரிய கஸ்ரத்தை நான் அனுபவித்தேன். அரிசி இடித்துக் கொடுப்பது புல்லுப் பிடுங்குவது போன்ற கூலித் தொழிலைச் செய்து தான் இன்றும் சீவியம் நடத்துகின்றேன் என்றார்."

**27.09.1996 அன்று கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசதுரை திருக்குமார் (20)
2. கந்தையா விஜயகுமாரி (31)
3. முத்துசாமி வைகுந்த வாசன் (39)
4. பெரியசாமி வேலு (61)
5. சிவனாண்டி ஜெனகாந் (15)

**காயமடைந்தவர்கள் விபரம்**

1. பொன்னையா ஜெய நாதன் (16)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலை 15.09.1999



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதக் குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள் ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் மந்துவில் சந் தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்து விற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலான வற்றை இங்கெ பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர்.

15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவ ரென பலதரப்பட்டவர்களும் சந்திக் குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10:25 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "கிபீர்" குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான் பரப்பினூடாக பற்நது வந்து மந்து விற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடிநின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொது மக்கள் உயிரிழந்தனர். உயிரிழந் தவர்களின் உடல்கள் சில அவ் விடத்திலும், வீதியிலும், பற்றைக் குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக் கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர் களின் உடல்கள் சிதைந்த நிலை யிலிருந்தன. படுகாயமடைந் திரந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிரப் பு வைத்தியசாலைக்குக் கொண்ட சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தரமரங்கள், கால்நடைகள் போன்ற பல இலட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

**இச்சம்பவத்தில் கணவரை இழந்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது...**

"எனது கணவர் காணியில் கிடைக் கும் தேங்காய்களை கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டுவருவார். சம்பவ தினமன்றும் பத்துத் தேங் காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபீர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரி யாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக்கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்திருந்தாராம், உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங் கி புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும் போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறா வது மகன், 1985 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக் குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்தக் கொண்டு ருந்த வேளை, 1985 ஆம்ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதி யன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பதின் நான்கு ஆண்டகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசில் கொன்றுள்ளனர்."

**15.09.1999 அன்று புதக்குடியிருப்பு மந்துவில் படுகொலையில் கொல்லப்பட்டோர் விரபம்:**

1. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
2. சண்முகம் கிருபாகரன் (22)
3. சவிரி யோன் (52)
4. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் (70)
5. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை (43)
6. ஜெயராமன் சந்திரகுமார் (20)
7. அலன்றோஸ் கொண்டுயூசியஸ் (19)
8. அந்தோனிப்பிள்ளை (-)
9. ஆறுமுகம் ஜெயராமன் (50)
10. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
11. பாக்கியநாதன் றீற்றம்மா (56)
12. தனராஜ் ஜெனோவி (24)
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை (52)
14. துரைசிங்கம் சபாநாயகம் (21)
15. இராசநாயகம் உதயகுமார் (20)
16. இராசேந்திரம் சத்யகுமார் (25)
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன் (33)
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா (25)
19. கனகசபை மிதிலா (26)
20. அன்ரனனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் (54)
21. செல்லையா ஆறுமுகம் (59)
22. கணபதிப்பிள்ளை யோகராசா (36)
23. அன்ரனிதவராசா திரேசம்மா (50)
24. அன்ரனிலியோ மெல்றோஸ் (24)
25. சின்னத்தம்பி தம்பு (55)
26. ஜெயமஸ் ஜெயசங்கர் (33)
27. பத்மராசா ஜெனிற்றா (15)
28. சந்திரசேகரம் சயந்தினி (12)
29. தம்பையா சப்ரமணியம் (67)

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. சூ. பேதுறுப்பிள்ளை (80)
2. இ. தனேஸ்வரி (55)
3. இ. மகேஸ்வரி (55)
4. நா. அருந்தவமலர் (52)
5. க. தங்கையா (45)
6. கனகையா (48)
7. சந்தையா நாகலிங்கம் (43)
8. கந்தையா வள்ளிப்பிள்ளை (35)
9. கதிரேசு தேவராசா (70)
10. கதிரேசு தேவராசா (39)
11. கி. அன்னலட்சுமி (61)
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி (51)
13. குணசிங்கம் (50)
14. குணரத்தினம் நிறஞ்சன் (09)
15. பால்ராஜ் பாசமலர் (27)
16. பாலசிங்கம் பால்ராஜ் (29)
17. பத்மராஜா மதியமலர் (40)
18. பி. மரியமலர் (52)
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா (18)
20. சைலன் (03)
21. த. பாலசிங்கம் (66)



22. த. தனுசா (03)
23. த. தேவராசா (39)
24. தி. தர்சினி (17)
25. தியாகராசா தர்சினி (17)
26. தியாகாராசா செல்வாராணி (44)
27. ம. தனராஜ் (20)
28. மயில்வாகனம் (45)
29. மகாலிங்கம் தனராஜா (29)
30. மரியநாயகம் (48)
31. முத்துசாமி (48)
32. முத்துசாமி கோழிமனசாமி (48)
33. அ. இருதயராசா (20)
34. அ. மரியசோபனா (23)
35. அ. விதுச்ன (35)
36. அன்ரன் பெனடிற் (51)
37. அலன்றோஸ் மரியநாயகி (40)
38. ஜெ. ஜெயசங்கர் (30)
39. ஜெ. சரஸ்வதி (50)
40. ஜெயராமன் விமல்ராஜ் (06)
41. ஜெயராமு சரஸ்வதி (50)
42. ஜெயராமன் (60)
43. யோன் நான்சி (19)
44. கே. தவசீலன் (19)
45. கே. மேனகா (18)
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி (45)
47. பொ. வள்ளிப்பிள்ளை (90)
48. பெர்னான்டோ அனரலிவின்சன் (35)
49. பெரியதம்பி நடராசா (51)
50. தெ. மரியமலர் (68)
51. சே. மரியம்மா (68)
52. சேதுப்பிள்ளை (80)
53. செல்லையா சந்திரசேகரம் (27)
54. செல்லத்துரை மகேஸ்வரி (46)
55. ச. யோகராணி (41)
56. ச. லோகிதா (15)
57. ச. சர்மிலா (23)
58. சின்னத்தம்பி கந்தசாமி (37)
59. சீனியர் சிவநாதன் (18)
60. சிவகுரு சூரியமூர்த்தி (33)
61. சிவானந்தம் சுதாகரன் (19)
62. சிவநேசன் அழகேஸ்வரி (29)
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி (21)
64. சுசிதரன் சூட்டி ( 29)
65. சரஸ்வதி (50)
66. சற்குணன் யோகராணி (41)
67. ராஜா சஜீபன் (03)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும்

# JATHU RENOVATION




உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com

அகரம்
Akaram

வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
437.345.4203

The ESTATE
BANQUET AND EVENT CENTRE



The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"

The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar

430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy

Free
Estimate!
Call today
$50 OFF




Let us help with...
- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com






கலாநிதி ப. புஷ்பரட்ணம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

# இலங்கைத் தமிழரின் பூர்வீகத்தை அடையாளப்படுத்தும் உடுத்துறை நாணயங்கள்!



சென்ற இதழ் தொடர்ச்சி...

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரிவின் வட எல்லையில் உள்ள கடற்கரைக் கிராமங்களில் உடுத்துறையும் ஒன்றாகும். இக்கிராம மக்கள் 1994 ஆம் ஆண்டு கிணறொன்றை வெட்டும்போது எதிர்பாராத விதமாக கிணற்றின் ஆழமான மையப் பகுதியில் மிகப் பழமையான நந்தி விக்கிரகத்துடன், புராதன குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்தும் மட்பாண்டங்கள், சங்கு சிப்பி, கூரை ஓடுகள் மற்றும் செங்கற்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர்.




பின்னர் இதுபற்றிய செய்தி எமக்குத் தெரியப்படுத்தியதன் பேரில் நாம் அவ்வூர் மக்களது ஒத்துழைப்போடு அவ்விடத்தையும், அதன் சுற்றாடல்களையும் ஆராய்ந்து பார்த்தோம். அப்போது சில இடங்களில் மிகப் பழமையான குடியிருப்புக்கள் இருந்ததை இடையாளம் காட்டும் பெருங்கற் காலப் பண்பாட்டிற்குரிய மட்பாண்ட ஓடுகள், கல்மணிகள் மற்றும் பண்டைய காலப் பகுதியில் புழக்கத்திலிருந்த பலதரப்பட்ட நாணயங்கள் போன்றனவற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது. இருப்பினும் 1995இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் தொடர்ந்தும் அவ்விடயங்களில் தொல்லியல் ஆய்வினை மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் அந்த ஆய்வின் போது கண்டுபிடித்த தொல்பொருட்களைக் குறிப்பாக நாணயங்களை மிக அண்மைக் காலத்தில் மீண்டும் சுத்தம் செய்து ஆராய்ந்து பார்த்தபோது அவற்றுள் சில நாணயங்கள் இதுவரை வரலாற்று வெளிச்சத்திற்கு வராத புதிய வரலாற்று உண்மைகளைத் தருவனவாக இருக்கின்றன. அவற்றுள் "நாக" என்ற பெயர் குறித்து நிற்கும் நாணயத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை இவ்விடத்தில் எடுத்து நோக்கலாம்.

மிகச் சிறிய இச்செப்பு நாணயம் 0.7 சென்ரி மீற்றர் விட்டமும், 1.5 கிராம் நிறையும் உடையது. இதன் முன்புறத்தில் விளிம்பை ஒட்டி சுவஷ்திகா சின்னமும், இதற்கு கீழே வலப்புறமாக குத்து விளக்கும், இடம்புறமாக பிறைச்சந்திரனும், சூரியனும் இச்சின்னங்களுக்கு மத்தியில் பக்கவாட்டாக இரு மீன் சின்னமும் காணப்படுகின்றன. இவ்விரு மீன் சின்னங்களுக்கு கீழே நாணயத்தின் விளிம்பை ஒட்டியவாறு நான்கு பிராமி எழுத்துக்ள் சிறிதும், பெரிதுமாக பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் எழுத்தமைதி கொண்டு இந்நாணயம் கி.பி. 1-2ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்காலம் எனக் கூறமுடியும். இதில் "நாக" என எழுத்தப்பட்டுள்ள முதலிரு பிராமி எழுத்தும் தெளிவாக உள்ளன. ஏனைய இரு எழுத்துக்களும் சற்று தேய்வடைந்து இருப்பதால் அதன் வாசகத்தை நிச்சயப்படுத்திக் கூற முடியவில்லை. அவற்றை இரு எழுத்தாக எடுத்தால் "பூமி" எனவும், ஒரு எழுத்தாக எடுத்தால் "ஹ" எனவும் வாசித்து நாணயத்தில் உள்ள வாசகத்தை நாகபூமி அல்லது நகாஹ(1) அதாவது நாகனுடைய நாணயம் எனப் பொருள் கொள்ள முடியும். ஆனால் தமிழகத் தொல்லியற் பேராசிரியர் சுப்பராயலுவும், இந்திய தொல்லியல் ஆளவீட்டுத் திணைக்கள முதுநிலைக் கல்வெட்டாய்வாளர் இராச வேலுவும் அதிலுள்ள மூன்றாவது எழுத்தை "வ" என எடுப்பதே பொருத்தம் எனக் கூறியுள்ளனர் (2). அப்படியானால் நாணயத்தில் உள்ள வாசகத்தை நாகவம் (சம்) எனப் பொருள் கொள்ளமுடியும். நாணயத்தின் பின்புறத்தில் வலப்புறமாக விளிம்பை ஒட்டி சுவஷ்திகா சின்னமும், மத்தியில் கிடையான அமைப்பில் ஒரு மீன் சின்னமும், இச்சின்னங்களுக்கு கீழே பிராமி எழுத்தில் பொலம் என்ற தமிழ்ச் சொல்லும் காணப்படுகின்றன. இதில் பொறிக்கப்பட்டுள்ள "பொலம்" என்ற சொல்லுக்கு பொன், பொன்னிறமான காசு, அழகு, சிறந்தது எனப்பல கருத்துக்கள் உண்டு. இச்சொல் சங்க காலம் தொட்டு நாணயத்தோடு தொடர்புடைய பெயராகப் பயன்படுத்தப்பட்டதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதற்கு ஐங்குறுநூற்றில் (310:01) பொலம்பசு பாண்டிற்காசு என்றும், குறுந்தொகையில் (66:4, 148:3) பொலங்கல ஒரு காசு எனவும், பொலஞ்செய் கிண்கிணி காசு எனவும் அக நானூற்றில் (293:7, 315:12) பொலஞ்செய்காசு எனவும்வரும் குறிப்புக்களைச் சான்றாகச் சுட்டிக்காட்டலாம். ஆயினும் இச்சொல் சமகாலத்தில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் அல்லது சங்க கால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் பயன்படுத்தப்பட்டதற்கு சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சமகால இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் இச்சொல் உயர்ந்த என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் தமிழல் "பொலம்" என எழுதப்படவேண்டிய இச்சொல் அக்கல்வெட்டுக்களில் அதன் பிராகிருத மொழிக்கு ஏற்ப "பொலம்" என்றே எழுதப்பட்டுள்ளது. இலங்கையில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் வழக்கிலிருந்த பல தமிழ்ப் பெயர்கள் சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் அதன் கல்வெட்டு மொழிக்கு ஏற்ப பிராகிருத மயப்படுத்தப்பட்டிருந்தாலும் இப்பெயர்கள் சமகால நாணயங்களில் தமிழில் எழுதப்பட்டதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதை மேலும் உறுதிப்படுத்துவதாக மேற்குறித்த உடுத்துறை நாணயத்தில் வரும் "பொலம்" என்ற சொல்லை எடுத்துக் கொள்ளலாம்.


நாணயத்தின் முன்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள "நாக" என்ற பெயர் இவ்விடத்தில் சிறப்பாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டிய ஒன்றாகும். கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தென்னாசியாவில் புழக்கத்தில் இருந்த பிராமிக் கல்வெட்டுக்களில் இப்பெயர் பிராகிருத மொழியி "நாக" என்றே எழுதப்பட்டுள்ளன.

**உடுத்துறையில் கிடைத்த நாணயம் வட்டவடிவில் வடிவமைக் கப்பட்டிருப்பதுடன் அதன் இரு புறத்திலும் மூன்று மீன்கள் கோட்டுருவத்திற்கு பதிலாக முழு உருவமாக வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதேவேளை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் காணப்படும் சின்னங்களை ஒத்த வடிவமைப்பில் தமிழகத்தில் அதிலும் குறிப்பாகச் சங்க காலத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள் கடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையில் இதே வடிவமைப்பில் பல நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதற்கு அவற்றை வடிவமைப்பதற்குப் பயன் படுத்திய சுடுமண் அச்சுக்களே சான்றாகக் கிடைத்துள்ளன. இவை உடுத்துறை நாணயம் இன்னொரு நாட்டிலிருந்து கொண்டுவரப்படாது இலங்கையிலேயே வடிவமைக்கப்பட்ட தென்பதற்கு சிறந்த சான்றாக உள்ளது.**

ஆனால் விதிவிலக்காக தமிழகத்தில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்களிலும், இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட சில பிராமிக் கல்வெட்டுக்களிலும் இப்பெயர் தமிழில் "நாக" என்றும் "ணாக" என்றும் எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். அதேபோல் தென்னிலங்கையில் கிடைத்த சில நாணயங்களிலும் இப்பெயர் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இந்த வேறுபாடு இப்பெயருக்கு உரியவர்கள் தமிழர்கள் அல்லது இப்பெயரை எழுதியவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தவர்கள் எனக் கூறலாம். இவற்றின் அடிப்படையில் உடுத்துறையில் கிடைத்த நாணயத்தை தமிழ் மன்னன் அல்லது தமிழ்ச் சிற்றரசனே வெளியிட்டான் என எடுத்துக் கொள்வதில் எந்த தவறும் இல்லை.

இந்நாணயத்ததை தமிழ் மன்னன் வெளியிட்டதாகக் கொள்ளும்போது அவன் எந்த நாட்டைச் சேர்ந்த தமிழ் மன்னன் என்பது முக்கிய கேள்வியாக எழுகின்றது. தமிழகத்தில் அதிலும் குறிப்பாக சங்க காலத் தமிழகத்தைப் பொறுத்தவரை "நாக" என்ற பெயர் கொண்ட மன்னன் அல்லது வம்சம் நாணயங்களை வெளியிட்டதற்கோ அல்லது நாணயங்களை வெளியிடும் அளவுக்கு அப்பெயர் கொண்ட மன்னர்களது ஆட்சி அங்கு இருந்தற்கோ இதுவரை எந்தச் சான்றுகளும் கிடைத்ததாகத் தெரியவில்லை. சங்க காலப் பாண்டிய மன்னர்கள் தமது அரச இலட்சனையான மீனை தமது நாயணங்களில் பொறித்ததற்கு தமிழகத்திலும், இலங்கையிலும் (கந்தரோடை, பூநகரி, அநுராதபுரம், அக்குறுகொட) கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் சான்றாக உள்ளன. ஆயினும் அந்த நாணயங்கள் சதுரவடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், நாணயத்தின் பின்புறத்தில் மட்டும் ஒரேயோரு மீன் சின்னம் அதுவும் கோட்டுருவாமாகவே பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் உடுத்துறையில் கிடைத்த நாணயம் வட்டவடிவில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் அதன் இரு புறத்திலும் மூன்று மீன்கள் கோட்டுருவத்திற்கு பதிலாக முழு உருவமாக வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதே வேளை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் காணப்படும் சின்னங்களை ஒத்த வடிவமைப்பில் தமிழகத்தில் அதிலும் குறிப்பாகச் சங்க காலத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையில் இதே வடிவமைப்பில் பல நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதற்கு அவற்றை வடிவமைப்பதற்கு பயன்படுத்திய சுடுமண் அச்சுக்களே சான்றாகக் கிடைத்துள்ளன. இவை உடுத்துறை நாணயம் இன்னொரு நாட்டிலிருந்து கொண்டு வரப்படாது இலங்கையிலேயெ வடிவமைக்கப்பட்டதென்பதற்கு சிறந்த சான்றாக உள்ளது. இவற்றின் அடிப்படையில் இந்நாணயத்தை இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னனே வெளியிட்டான் எனக் கூறமுடியும்.

இந்நாணயத்தை இலங்கைத் தமிழ் மன்னனே வெளியிட்டான்



எனக் கொள்ளும் போது அந்நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள "நாக" என்ற பெயரின் வரலாற்று முக்கியத்துவம் என்ன என்ற கேள்வியும் எழுகின்றது. புராதன இலங்கையில் நாக வம்சத்து மன்னர்கள் ஆட்சி புரிந்ததற்கும், இன்று தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வரும் பிராந்தியம் பண்டுதொட்டு நாகதீப(ம்) அல்லது நாகநாடு என அழைக்கப்பட்டு வந்ததற்கும் பல சான்றுகள் காணப்படுகின்றன. இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் கி.மு. 6ஆம் நூற்றாணடில் புத்தர் இலங்கை வந்தபோது அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த பிராந்தியத்தை நாகதீப(ம்) எனவும், அங்கு ஆட்சியில் இருந்த இரு நாகவம்சத்து மன்னர்களுக்கிடையிலான சிம்மாசனப் போராட்டத்தை அவர் தீர்த்து வைத்ததாகவும் கூறுகிறது. அதில் புத்தர் இலங்கை வந்ததாக மகாவம்சத்தில் கூறப்படுவது ஐதீகமாக இருப்பினும், அந்நூல் எழுதப்பட்ட கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வட இலங்கை நாகதீபம் என அழைக்கப்பட்டதையும், அங்கு நாகவம்சத்து மன்னர்களே ஆட்சி செய்தனர் என்பதையும் இச்செய்தி எடுத்துக் காட்டுவதாகக் கூறலாம். இதற்குச் சார்பாக வட இலங்கையில் பெரியபுளியங்குளம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் இங்கு நாகச் சிற்றரசர்களது ஆட்சியிருந்ததாகக் கூறும் செய்திகளை ஆதாரமாகக் காட்டலாம். அதேவேளை இலக்காலப்பகுதிக்குரிய இன்னொரு பிராமிக் கல்வெட்டு இலங்கையில் "நாகநகர்" என்ற பெயரில் தலைநர் ஒன்று இருந்தாகக் கூறுகிறது. பேராசிரியர் இரகுபதி இத்தலைநகர் கந்தரோடையாக இருக்கலாம் எனக் கூறுகிறார். ஆனால் நிக்லஸ் என்ற ஆய்வாளர் இது பதவியாவுக்கு அண்மையில் இருந்த தலைநகர் என்பதற்கு கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் வரும் இதையொத்த



இன்னொரு பெயரை ஆதாரம் காட்டுகிறார். கி.பி.1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டவரான தொலமியின் குறிப்பில் "நகாதீபோய்" என்ற இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பாளி நூல்களில் குறிப்பிடப்படும் நாகதீபம் என முதலியார் இராசாநாயகம் கருதுகிறார். இக்கூற்றுக்கு மேலும் சான்றாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் 1936 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனத்தில் வரும் "நாகதீப(ம்) என்ற பெயரைக் குறிப்பிடலாம்.

சற்றுப்பிற்பட்ட காலத்தில் எழுந்த சூளவம்சம் என்ற இன்னொரு பாளி நூல் தமிழர்கள் வாழ்ந்த பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரோடு உத்திரசேதம் என்ற பெயராலும் அழைக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இந்நூல் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் உத்திர தேசத்தை சேர்ந்த ஶ்ரீநாக என்பவன் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னனுக்கு எதிராகப் படையெடத்த வரலாற்றைச் சுட்டிக்காட்டுகிறது. இதே பாளி நூலில் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் ஒருவன் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தியும் காணப்படுகிறது. இப்படையெடுப்பை மேற்கொண்ட தென்னிந்திய மன்னன் முதலாம் பராந்தக சோழனாக இருக்கலாம் என்பதை அவனது 37 ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வரும் "ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பர கேசரி வர்மன்" என்ற சொற்தொர் உறுதிப்படுத்துகிறது. இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள ஈழத்து வெற்றி என்பது நாக நாட்டு வெற்றியை குறிப்பதாகக் கொள்ளவத்குப் பல ஆதாரங்களைக் காட்டலாம். இந்த நாகநாட்டு வெற்றியைக் குறிக்கும் வகையில் அவன் "உரக" என்ற பெயரில் (உரசு என்ற வடமொழிச் சொல்லுக்கு நாகம், நாக இன மக்கள் என்ற கருத்துண்டு) நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறலாம். ஏனெனில் இவன் காலத்தில் "நாகதீப" என்ற பெயர் "உரசு" எனவும் அழைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி என்னும் இடத்தில் கிடைத்த இவன் காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று திருகோணமலை நாகநாட்டிற்குரிய இடம் என்பதையும், அங்கிருந்த கிராமம் (உலா கிரிகம்" தமிழல் இதன் பொருள் நாக மலையில் உள்ள கிராமம் என்பதாகும்) சிவன் அலயத்திற்கு மானியமாக வழங்கப்பட்டதையும் கூறுகிறது. இந்த ஈழத்து (நாகநாட்டு) வெற்றியை தொடர்ந்தே அவனால் வெளியிடப்பட்ட 15க்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் "ஈழக்காசு", "ஈழக்கருங்காசு" என்ற பெயர்கள் பயன்டுத்தப்பட்டுள்ளதையும் இவ்விடத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமாகும்.

வடமொழியில் "நாகதீப" அல்லது "உரக" என அழைக்கப்பட்ட இப்பெயர் தமிழல் "நாகநாடு" என அழைக்கப்பட்டு வந்துள்ளதையும் காணலாம். பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் நாகநாடு பற்றிய செய்தகிள் ஆங்காங்கெ காணப்படுகின்றன. இந்த நாகநாடு இலங்கையில் இருந்த நாட்டையே குறித்திருக்கலாம் என்பதற்கு அவ்விலக்கியங்களில் நாகநாட்டோடு தொடர்புபட்டு வரும் வரலாற்றுச் சம்பவங்கள் சான்றாக உள்ளன. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் பல்லவ இளவரசன் ஒருவன் "நாகநாடு" சென்று அங்குள்ள இளவரசியை மணந்ததாக பல்லவச் செப்பேடு ஒன்று கூறுகிறது. தமிழ்நாட்டில் குடுமியா மலை என்ற இடத்தில் கண்டுபிடித்த கி.பி. 1262ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டு ஒன்று சிங்கள அமைச்சன் ஒருவன் பாண்டிய மன்னனிடம் சென்று உதவி கேட்டதன் பேரில் வீரபாண்டியன் என்ற மன்னன் தனது படைகளை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும், அப்படை சிங்கள மன்னனுக்குச் சார்பாக நாகநாட்டின் மீது படையெடுத்து அங்கு ஆட்சி செய்து கொண்டிருந்த சாகவ மன்னனைக் கொன்று அவன் மகளை ஆட்சியில் அமைர்த்தியதாகவும் கூறுகிறது. (Puthukkoddai Inscription No.366) இக்கல்வெட்டில் நாகநாட்டு அரசினது முக்கிய தலைநகரங்களான திரிகூடகிரியிலும், கோணமலையிலும் நாகநாட்டு அரச கொடி பறந்து கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளதைக் கொண்டு நாக நாட்டின் எல்லை கிழக்கிலங்கை வரை பரந்திருந்தமை மேலும் உறுதியாகிறது.

மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த பிராந்தியம் நாகதீபம், நாக நாடு, உரக என வேறுபட்ட மொழிகளால் அழைக்கப்பட்டு வந்துள்ளதையும், அங்கு வாழ்ந்த மக்கள் நாக இனத்துவருடன் தொடர்புடையவர்கள் என்பதையும் வரலாற்று ரீதியாக அடையாளம் காணமடிகிறது. அதில் "நாக" என்ற சொல்லை பயன்படுத்திய அனைவரும் அக்காலத்தில் தமிழர்களாகத்தான் இருந்தார்கள் எனக் கூறமுடியாது. ஏனெனில் மிகப்புராதனகாலத்தில் இப்பெயரை தமிழர்கள் மட்டுமன்றி ஏனைய இன மக்களும் பயன்படுத்தியதற்கு இலங்கையிலும், பிறநாடுகளிலும் உறுதியான பல சான்றுகள் உள்ளன. ஆயினும் இலங்கையைப் பொறுத்த வரை காலப் போக்கில் இங்கு வாழ்ந்த சிங்கள மொழி பேசிய மக்களிடமிருந்து அப்பெயர் படிப்படியாக மறைந்து போக அது தமிழர்களிடம் மட்டுமே நிலைத்திரந்ததைக் காணமுடிகிறது. அந்தப் பாரம்பரிய வரலாற்றுத் தொடர்ச்சி தற்காலத்திலும் நிலைத்திருப்பதை அவர்கள் பயன்படுத்தி வரும் ஆட் பெயர்களும் (நாகன், நாகி, நாகம்பாள், நாகம்மா, நாகமுத்து, நாகராஜா, நாகப்பா, நாகவண்ணன், நாகதேவன், நாகரூபி, நாகரூபன், நாகராணி, நாகமணி, நாகவள்ளி, நாகசீலன்) இடப்பெயர்களும் (நாகர்கோயில், நாகபடுவான், நாகதேவன் துறை, நாகஞ்சோலை, நாகதாழ்வு, நாகமுனை, நாகமலை, நாகர்குளம்) உறுதிப்படுத்துகின்றன. இதனால் உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் வரும் பெயருக்கு "நாகபூமி" அல்லது "நாகவம்சம்" அல்லது "நாகனுடையது" (நாகஹ) என வேறுபட்ட பொருள் கொடுக்கப்பட்டாலும் அப்பெயர் "நாக" இன மக்களையும், அம்மக்களை ஆட்சி செய்த "நாக" வம்சத்தையும், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட "நாக" நாட்டையும் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தமாகத் தெரிகிறது.

இதற்கு சங்ககாலத் தமிழகத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்ற அரச வம்சம் பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தாலும் கூட அப்பெயர்கள் அரச வம்சங்களை மட்டும் குறிக்காது, அவர்கள் ஆட்சி செய்த நாடுகளையும், அந்த நாடுகளில் வாழ்ந்த மக்களையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை இவ்விடத்தில் உதாரணத்திற்கு குறிப்பிடலாம். இந்த வரலாற்று உண்மை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் வரும் "நாக" எனற் பெயருக்கும் பொருத்தமாக இருக்கலாம். ஏனெனில் இந்நாணயம் கண்டெடுக்கப்பட்ட உடுத்துறை என்னும் புராதன கிராமம் பண்டைய காலத்தில் நாக இனமக்கள் வாழ்ந்த இடமாகவும், நாகநாட்டிற்கு உட்பட்ட ஒரு இடமாகவும், நாகவம்சத்தவர் ஆட்சி செய்த நாடாகவும் இருந்து வந்துள்ளதை வரலாற்று மூலங்கள் காலரீதியாக எடுத்துக் கூறுகின்றன. இதனால் அந்த நாக நாட்டை ஆண்ட மன்னன் தானும், தனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களும், அந்த மக்கள் வாழ்ந்த நாடும் "நாக" இனத்து வழி வந்தவர்கள் என பதை எடுத்துக் காட்டும் நோக்கில் தான் வெளியிட்ட நாணயத்தில் "நாக" எனத் தொடங்குமுன்னொட்டுப் பெயரைப் பொறித்தான் என்ற முடிவுக்கு வருவது பொருத்தமாகத் தெரிகிறது.

கலாநிதி ப. புஷ்பரட்ணம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

எரிமலை – செப்ரெம்பர், ஒக்ரோபர் 2003

நன்றி: எரிமலை



# 37ஆம் ஆண்டு வீரவணக்கம்

## 37th Year Veeravanakkam





**கேணல் சங்கர்**

**வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்**

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

18.09.1949 - 26.09.2001

### ஐந்து அம்ச கோரிக்கைகள்:-

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்-வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.

SEPT 26

## "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"



ஈகைச்சுடர்

Thileepan

# லெப். கேணல் திலீபன்

## இராசையா பார்த்தீபன்

ஊரெழு, யாழ்ப்பாணம்

27.11.1963–26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்

### Demand as follows:-

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.
2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.
3. All such rehabilitation should be stopped until an interim government is formed
4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.
5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

# தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# The thirst of the Tamils is the Homeland of Tamileelam

# இந்தியாவில் காந்தி பெற்றுத் தந்த சுதந்திரமும்...!
# ஈழத்தில் அகிம்சையின் உச்சமான திலீபனும்...!

– நவீனன்

13.09.2024

**[இன்று 15.9.1987இல் தமிழரின் உரிமைக்காக தன்னை மெழுகாய் உருகத் தொடங்கிய திலீபனின் உண்ணா விரதம் ஆரம்பமாகிய நாள். மகாத்மா காந்தி உருவாக்கிய அகிம்சை வழி போராட்டம், திலீபனின் தியாகத்தால் உச்சம் தொட்டதை உலகம் உணர முடிந்தது]**



அகிம்சை ஒரு நெடிய போராட்டம். போராடிக் கொண்டே இருக்கலாம். முடிவு போராட்டத்தின் கையில் இல்லை. எதிராளியின் வலிமையை பொறுத்தே உள்ளது.

காந்தியால் இந்திய நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்று கடந்த வருடம் தமிழ்நாடு ஆளுநர் ஆர் என் ரவி சொல்லி இருப்பதை பலரும் விமர்சித்து உள்ளனர்.

இவ்வேளையில் அகிம்சையின் உச்சம் தொட்ட திலீபனின் தியாகத்தையும் உணர வேண்டும். மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் சொல்லியிருப்பது வன்மம் கலந்த நோக்கமே என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், முதல்வர் இதனை கடுமையாக சாடியுள்ளார்.

கடந்த வருடம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ரவி பங்கேற்று பேசினார். அப்போது, மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் பேசிய கருத்துக்கள் விமர்சனத்திற்குள்ளானது.

எனினும் காந்தியின் அகிம்சை அவர் பற்றியும், காந்தி பெற்றுத் தந்த இந்திய சுதந்திரம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ஏன், மகாத்மா காந்தியை விட திலீபனின் தியாகத்தால் சிறந்தவன் என இந்திய அரசியல் தலைவர்களே கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் காந்தி தேசத்தின் தமிழின விரோத நிலைப்பாட்டின் அழியா சாட்சியாக விளங்குவதே தியாக தீபம் திலீபனின் உயிர்க் கொடையாகும். திலீபனின் போராட்டம் மற்றொரு முறை அகிம்சை என்ற தத்துவத்தின் உண்மை நிலையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.




### காந்தியை விட திலீபன் மேலானவன் – வை. கோ:

திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு இருந்த போது, அன்றைய இந்தியத் தூதுவர் தீக்சித் இடம் திலீபனின் உண்ணாவிரதம் பற்றி பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அதற்குப் பதிலளித்த தீக்சித், திலீபன் என்ன மகாத்மா காந்தியா? என்று இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

இந்தியத் தூதுவர் தீக்சித்தின் இந்தக் கூற்று பற்றி பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த வை.கோபால்சாமி அவர்கள், திலீபன் மகாத்மா காந்தியை விட சிறந்தவன் என்று அடித்துக் கூறியிருந்தார்.

திரு வைக்கோ, தனது இந்த வாதத்திற்காக மகாத்மா காந்தியின் சுயசரிதையான சத்திய சோதனையில் இருந்து ஒரு சம்பவத்தையும் எடுத்துக் காண்பித்திருந்தார். மகாத்மா காந்தியின் இளமைப் பருவத்தின் போது அவரது தந்தை காலமாகி விட்டார்.

தந்தையின் பூதவுடல் அஞ்சலிக்காக வீட்டின் கூடத்தில் கிடத்தி இருக்கையில், தனது இளமையின் பாலியல் உணர்ச்சிகளை காந்தியால் கட்டுப்படுத்த முடியாமல் மறைவில் சென்று அதனை தீர்த்துக்கொண்டதாக சத்திய சோதனையில் காந்தி தெரிவித்திருந்தார்.

இளவயதின் உணர்ச்சிகளை மகாத்மாவினாலேயே அடக்க முடியாது இருந்துள்ளது. ஒரு சோகமான நேரத்தில் கூட மகாத்மாவினால் தனது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் அதற்கு வடிகால் தேடிச் சென்றுள்ளார்.



ஆனால் திலீபனோ தனது இள வயதில், அந்த வயதிற்கான அனைத்து உணர்ச்சிகளையும் உதறித் தள்ளிவிட்டு, தனது கொள்கைக்காக தன்னுயிரை தியாகம் செய்ய முன்வந்திருந்தான். இதனாலேயே மகாத்மா காந்தியை விட திலீபன் மேலானவன் என வை.கோபால்சாமி தெரிவித்திருந்தார்.

### ஒப்பிலா அறவழிப் போராளி திலீபன்:

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன் என தன்னுடலுக்கு துரோகமும், தன்னினத்திற்கு தன்னையும் தந்த ஒப்பிலா அறவழிப் போராளி திலீபனின் இறுதி வார்த்தைகளே இவையாகும்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்த ஒரு சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும் என்ற விடுதலைக் கனலை விழியிலேந்திய பார்த்திபன் இராசையா என்னும் இயற்பெயர்கொண்ட திலீபன், நவம்பர் 27, 1963-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் பிரதேசத்தின் ஊரெழு கிராமத்தில் ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தவர். சிறு வயதிலேயே தாயினை இழந்தார். தந்தையின் பாசம், இரு அண்ணன்களின் அரவணைப்பு என மிகவும் செல்லமாக வளர்ந்த திலீபன் படிப்பிலும், அறிவுக் கூர்மையிலும் மிகுந்த திறனுடையவராக இருந்தார்.

இலங்கை அரசு தமிழ் மாணவர்களின் கல்வியை நாசப்படுத்த கொண்டு வந்த தரப்படுத்துதல் அளவையும் தாண்டி அதிக மதிப்பெண் எடுத்து யாழ் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தேர்வாகி படிக்கச் சென்றார். மருத்துவம் படித்து மக்களுக்கு சேவை செய்ய நினைத்த மகத்தான மனிதன் தன்னின மக்கள் சிலரிடம் நோயாக மாறியிருந்த இனவுணர்வுக் குறைபாட்டை போக்க தனது உயிரையே மருந்தாக அளித்த துயரமும் நடந்தேறியது.

காந்தியின் அகிம்சை வழியில் தன் விடுதலையை பெற்றெடுத்ததாக கூறும் இந்தியா, உலகெங்கிலும் அகிம்சை குறித்து அறிவுரை கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, அகிம்சை போராட்டத்தை கையிலெடுத்த திலீபனுக்கு அளித்த பரிசு இது தான்.

உண்மையில் அகிம்சை மூலமாக இந்தியா விடுதலைப் பெற்றது என்பதே இந்திய விடுதலையை ஒட்டி எழுப்பபட்ட மிகைப்படுத்தப்பட்ட பிம்பம் தானே தவிர அகிம்சை மட்டுமே இந்தியாவின் விடுதலைக்கு காரணமாக அமைந்து விடவில்லை. இந்திய விடுதலை அகிம்சையினால் நிகழ்ந்தது என்றால் அதனைவிட ஆயுதமேந்தி போராடிய இந்திய வீரர்களை மறந்துவிட முடியாது.

தமிழ் நாடு ஆளுநரின் கருத்துக்கு கண்டனங்கள் எழுந்தாலும், காந்தியின் அகிம்சையும் திலீபனின் உயிர்க்கொடையையும் ஒரே தட்டில் ஒப்பிட முடியாது. திலீபனுக்கும், காந்திக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. திலீபன் காந்தீய வழியில் தன் போராட்டத்தை முயன்றார். ஆனால் காந்தி போல உயிர் வாழ முயலவில்லை. திலீபன் தன் உயிரை ஒரு பொருட்டாக கருதவில்லை. தியாகத்தின் உச்சத்திற்கே திலீபன் சென்றார்.



# விடுதலைப் போராட்டத்தில்

## எதிரிகளும் – நண்பர்களும் – துரோகிகளும்

ஒரு விடுதலைப் போராட்டம் சரியான திசைவழியில் தனது இறுதி இலக்கை நோக்கி வெற்றி நடை போடுவதற்கு, முதலில் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை தீர்மானிப்பது அடிப்படையானதும் மிக முக்கியமானதுமான ஒரு விடயமாகும்.

பல விடுதலைப் போராட்டங்கள் அடக்கு முறையாளர்களால் முறியடிக்கப்பட்டதற்கும், அவை தமது இலட்சியத்தின் இறுதி இலக்கை அடைய முடியாமல், எதிரிகளிடம் சலுகைகளுக்காக மண்டியிட்டு, சரணாகதியடைந்ததற்கும் இந்த முரண்பாட்டை சரியான முறையில் கணிப்பிடத் தவறியதே அடிப்படைக் காரணமாகும்.

நாங்கள் யாருக்கு எதிராகப் போராடுகின்றோமோ? அவர்கள் எல்லோரும் எதிரிகள். இந்தப் போராட்டத்தில் எமக்கு உதவுபவர்கள் எல்லோரும் நண்பர்கள். இது சிறு பிள்ளைகளுக்கும் தெரிந்த சாதாரணவிடையம் என்று பலர் நினைக்கலாம்.

உண்மையில் இப்படிப் பொதுப்படையாக நுனிப்புல் மேய்வது போல இந்த விடயத்தைப் பார்க்கக்கூடாது.

நாம் வாழுகின்ற இந்த உலகம் முரண்பாடுகளால் கட்டமைக்கப்பட்டது. தனி மனிதர்களுக்கிடையே முரண்பாடு, குழுக்களுக்கிடையே முரண்பாடு, சமூகங்களுக்கிடையே முரண்பாடு, இனங்களுக்கிடையே முரண்பாடு, நாடுகளுக்கிடையே முரணபாடு என்று முரண்பாடு என்பது எங்கும் எதிலும் நிறைந்திருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் இந்த உலகத்தில் வாழுகின்ற ஒவ்வொரு தனி மனிதர்களினதும், சமூகங்களினதும், இனங்களினதும் இருப்பு என்பதும் முரண்பாடுகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இந்த முரண்பாட்டை, அடிப்படை முரண்பாடு, பிரதான முரண்பாடு, என்றும் பின்னர் அதையும் பகை முரண்பாடு, நட்பு முரண்பாடு என்ற வகைப்படுத்திக் கொண்டு போகலாம்.

உதாரணமாக எமது ஈழவிடுதலைப் போராட்டத்தை எடுத்துக் கொண்டால் தமிழ்த் தேசியத்துக்கும், சிங்களத் தேசியத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படை முரண்பாடாகவும், அதே நேரத்தில் சிங்களத் தேசியத்தின் பிரதிநிதிகளாக இருந்து தமிழ் மக்கள் மீது அடைக்குமுறையை திணிக்கும் சிறீலங்கா அரசாங்கத்துக்கும் எமக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகவும் இருக்கிறது.

சிங்களத் தேசியத்துக்கும் தமிழத்தேசியத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படை முரண்பாடு என்கிற போது எந்தவொரு சந்தார்ப்பத்திலும் இந்த இரண்டு தேசிய இனங்களும் தங்கள் சுயத்தை இழந்து ஒன்றாகக் கலந்து இலங்கைத் தேசியம் என்ற ஒரு கூட்டுக்குள் வரமுடியாது. அப்படி வருவதென்பது தமிழ்த் தேசியத்தை சிங்களத் தேசியம் விழுங்கி ஏப்பமிடுவதற்கான சாத்தியப்பாட்டை கொண்டது என்கின்ற தளத்தில் நின்றே பார்க்கப்படுகிறது.

கடந்த நூறு வருடகாலத்துக்கும் மேலாக சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களின் வாழ்வுரிமை, நிலவுரிமை, சொத்துரிமை, அரசியல் உரிமை உள்ளடங்கலான அனைத்து அடிப்படை உரிமைகளையும் பறித்த ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியின் அனுபவப் பாடங்களின் அடிப்படையில் இது ஒரு அடிப்படை முரண்பாடாக நிறுவப்பட்டுவிட்டது.

பிரித்தானிய காலனி ஆட்சிக்காலத்திலேயே இந்த இன முரண்பாடு அடிப்படை முரண்பாடாக இருந்த போதிலும் அப்போது அதிகாரம் பிரித்தானியர்கள் கையில் இருந்ததால், இது பிரதான முரண்பாடாக ஆகவில்லை. ஆனால் 1948 ெப்பரவரி மாதம் 4ஆம் திகதி அதிகாரம் சிங்களப் பெரும் தேசியவாதிகளிடம் கைமாறிய பின்பு தமிழ் தேசிய இனம் தன்னுடைய இருப்பை அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டுமானால் சிங்கள தேசியத்துடன் போராடித்தான் ஆகவேண்டும் என்ற நிலை தோன்றியதுடன் இந்த முரண்பாடு பிரதான முரண்பாடாகவும் கூர்மையடைந்தது. அதேவேளை 1980களின் பின்னர் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு பிரகடனப்படுத்திய யுத்தத்தை திணித்த பின்பு இது இன்னும் கூர்மையடைந்து அடிப்படை முரண்பாடு பிரதான முரண்பாடு பகை முரண்பாடு என்று மூன்று பரிமாணங்களையும் எடுத்தது.

இது தான் நாம் எமது போராட்டத்தில் எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்பதை கோட்பாட்டு ரீதியாக நிறுவுவதற்கான சரியான தளமாகும்.

தமிழர்களான எம்மைப் பொறுத்தவரை சிறீலங்கா அரசம் அதை தாங்கிநிற்கின்ற அதிகார வர்க்கமும் அந்த அரசின் ஆயுதப்படைகளும் அந்த அரசுக்கு துணை போகின்ற கண்ணுக்குத் தெரிந்த அல்லது தெரியாத அனைத்து ஆதிக்க சக்திகளும் நமது எதிரிகள் என்ற வரையறுத்துக் கொள்ளலாம். தமிழ் மக்களின் நலனில் உண்மையான அக்கறையுள்ள, சிங்களப் பேரினவாதிகளிடம் அடிமைப்பட்டுள்ள நமது தாயகத்தை மீட்க வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்கும் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அடுத்து எதிரிகள் யார் என்பதை நாங்கள் இனம்காணும் போது எதிரிக்கு எதிராக போராடுபவர்கள் எதிரியின் எதிரிகள் எல்லோரும் நமது நண்பர்கள் என்று சிலர் சாதாரணமாக முடிவு கட்டி விடுகின்றார்கள். இது ஒரு தவறான பார்வையாகும். பல விடுதலைப் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டதற்கும் தோல்வியில் முடிந்ததற்கும்இந்த தெளிவற்ற பார்வைதான் காரணமாக அமைந்திருக்கிறது.

ஏனென்றால் எதிரியை நாங்கள் சுலபமாக இனங்காண முடியும். அவன் என்னதான் வேஷங்கள் போட்டாலும் அவனது ஒவ்வொரு நகர்வையும் தன்னை மையப்படுத்தி அமைக்கின்ற வியூகங்களையும் வைத்து நாங்கள் சுலபமாக அவனை இனங்கண்டுவிடலாம்.

ஆனால் நண்பர்கள் இனங்காண்பதென்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. ஏனென்றால் நண்பர்களுக்குள் எப்போதும் எதிரிகள் ஒழித்திருப்பார்கள். அதைவிட எதிரியை விட ஆபத்தான துரோகிகள் மறைந்திருப்பார்கள்.

நண்பர்கள் என்று சொல்கின்ற போது அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவு என்ன? அவர்களுக்கு இருக்கக் கூடிய முரண்பாட்டின் தன்மை என்ன? அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் இருக்கக் கூடிய முரண்பாட்டின் தன்மை என்ன என்பதை எல்லாம் நாங்கள் சரியான முறையில் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களான எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் எங்கள் பிரதான எதிரியான சிறீலங்கா அரசிடமிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடுகின்றோம். எங்களுடைய போராட்டத்தை ஆதரிக்கின்ற எங்களுடைய போராட்டத்துக்கு உதவுகின்ற எல்லோருமே எங்களது நண்பர்கள் என்று நாங்கள் சொல்வதானால், முதலில் அந்த நண்பர்கள் நம்மை ஆதரிப்பதற்குரிய நமக்கு உதவிசெய்வதற்குரிய நோக்கம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும்.



உதாரணமாக சிங்கள மக்கள் மத்தியில் இருந்து அல்லது சிங்களக் கட்சிகளிலிருந்து சிலர் எங்களுக்கு உதவமுன்வருகின்றார்கள் என்றால் எந்த அடிப்படையில் அவர்கள் எங்களுக்கு உதவ முன்வருகின்றார்கள், எங்களுடைய பிரதான எதிரியான சிறீலங்கா அரசுக்கும் அவர்களுக்கும் இடையிலான முரண்பாடு என்ன?

இந்த முரண்பாட்டை கையாள்வதன் மூலம் நமக்குக் கிடைக்கக் கூடிய இலாபம் என்ன? என்பதையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் அவர்களை நாங்கள் எமது நண்பர்களாக்கிக் கொள்ள முடியும். அதுவும் எதிரியின் எதிகள் எமக்கு நண்பர்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் அதை செய்யமுடியும். இந்த எதிரியின் எதிரிகள் நாளைக்கு எதிரியின் நண்பர்களாகி விட்டால் எங்களின் எதிரிகள் ஆகிவிடுவார்கள் என்பதையும் இந்த விடயத்தில் நாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து எங்களுக்குள் இருக்கும் நண்பர்களை எப்படி இனங்காண்பது என்பது ஒரு முக்கியமான பிரச்சினை எங்களுக்குள் இருந்தும் நிறையப்பேர் “நாங்கள் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றோம், உரிமைக்காக போராடுகின்றோம்” என்று சொல்லிக் கொண்டு வருவார்கள்.

இதிலே உண்மையாக மக்களின் விடுதலைக்குப் போராடுபவர்கள் யார்?

போராட்டத்தை வைத்து பிழைப்பு நடத்துபவர்கள் யார்? என்பதை நாம் சரியாக இனங்காண வேண்டும்.

ஏனென்றால் போராளிகளைவிட பிழைப்பு வாதிகள் தாங்கள் அதிகளவுக்கு மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும், மக்களுக்கு பலனை எதிர்பார்க்காமல் சேவை புரிபவர்களாகவும் தங்களை சுயவிளம்பரப்படுத்திக் கொண்டு வருவார்கள்.

பட்டம், பதவி, வேலைவாய்ப்பு, பெற்றுத்தருபதாகவும் கோவில், குளங்களை புனரமைத்து திருப்பணி செய்து தருவதாகவும் சொல்லி மக்களை உரிமைப் போராட்டத்தில் இருந்து திசை திருப்புவதற்கு இவர்கள் எப்பொதும் முயன்று கொண்டிருப்பார்கள்.

எதிரிக்கும் இவர்களுக்கும் உள்ள உறவு என்பது நட்பு ரீதியானது. எங்களுக்குள் இருந்து கொண்டு தங்களுடைய பிழைப்புக்காக எதிரிக்கு துணைபோகும் இவர்கள் எப்போதுமே ஆபத்தானவர்கள்.

உதாரணமாக 1980 காலப்பகுதியிலே தமிழ் மக்களின் விடுதலைக்காக என்று சொல்லிக் கொண்டு பல இயக்கங்கள் மக்கள் மத்தியில் உலா வந்தன. சிங்கள சாவோனிஸ்ட் அரசு, சிங்கள பௌத்த இனவாத அரசு, ஆயுதப் புரட்சி, மக்கள் விடுதலை, சோசலிசத் தமிழீழம் என்றெல்லாம் அரசியல் வார்த்தை அலங்காரங்களை அள்ளி வீசிக் கொண்ட உலா வந்த இந்த இயக்கங்கள் இப்போது எங்கே என்று பார்த்தால் அன்று அவர்கள் விமர்சித்த அதே சாவோனிஸ்ட் (பேரினவாதம்) அரசின் காலடியை நக்கிக் கொண்டிருக்கின்றன.

விடுதலை சாத்தியம் இல்லை, ஆயுதப் போராட்டம் சாத்தியமில்லை, உரிமைகளை போராடிப் பெற முடியாது, யாசித்துத்தான் பெறவேண்டும். பாராளுமன்ற வழிமுறைகள் உன்னதமானவை என்றெல்லாம் இந்த முன்னாள் ஆயுதக் குழுத் தலைவர்களில் பலர் இப்போது பொன் மொழிகளை உதிர்த்துக் கொண்டிருப்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம்.
1984-85களில் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் சென்னைத் தெருக்களில் தாலிக் கொடிகளை சங்கிலிகளை அறுத்த, ஆட்களை கடத்தி காசு பறித்து கொலை செய்த இவர்கள், இன்று பெரும் கோடீஸ்வரர்கள். பெரிய ஜனநாகயகவாதிகள் மந்திரிகள். இயற்கை கடன் கழிப்பதற்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் கழிப்பறை இல்லாவிட்டால் இவர்களுக்கு சரிப்பட்டு வராது.

இந்தப் பணமும் பகட்டும் எங்கிருந்து வந்தது?

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை காட்டிக் கொடுப்பதற்கும், போராளிகளின் தியாகத்தை கொச்சைப் படுத்துவதற்கும் கிடைக்கின்ற சன்மானம்தான் இவையாகும்.

தமிழ் மக்களின் விடிவுக்காக விடுதலைக்காக தொடக்கிய ஆயுதப் போராட்டத்தை பணத்துக்காகவும், பதவிக்காகவும் விலைபேசி விற்ற இன்றும் விற்றுக் கொண்டிருக்கும் இவர்களை, எங்களது நண்பர்கள் என்றோ - இவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள முரண்பாடென்பது நட்பு முரண்பாடென்றோ எப்படிச் சொல்ல முடியும்?

தமிழ் மக்களைப் பொறுத்த வரை 1833ம் ஆண்டும் 1972 ஆண்டும் மிக முக்கியமானவை.

1833ம் ஆண்டு பிரித்தானிய காலனிய ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தை அதன் இறைமையை இலங்கை பாராளுமன்ற அமைப்புமுறை என்ற ஒற்றையாட்சிச் சிறைக்குள் அடைத்த ஆண்டாகும்.

1972ம் ஆண்டு சிங்கள தேசியம் பிரித்தானிய சார்புப் பாராளுமன்ற ஆட்சி முறைக்கு முடிவுகட்டி “சிறீலங்கா” ஜனநாயக சோசலிசக் குடியரசு” என்ற தனது நலனுக்கான ஆட்சிமுறையை உருவாக்கி தமிழர் தாயகத்தை மறுபடி சிறீலங்கா என்ற சிறைக்குள் அடைத்த ஆண்டாகும்.

பிரித்தானிய மொழியில் சிந்தித்து, பிரித்தானியப் பார்வை பார்த்து, பிரித்தானிய பாராளுமனற் ஆட்சிமுறையை தூக்கி வைத்துக் கொண்டாடிய முன்னாள் தமிழ்த்தலைமைகள், முரண்பாட்டை சரியாகக் கவனிக்கத் தவறியதன் விளைவுதான் இன்று தமிழினம் சந்தித்த இழப்புகளுக்கெல்லாம் அடிப்படையாகும்.

1833ம் ஆண்டு பிரித்தானிய காலனிய ஆட்சியின் அரசியல் சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட எமது தாயகத்தின் மீதான ஆளுமை, 1972ல் சிங்கள தேசம் பிரித்தானிய அரசியல் யாப்பை தூக்கி எறிந்துவிட்டு தனக்கென புதிய குடியரசு அரசியல் யாப்பை உருவாக்கியபோது விடுபட்டுப் போனது. அதாவது தமிழர் சேதம் அரசியல் சட்ட ரீதியாக மற்றவர்களால் ஆளுமை செய்யப்பட முடியாத ஒரு தேசமாக மாறியது.

ஆனால் சிறீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தில், 6 மாதகாலத்துக்குள் வந்த அந்த அரசியல் அமைப்புக்கும், அந்த நாட்டுக்கும், அந்த நாட்டின் கொடிக்கும் விசுவாசமாக இருப்போம் என்று உறுதி மொழி எடுத்துக்கொள்ளா விட்டால் பாராளுமன்றப் பதவிகள் பறிபோய்விடும் என்று அறிவிப்பு வந்தபோது அப்போதைய தமிழ்த்தலைவர்கள் ஓடோடிச் சென்று உறுதிமொழி எடுத்து எங்கள் தேசத்தை மறுபடியும் சிறீலங்காவுக்கு அடிமையாக்கிய வரலாறு மறக்க முடியாதது. அதுவும் பாராளுமன்றத்துக்குச் செல்லாவிட்டால் தமிழ் மக்களது உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்று அதற்கு நியாயம் கற்பித்தது மன்னிக்க முடியாத ஒன்று.

சிங்கள தேசத்துக்கும், தமிழத் தேசத்துக்கும் இடையிலான முரண்பாட்டை நட்பு முரண்பாடாகக் கருதி, பாராளுமன்றத்தில் அரசியல் சாசன விதிகளுக்கூடாக இந்த முரண்பாட்டைத் தீர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்று விடலாம் என்று எண்ணிய அவர்களது முட்டாள் தனம் தான் 1958, 1961, 1977, 1983 இனக் கலவரங்களாக வெடித்து தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் காவுகொண்டது.

அதேபோல ஆயுதக்குழுக்களாக இருந்து இன்று அடிவருடிக் குழுக் களாக மாறியிருக்கும் துரோகிகள்தான் கொக்கட்டிச்சோலை, மயிலந்தனை, சென்ரல்காம்ப், வல்வை படுகொலைகளுக்கும், செம்மணி போன்ற புதைகுழிகளுக்கும் காரணமானவர்கள் என்பதை மறுக்க முடியாது.

எனவே எப்படி சிங்கள பேரினவாத அரசுக்கும் எமக்கும் உள்ள முரண்பாடு அடிப்படை முரண்பாடாகவும், பிரதான முரண்பாடாகவும், பகை முரண்பாடாகவும் இருக்கிறதோ. அப்படித்தான் அந்த சிங்கள பேரினவாத அரசின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு துணை போகும் துரோகிகளுக்கும், துரோகச் குழுக்களுக்கும், எமக்குமுள்ள முரண்பாடும் பிரதான முரண்பாடாகவும், பகை முரண்பாடாகவும் இருக்கிறது.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் எப்படி எதிரியின் விடயத்தில் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க முடியாதோ அப்படித்தான் துரோகிகள் விடயத்திலும் என்பது உண்மையாகும்.

எதிரிகளை விட ஆபத்தான துரோகிகள் விடயத்தில் ஜனநாயகம், பன்முகத் தன்மை எல்லாம் பார்க்க முடியாது. ஏனென்றால் எதிரியிடம் மண்டியிட்ட இனமும், துரோகிகளை வாழ விட்ட இனமும் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. இது உலக விடுதலை இயக்கங்களின் வரலாறுகள் நமக்கு உணர்த்தி நிற்கும் பாடமாகும்.

- திறலோன்




# ‘பேசுவோம் போரிடுவோம்’ படைத்த க.வே. பாலகுமாரன்: ஈழப் புரட்சிக்காக ஆகுதியாகிய தர்க்கீகவாதி!


– நவீனன்

11.09.2024

**(நறுங் குறுந்தாடிக்கு சொந்தக்காரனான தோழர் வே.பாலகுமார் புன்முறுவல் என்றும் பூத்தவரும், நேரியபார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர். ஈழப் புரட்சிக்காக தன்னையே ஆகதியாக் கிய தர்க்கீகவாதி க.வே.பாலகுமாரனின் 77 வது பிறந்த நாள் (15 – 09 – 1947) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)**

புன்முறுவல் என்றும் பூத்த குறுந்தாடிக்கு சொந்தக்காரனான தோழர் வே.பாலகுமார் நேரியபார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர். தமிழர் தேசம் திட்டமிட்ட இனவழிப்பை எதிர் கொண்டு அதற்கெதிராக போராட வேண்டிய வரலாற்றை நோக்கிப் பயணித்த காலத்தில் தன்னெழுச்சியாக தன் தலைமையில் ஒரு விடுதலை இயக்கம் கட்டி போராட எழுந்தவர் க. வே. பாலகுமாரன் அவர்கள்.

இன விடுதலைக் கனவைச் சுமந்து இன்னமும் நிற்கும் தமிழரின் போராட்ட வாழ்வியலை “பேசுவோம் போரிடுவோம்” எனும் புத்தகத்தின் ஒவ்வொரு கட்டுரையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று ஆவணச் சாட்சியங்களாக விளங்குகின்றன.





தமிழ் தேசத்தின் விடுதலைக் கனவைச் சுமந்து நிற்கும் ஈழத்தின் தொன்மையான வரலாற்றில் தமிழ்த் தேசிய இனம் தமக்கான தேசத்தில் தம்மைத் தாமே ஆளும் அரசாட்சி கொண்ட தேசமாக பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த வரலாற்றை பாலகுமாரன் தெளிவாக இந்நூலில் வெளிப்படுத்தி உள்ளார்.

பிற்கால வரலாற்றில் சிங்கள இனமும் இத்தேசத்தில் எவ்வாறு வந்து சேர்ந்தார்கள் என்பதை வரலாற்று ரீதியாக நிறுவப்பட்ட சான்றுகளை ஆதாரபூர்வமாக க.வே.பாலகுமாரனின் “பேசுவோம் போரிடுவோம்” நூல் உறுதிப்படுத்தி உள்ளார்.

இந்நூல் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் பல்வேறு காலக்கட்ட நிகழ்வுகளை நமது கண்முன்னே நிறுத்துகிறது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் புரட்சியாளராகப் பங்கெடுத்துக் கொண்ட க.வே.பாலகுமாரன் வரலாறு மற்றும் அரசியலில் தாம் பெற்ற பட்டறிவுகளை நேர்த்தியான வடிவில் அனைத்துலக அரசியல் நகர்வுகளோடு இணைத்து எழுதுவதில் புலமைப் பெற்றவர்.

அரசியல் தளம் மட்டுமின்றி தமிழரின் அறிவியல், சங்க இலக்கியம், தொல்லியல் என பல்துறை ஆளுமையோடு கட்டுரைகளை எழுதுபவர். ஈழ போராட்டத்தில் உன்னத புரட்சியாளரான தோழர் க. வே. பாலகுமாரன் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். இவர் விடுதலைப் புலிகளுக்கு ஒரு அரசியல் மதியுரைஞராக செயற்பட்டார்.

புலிகளுடன் இணையும் முன்னர் இவர் ஈழ புரட்சி அமைப்பின் செயலதிபராக இருந்தார். பின் ஈரோஸ் அமைப்பு விடுதலைப் புலிகளுடன் 1990களின் இறுதியில் சுயமாக இணைந்ததும் அறிந்ததே.



தமிழர் விடுதலைக் களத்தில் போரிடுவதோடு மட்டுமின்றி, தமிழீழ மக்களின் அரசியல் தெளிவிற்காக, பல்வேறு காலக் கட்டங்களில் ஆழ்ந்த அரசியல் நுண்ணறிவை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கட்டுரைகளை எழுதி அரும்பணியாற்றியவர் க.வே. பாலகுமாரன் அவர்கள்.

காலத்தின் தேவை கருதி தன்னை களத்தில் இணைத்துக் கொண்டு இறுதிவரை தளத்தில் நின்று தோள்நின்ற ஆய்வாளருமான திரு. க. வே பாலகுமாரன் அவர்களது ஆக்கங்களின் தொகுப்பான பேசுவோம் போரிடுவோம் என்ற நூல் வெளியீடு ஐரோப்பாவில் பல நாடுகளில் நிகழ்ந்தது.

க.வே.பாலகுமாரனின் ‘பேசுவோம் போரிடுவோம்’ நூல் விடுதலைப் போராட்ட வரலாற்றின் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துகிறது.

க.வே.பாலகுமாரன் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழீழ அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு “பேசுவோம் போரிடுவோம்” என்ற தலைப்பில் வெளியாகி உள்ள இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டுரையும் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று ஆவண சாட்சியப்பதிவுகளாக விளங்குகின்றன.

### பாலகுமாரன் – புரட்சியின் ஒளிர்முகம்:

பொதுவுடமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பாலகுமார் புன்முறுவல் என்றும் பூத்த குறுந்தாடிக்கு சொந்தக்காரனாக, நேரியபார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர்.

தமிழ் தேசிய விடுதலைப் பாதையில் நிதர்சனமாய் பாலகுமார் தன்னை இளம் பராயத்திலிருந்தே இணைத்துக் கொண்டவர். ஈழப் போராட்ட நான்கு தசாப்தங்களாக தனிமனித வரட்டுவாத பிரச்சாரங்களை தவிர்த்து, மக்களுடன் மக்களாய் போராட்ட களத்தில் தன்னை தியாகித்தவர். தமிழ் தேசியத்திற்காய் தோள் நின்று தியாகித்த யதார்த்தவாதியே தோழர் பாலகுமாரன்.

தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பரந்துபட்ட மக்கள் போராட்டமாகவும் அதேவேளையில் சமூக நீதிக்கான போராட்டமாகவும் அமைய வேண்டும் என்பதில் நம்பிக்கை என்றும் கொண்டவர். அவர் ஈழப்புரட்சிக்காய் தன் வாழ்வையே ஆகுதியாகிய தர்க்கீகவாதி ஆவார்.

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்:

முள்ளிவாய்க்கால் போர் மௌனிப்பின் பின்னர் 2009இல் தனது மகன் சூரியதீபனுடன் விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக முதலில் தகவல்கள் வெளியானதன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட போராளிகளில் பாலகுமாரும் ஒருவர்.

ஆனாலும் தோழர் பாலகுமார் எங்கு கொண்டு செல்லப்பட்டார், எந்த இரகசிய சித்திரவதை முகாமில் மறைத்து வைக்கப்பட்டார் என்கிற தகவல்கள் எதுவும் பின்னாளில் வெளிவரவில்லை.

2009இல் அன்றைய சிங்கள அரசின் புனர்வாழ்வு அமைச்சரோ, பாலகுமார் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டார் என்றும், அவர் அரச படைகளிடம் சரணடையவில்லை என்றும் அப்பட்டமான பொய்யை சொன்னார். முள்ளிவாய்க்காலில் உச்ச கட்ட இன அழிப்புப்போர் நடந்து முடிந்து பல ஆண்டுகள் ஆனாலும் இன்னும் நீதியின் கண்கள் திறக்குமா என்று ஏக்கத்தோடு காத்திருக்கும் எண்ணற்ற ஈழ மக்களில் அவரும் ஒருவர்.




உலகத்தின் மனசாட்சியை உலுப்பி, மௌனித்த முள்ளிவாய்க்கால் போரின் இறுதியில், தமிழ் மக்களில் உள்ள ஏக்கமெல்லாம் மண்ணை மீட்க தம்மைத் தொலைத்துக் கொண்ட பாலகுமாரும் சரணடைந்த மற்றய போராளிகளும் எப்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள் என்பதுதான்.

உலகப் புரட்சியாளர் வரிசையில் தோழர் பாலகுமாரனும் தனித்துவமாக என்றும் பிரகாசிக்கின்றார். மௌனிக்கப்பட்ட போராட்டத்தின் இறுதிக் கணங்களில் தோழர் பாலகுமார் மாயமானது உலகின் மனச்சாட்சியையே உலுப்பியுள்ளது.

அவருடன் தேச விடியலுக்காய் பயணித்த தோழர்களும், மக்களும் தோழர் வே.பாலகுமாரை ஒரு போதும் மறவர். இன்றல்ல, என்றாவது ஓர் நாளினில் வரலாறு அவரை விடுதலை செய்யும் என்ற நம்பிக்கைகளுடன் ஈழவர் காத்திருக்கின்றனர்.

# அரியநேந்திரனை எம்.ஜி.ஆர் ஆக்கியது யார்?

02.09.2024



ஒரு நண்பர் பகிடியாகச் சொன்னார், "சுமந்திரன் நம்பியாராக மாறி அரியனேந்திரனை எம்.ஜி.ஆர் ஆக்கிவிட்டார், இனி நடக்கப் போவது எம்.ஜி.ஆருக்கும் நம்பியாருக்கும் இடையிலான சண்டை. தமிழ் கூட்டு உளவியல் என்பது கதாநாயகன் - வில்லன் என்ற துருவ நிலைப்பட்ட மோதலை ரசிப்பது. நமது புராணங்களில் இருந்து திரைப்படங்கள் வரையிலும் அப்படித் தான் காணப்படுகின்றன. இந்நிலையில் தமிழரசுக் கட்சியை தமிழ்க் கூட்டு உணர்வுக்கு மாறாக சஜித்தை நோக்கி திருப்பியதனால் சுமந்திரன் இப்பொழுது வில்லனாக காட்டப்படுவார். அவர் வில்லனாகவும் அரியநேத்திரன் கதாநாயகனாகவும் காட்சிப்படுத்தப்படும் பொழுது அங்கே ஒரு திரைப்படம் ஓடும். அது தமிழ் பொது உளவியலைக் கவரும். இனி தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பிரச்சாரம் தன்பாட்டில் நடக்கும். கதாநாயகனுக்கு வில்லனுக்கு இடையிலான மோதல்.அது அரியநேத்திரனை நோக்கி அதிகம் வாக்குகளை ஈர்க்கும்" என்று.

ஆனால் அரியநேத்திரனை ஒரு பொது வேட்பாளராக முன்னிறுத்திய பொதுகட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மக்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள்... "தமிழ் மக்களைத் திரட்டுவது; அல்லது ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் மக்களை ஒன்றிணைப்பது; அல்லது தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ செய்யப்படும் விடயம் அல்ல என்று. ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ தேசத்தைக் கட்டி எழுப்ப முடியாது. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஆக்கபூர்வமானது. அது எதிர்மறையானது அல்ல. இந்த இடத்தில் வில்லர்களை முன்வைத்து அவர்களுக்கு எதிராக ஒரு மக்கள் கூட்டத்தை கட்டமைப்பது நிரந்தரமானது அல்ல. சரியானதுமல்ல" என்பது தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் அங்கம் வகிக்கும் கருத்துருவாக்கிகளின் நிலைப்பாடாகும்.

ஆனால் தேர்தல் களம் அந்த நிலைபாட்டிற்கு மாறாக கதாநாயகன் - வில்லன் என்று துருவ நிலைப்படத் தொடங்கிவிட்டது. அதாவது தமிழ்ப் பொது உளவியலின் பொதுவான வாய்ப்பாட்டுக்குள் அது விழத் தொடங்கிவிட்டது. இதனால் அரியநேத்திரனை நோக்கி குவியும் வாக்குகளின் தொகை அதிகரிக்கலாம்.

தமிழரசுக் கட்சியில் உள்ள சுமந்திரன் அணியின் இந்த முடிவு ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது. அதில் புதிதாக ஒன்றும் இல்லை. ஏற்கனவே கட்சியின் இரண்டு மாவட்டக் கிளைகள் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை உறுதியாக எடுத்திருந்த ஒரு பின்னணியில், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கின்றது.

கட்சியின் மூத்த உறுப்பினராகிய சிவஞானம் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை சஜித்தை ஆதரிப்பது மக்களுடைய கூட்டுணர்வுக்கு எதிரானது என்பது அவருக்கு தெரிகிறது. இது கட்சித் தொண்டர்களுக்கும் தெரிகிறது. கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, அரசியலை கணிதமாக, விஞ்ஞானமாக அணுகும் யாருக்கும் அது தெளிவாகத் தெரியும். சஜித்திடம் 13ஐத் தவிர வேறு எதுவும் இல்லை. சமஸ்டி கட்சி ஆதரவாளர்கள் 13-வது திருத்தத்தை ஒரு வாக்குறுதியாக ஏற்றுக் கொள்ள தயாரா?



13 ஒரு புதிய தீர்வு அல்ல. ஏற்கனவே யாப்பில் இருப்பது. அப்படிப் பார்த்தால் யாப்பை நிறைவேற்றுவேன் என்று கூறும் ஒரு வேட்பாளருக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி கேட்கின்றதா? இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால், ஒரு நாட்டின் அதி உயர் சட்ட ஆவணமாகிய யாப்பை நிறைவேற்றுவது தான் அந்நாட்டின் தலைவர்களுடையதும் அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். இலங்கைத் தீவு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையைக் கொண்டது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எட்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் பதவியில் இருந்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே யாப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தவில்லை என்பது எதனைக் காட்டுகிறது? நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் இலங்கைத் தீவின் யாப்பை மீறி ஆட்சி செய்திருக்கிறார்கள் என்பதை காட்டுகின்றது. கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக யாப்பை மீறும் ஒரு பாரம்பரியத்தை கொண்ட ஒரு நாட்டில் இப்பொழுது ஒரு தலைவர் யாப்பை அமல்படுத்துவேன் என்று கூறுகிறாராம் அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமாம்.

சுமந்திரன் அணியின் இந்த முடிவு தமிழரசு கட்சிக்குள் மேலும் பிளவுகளை அதிகப்படுத்துமா? பொது வேட்பாளர் விடயம் தமிழரசு கட்சிக்குள் ஏற்கனவே காணப்படும் தலைமைத்துவப் போட்டியை மேலும் ஆழப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான அலையொன்று எழத் தொடங்கியிருக்கும் ஒரு பின்னணியில், சுமந்திரன் அணியின் முடிவு வந்திருக்கிறது. இலங்கை போன்ற நாடுகளில் தேர்தலுக்கு முதல் வாரம் அல்லது சில நாட்களுக்கு முன்னர்தான் வாக்களிப்பு அலை தோன்றும். தமிழ்த் தேசிய அரசியலுக்கும் இது பொருந்தும்.

தமிழ் நடுத்தர வர்க்கத்தில் ஆங்கிலம் தெரிந்த ஒரு பகுதியினர் ரணில் மீதும் ஆர்வமாக காணப்படுகிறார்கள். மாற்றத்தை விரும்பும் மற்றொரு பிரிவினர் அனுரமீதும் ஆர்வமாக காணப்படுகிறார்கள். இப்பொழுது தமிழரசு கட்சியின் சுமந்திரன் அணியானது சஜித்தை ஆதரிக்குமாறு கேட்டு இருக்கிறது. அதனால் தமிழ் வாக்காளர்கள் நான்கு முனைகளில் சிதறடிக்கப்படுவார்களா?

அவ்வாறு தமிழ் வாக்காளர்கள் சிதறடிக்கப்படக்கூடாது என்று முடிவெடுத்துத்தான் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கிறார். தமிழ் மக்களைக் கோர்த்துக்கட்டுவது, கூட்டிக்கட்டுவதுதான் என்று பொது வேட்பாளரை ஆதரிக்கும் தரப்பு தொடர்ச்சியாக கூறி வருகின்றது. ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முதன்மைக் காரணம் தமிழ் மக்களை ஒன்றிணைப்பது. தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பது. தமிழ்க் கூட்டு உளவியலை பலப்படுத்துவது என்று அவர்கள் கூறி வருகிறார்கள். அதாவது அவர்கள் தமிழ் வாக்காளர்களைத் திரட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் சுமந்திரனும் அவருடைய அணியும் தமிழ் வாக்காளர்களைச் சிதறடிக்கலாம் என்று நம்புகிறார்கள். உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் தாங்கள் எடுத்த முடிவை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என்று அவர்கள் நம்பக் கூடும்.

ஆனால் தமிழ் மக்கள் கூட்டுணர்வோடு முடிவெடுத்த தருணங்களில் கட்சியையோ சின்னத்தையோ தலைவர்களையோ பொருட்படுத்தவில்லை என்பதற்கு கடந்த நூற்றாண்டு முழுவதிலும் உதாரணங்கள் உண்டு. கடந்த நூற்றாண்டில், ஜி ஜி பொன்னம்பலம் மகாதேவாவை தோற்கடித்தார். "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று கூறித் தோற்கடித்தார். இராமநாதன் குடும்பத்தில் வந்த உயர் குழாத்தைச் சேர்ந்த மகாதேவாவை ஜி.ஜி தோற்கடித்தார். செல்வநாயகம் ஜி.ஜியை இலட்சியத்தின் பெயரால் தோற்கடித்தார்.


அதன் பின் தமிழ் ஐக்கியத்தின் பெயரால் கொள்கைக்காக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளிக் கொடுத்தார்கள். அதன் பின் இந்திய அமைதி காக்கும் படை நாட்டில் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில், நடந்த பொதுத் தேர்தலில், முன்பின் அறிமுகம் இல்லாத சுயேட்சை சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். உதய சூரியனைப் பின்னுக்குத் தள்ளினார்கள். வேட்பாளர்களின் முகமே தெரியாத ஒரு போர் சூழலில், தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வெளிச்ச வீட்டு சின்னத்துக்கு வாக்களித்து, 13 ஆசனங்களை ஈரோஸ் இயக்கத்துக்குக கொடுத்தார்கள். தேர்தலில் ஈரோஸ் இயக்கத்தின் பிரமுகராகிய பராவை இந்திய அமைதி காக்கும் படை கைது செய்து முகாமில் அடைத்து வைத்திருந்தது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த பொழுது கைதியாக இருந்த பராவை "நீங்கள் இப்பொழுது எம்பி ஆகிவிட்டீர்கள் வெளியே போகலாம்"என்று கூறி அனுப்பி விட்டார்கள்.

அத்தேர்தலுக்குப் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதயமாகிய பொழுது உதயசூரியன் சின்னத்தை தமிழ் மக்கள் தோற்கடித்தார்கள். உதய சூரியன் சின்னமானது ஒரு காலம் வெற்றியின் சின்னமாக இருந்தது. ஐக்கியத்தின் சின்னமாக இருந்தது. அப்படிபட்ட உதயசூரியன் சின்னத்தை தோற்கடித்த ஒரு மக்கள் கூட்டம், முகம் தெரியாத வேட்பாளர்களுக்கு வாக்களித்து சுயேட்சையை வெல்ல வைத்த ஒரு மக்கள் கூட்டம், கூட்டுணர்வோடு முடிவெடுக்கும் பொழுது, சின்னமும் கட்சியும் ஒரு பொருட்டே அல்ல.

நன்றி: நிலாந்தன்



# எங்களிடம்
# எஞ்சியிருக்கும்
# ஒரே ஆயுதம்
# வாக்குகள்
# மட்டும்தான்
## இம்முறையாவது
## இலக்குத் தவறாது
## பிரயோகிப்போம்



ஜனாதிபதித் தேர்தல் – 2024

தமிழ்ப் பொதுவேட்பாளர்

# பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

# திலீபன் ஆக்கிரமிப்புக்கு எதிரான குறியீடு

இன்றை உலகின் இயங்குதிசையுடன் இணைந்து தமிழ்த் தேசிய இனமானது தனது இலட்சிய இலக்கினை நோக்கி மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

இந்தப் போராட்ட நகர்வில் அசையும், அசையாச் சொத்துக்களின் இழப்புக்களும், பெறுமதிமிக்க மனித இழப்புக்களும் ஏற்பட்டாலும் இந்த இழப்புக்கள் யாவற்றையும் ஒரு அசாத்திய மன உறுதியுடன் தாங்கிக் கொண்டு அழுகைக்கும் விம்மல்களுக்குமிடையே அடுத்த சந்ததியின் எதிர்கால நலன்களை மனதிருத்தி மென்மேலும் உறுதிபெற்று முன்னோக்கிச்சென்று கொண்டிருக்கின்ற தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் அவ்வப்போது ஏற்படுகின்ற திருப்புமுனைகளூடாக முன்னிலும் வேகமாக ஒரு பாய்ச்சலில் தடைகளைக் கடந்து முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழீழ போராட்ட வரலாற்றில் பல திருப்பு முனைகள் இருந்தாலும் 1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையின் வருகையினூடாக ஏற்பட்ட திருப்புமுனையானது தமிழீழ மக்களின் விடுதலைப் பற்றை மேலும் உறுதி கொள்ள வைத்ததுடன் போராட்டத்தைப் பலப்படுத்தி நகர்வுகளை முன்னெடுக்கும் உந்து சக்தியையும் ஏற்படுத்தியது.



உலகுக்குக் காந்தியம் போதித்துக் கொண்டு அதே வேளையில் தனது வல்லரசுப் பசிக்கு தீனி போட முயல்கின்ற இந்தியா, இந்தியாவின் வரையறுக்கப்பட்ட எல்லைக்கோட்டுக்குள் வாழ்கின்ற தேசிய இனங்களின் எழுச்சிகளை மழுங்கடிக்கச் செய்து அல்லது கொன்றொழித்து வருகின்ற அதேவேளை ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதாக அல்லது விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்துழைப்புக் கொடுப்பதாக ஒரு பொய்த் தோற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை வேரோடு பிடுங்கியெறிவதற்காக அமைதிப் படை என்ற போர்வையில் தனது இராணுவத்தை நேரடியாக தமிழீழப் பிரதேசங்களில் கொண்டு வந்து இறக்கியது.

இந்த அமைதிப்படை வெறும் மாயமான் என்று அறியாத தமிழீழ மக்கள் இவர்களை மாவிலைத் தோரணங் கட்டி, மகர கும்பங்களுடன் வரஏற்றது உண்மைதான். நாட்கள் சென்றன. சிறீலங்கா இராணுவ அடாவடித் தனங்களும் சிங்கள குடியேற்றங்களும் முன்னிலும் பல மடங்கு வீரியம் பெற்றன. அமைதிப் படை அமைதியாக இருந்தது. தமிழீழ மக்கள் யாருடனும் கலந்து கொள்ளாமல் தமிழீழ மக்கள் சார்பில் இந்தியாவும் சிறீலங்காவும் செய்த ஒப்பந்தம் அப்படியே இருந்தது. அற்ப சொற்ப சலுகைகளைக் கொண்ட ஒப்பந்தச் சரத்துக்களைக் கூட சிறீலங்கா அரசு அப்பட்டமாக மீறய போதும் அமைதிப்படை அமைதியாக இருந்தது. ஆயுத ஒப்படைப்பு நடைபெற்ற பின்பு தமிழீழ மக்களின் பாதுகாப்புக்கு இந்தியா உத்தரவாதம் அளித்த பின்பும் கைதுகள் நடைபெற்றன; குடியேற்றங்கள் தொடர்ந்தன. விடுதலைப் போராளிகள் இந்தியாவிலிருந்து இறக்கப்பட்ட துரோகக் குழுக்களால் கொல்லப்பட்டனர். சிறீலங்கா பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டன. விடுதலைப் போராட்டம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அந்த இடைப்பட்ட காலம் குழப்பம் நிறைந்த, மயக்கமானதாக இருந்தது. இந்திய மாயமானை ஒரு வழிகாட்டியாக எண்ணியிருந்த மக்களுக்கு இந்த மயக்கத்தைப் போக்கவேண்டிய அவசியம் எழுந்தது. இந்தியாவின் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டிய தேவை நேர்ந்தது. காந்தீயப் போர்வைக்குள் பதுங்கிக்கொண்ட இந்தியாவை சர்வதேசத்தின் முன் தோலுரித்துக் காட்டவேண்டிய காலம் வந்தபோது, இதுவரை காலமும் சிறீலங்கா இராணுவத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டக்களத்தில் முன்னின்ற திலீபன் அகிம்சைப் போரில் குதித்தான்.



சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், பள்ளிக் கூடங்களில் நிறுவப்பட்டிருந்த இராணுவமுகாம்களை அகற்றுதல், சிறீலங்கா பொலிஸ் நிலையங்களை நிறுவுதலை நிறுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணா விரதத்தை திலீபன் ஆரம்பித்தான். தார்மீகமே உலகை உய்விக்கும் வேதமென்று உருப்போட்டுக் கொண்டிருந்த இந்தியாவுக்கெதிராக திலீபன் சாகும் வரை சாத்வீகப் போர் புரிந்தான்.

நல்லை மணல் வீதியில் குவிகின்ற மக்கள் வெள்ளத்தின் நடுவே பன்னிரு நாட்களாக துளி நீரும் அருந்தாது சிறுகச் சிறுகச் சாவைத் தழுவிக் கொள்கின்ற போதும் அமைதிப்படை அமைதியாக இருந்தது.

இந்தியாவின் சாத்வீக முகம் கிழிந்தது. அதன் உண்மையான விகார முகம் தெரியத் தொடங்கிய போது மக்கள் கொதித்தெழுந்தனர். தங்கள் பொய்முகம் தெரியத்தொடங்க இந்திய அமைதிப்படையும் உள்ளுக்குள் கொதிக்கத் தொடங்கியது. சர்வதேசங்களில் எல்லாம் இந்தியா பற்றிய போலி முகத்திரை கிழிந்து தொங்கியது. ஆத்திரமுற்ற இந்தியா தான் வந்த உண்மையான நோக்கத்தை நிறைவேற்றத் தொடங்கியது. முன்னரை விட மக்கள் கோரமாகத் தாக்கப்பட்டனர். அவலங்கள், அலைச்சல்கள், ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் ஒவ்வொரு இராணுவமுகாம். ஒரே நேரத்தில் உலகின் 4வது மிகப்பெரிய இராணுவத்துடனும் சிறீலங்கா இராணுவத்தடனும் போர். ஆனாலும் இரண்டு வருட கால இடைவெளிக்குள் இந்தியப் படைகள் வந்தபாதைகளால் திரும்பி ஓடத் தொடங்கினர். இது தமிழீழ மக்களின் உறுதிக்கும் விடுதலை நேசிப்புக்குமான எடுத்துக் காட்டு. இந்தியாவையே நம்பியிருந்த மக்களுக்கு இந்தியாவின் உண்மை நோக்கை அம்பலப்படுத்தி இந்தியாவை வெற்றி கொள்ள வைத்தது திலீபன் என்னும் மகத்தான போராளியின் அந்த அகிம்சை யாகம்தான்.

இன்றைக்கு தமிழீழத்தில் "திலீபன்" என்னும் சொல் ஒரு விடுதலைப் போராளியின் பெயராக மட்டும் இல்லாமல் ஆக்கிரமிப்புக்கெதிரான போர்க்குணாம்சத்தின் குறியீடாக நிற்கிறது.

- கஜன்; எரிமலை புரட்டாதி 1993

# இலங்கை – இந்திய ஒப்பந்தமும் தமிழீழ மக்களின் கல்வி பாதிப்பும்

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைவதற்கு முன்னர் மத நிறுவனங்களின் ஆனுசரனையுடன் கல்வி வளர்க்கப்பட்டு வந்தன. இந்நிலையில் ஓரளவு கல்வி இனச்சார்பற்ற முறையில் வளர்க்கப்பட்டு வந்தன. ஆனால் சுதந்திரமடைந்த பின்னர் சிறீ லங்கா அரசு கல்வி வளர்ச்சிக்கு கோட்பாடு ரீதியாகவும், நடை முறை ரீதியாகவும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனாலும் ஜனநாயகத் தேர்தல்களின் மூலம் ஆட்சியைப் பிடித் தற்காக ஐ.தே.கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சிகள் இன ரீதியான துவேசங்களை சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டி வந்தன. தேர்தலில் வெற்றி கொள்வதற்கு இந்தச் சிங்களக் கட்சிகள் காலத்திற்குக் காலம் தேசிய தமிழ் இனத்தின் உரிமைகளைப் படிப்படியாக பறிப்பதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் செல் வாக்கைத் தேடுவது என்பதை ஆரம்ப ஆயுதமாகக் கொண்டன. இதனால் போட்டா போட்டியிட்டு தமிழ் மக்களின் திறமை, பாது காப்பு, தயகம், அபிவிருத்தி, கல்வி வளர்ச்சி பறிக்கப்பட்டன. பின்னர் சிங்கள மக்களுக்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில் ஆட் சிப் பொறுப்பு ஏற்ற சிங்களக் கட்சிகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமே காரணம் எனச் சுட்டிக் காட்டிய பின்னர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை திரித்துக் கூறி சிங்களத் தமிழ் மக்களை எதிரிகளாக்கினர். அரச சார்பான தொடர்புச் சாதனங்களும் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு எதிரே உண் மைக்கு மாறாகப் பிரசாரம் செய்தது. தமிழ் மக்களின் சகல உரிமைகளும் படிப்படியாகப் பறிபோக ஆரம்பிக்கவே தமிழ் மக்கள் சார்பாக அரசியல்வாதிகள் குரல் கொடுத்தனர். பின்னர் தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாக செயல்பட ஆரம்பித்தனர்.

சிங்கள அரசு 1970ல் கல்வியில் தரப்படுத்தலைக் கொண்டு வந்த இன அடிப்படையான இத் தரப்படுத்தலினால் தமிழ் இளைஞர்களின் திறமைக்கான கதவுகளும் அடைக்கப்பட்டது. பல்கலைக்கழக உயர்கல்வியில் புறக்கணிப்பினால் விரக் தியுற்ற தமிழ் இளைஞர்கள் தாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் படுவதனை உணர்ந்து சிங்கள அரசு தமக்கு எதிராகச் செயற் படுவதனை உணர்ந்து சிங்கள அரசுக்கு எதிராக சமூகரீதியான போராட்டங்களை முன்னெடத்தனர். இந்நிலையிலேயே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் கூர்மையடைந்தது.

சிங்கள அரசு திட்டமிட்டே தமிழருக்கும், சிங்களவருக்கும் இடையில் இனக்கலவரத்தை 1697ல், 1977ல், 1983ல் பாரிய அளவில் ஏற்படுத்தித் தமிழ் மக்களின் உடமைக்கு, உயிருக்கு பாரிய நட்டத்தினையும் இழப்புக்களையும் ஏற்படுத்தியது. 1977ல் ஏற்பட்ட இனக்கலவரத்துடன் ஆயுதரீதியான போராட் டங்கள் முன்னெடுத்தாலும் 1983ல் ஏற்பட்ட இனக்கலவரத் தினால் தமிழ் மக்கள் அனைவரும் பங்காளியாக்கப்பட்டதுடன் சர்வதேச ரீதியாலும் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு கிடைத்தது. தமிழ் போராளிகளின் தமிழீழப் போராட்டம் கூர்மையடைந்து செல்லும் போது 1983ல் இருந்து தமிழ் இன அழிப்பில் பல்வேறு வழியில் ஈடுபட்டது.

**1.** தமிழ் மக்கள் யாவரும் பயங்கரவாதி எனப் பெயர் சூட்டப் பட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டனர்.

**2.** அரசியல் உரிமை மறுக்கப்பட்டது.

**3.** தமிழ் மக்களின் தாயகத்தில் திட்டமிட்டுச் சிங்களக் குடியேற்றம் மேற் கொள்ளப்பட்டது.


**4.** தமிழ் மக்களுக்கு வேலைவாய்ப்பில் புறக்கணிக் கப்பட் டதுடன் திட்டமிட்டே பதவி குறைக்கப்பட்டனர்.

**5.** தமிழ் மக்களின் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு வழிசெய்து கொடுத்தது. இதனாலும் தமிழ் மக்களின் போராட்ட மனித சக்தி குறைக்கப்பட்டது.

**6.** நூல் நிலையம் திட்டமிட்டு எரிக்கப்பட்டது.

**7.** பாடசாலைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டது. இராணுவ முகாமாக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ் மக்களின் மீது சிங்கள அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதப்போராட்டம் தான் சரியான அணுகுமுறை என்பதனை தமிழ் மக்கள் யாவரும் அங்கீகரித்தனர். பங்காளிகளாக படிப்படியாக மாற்றப்பட்ட பின் னர் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும். அபி விருந்தி ஏற்படுத்த வேண்டும். என்ன நோக்கோடு பல குழுக்கள் உருவாக்கப்பட்டாலும் இதில் ஒரு குழுவே (த.ஈ. வி.பு.) முன்னின்று அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். இந்நிலையில் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் தமக்கென ஒரு அரசு அமைக்க முடியும், பாதுகாப்புப் பெற முடியும், அபி விருத்தி ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டு இருக்கும் போது 1987ஆம் ஆண்டு யூலை 29-ல்




இலங்கை – இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

இந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ் மக் களின் சகல உரிமைகளும் வழமையை விட பறிபோனது மட்டு மன்றி பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில் வாழ்வதனையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு இலங்கை - இந்திய ஒப்பந்தம் அதிக அளவில் தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. இப்பிரிவில் கல்வியில் ஏற்பட்ட பாதிப்பை எடுத்துக் காட்டுவதே இதன் பிரதான நோக்க மாகும். தமிழ் மக்களின் கல்வி கீழ்வருமாறு பல வழிகளால் பாதிக்கப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

**1.** தமிழ் பிரதேசங்களில் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சை (டிசம்பரில்) குழப்பப்பட்டது. பரீட்சை நடாத்த முடியாத அளவுக்கு ஊரடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால் சிறீலங்கா அரசு குறிப்பிட்டபடி பரீட்சை நடக்கும் என அறிவித்து நடத்தியது.

**2.** பல்கலைக்கழகம் சீர்குலைக்கப்பட்டது. கட்டிடங்கள், கல்விக் கான உபகரணங்கள் யாவும் தகர்த்து எறியப்பட்டன. பல்கலைக்கழகம் கோட்பாட்டு ரீதியான கல்வியை மட்டுமே போதிக்க வேண்டி இருக்கிறது. காரணம் செய்முறை ரீதியான கல்வியை அளிப்பதற்கு அருமையாக இருந்த உபகரணங் களும் நாசமாக்கப்பட்டது.

**3.** பாடசாலைகள் இராணுவ முகாமாக விளங்கின. பின்னர் பாடசாலையில் இருந்து விலகுவதாகக் கூறி பாடசாலைக்கு அருகாமையில் இராணுவ முகாம் இருப்பதனால் ஆசிரியர்கள் தமது கடமையை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. மாண வர்கள் வரவு குறைவாக இருக்கின்றது. வந்த மாணவர்கள் கூட படிப்பதற்கு ஏற்ற பாதுகாப்பான சூழ்நிலை இல்லை. மாணவ மாணவிகள் ஆசிரியைகள் என்னேரமும் தாக்கப் படலாம் என்ற அச்சத்தினால் பயந்து பயந்து இரக்க வேண்டிய இருக்கின்றது. பேரளவில் பாடசாலைகள் இயங்குகின்றனவே தவிர உண்மையான கற்றலும் கற்பித்தலும் செய முடியாத அளவுக்கு இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.

**4.** யாழ் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடம் திறமையாகச் செயல்பட முடியாத அளவுக்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லை. விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் தாக்கப்படுகிறார்கள். பாதுகாப்பு இன்மையால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஆயுதங்களால் காட்டு மிராண்டித்தனமாக தாக்கப் படுகிறார்கள். தடுத்து வைக்கப்படுகிறார்கள். இவற்றுக்கு மேலாக மாணவ சமுதாயத்தின் முன்னால் வைத்தே விரிவுரை யாளர்கள், ஆசிரியர்கள் மானபங்கப்படுத்தப்படுகிறார்கள். உள வியல் ரீதியாக ஏற்படும் பாதிப்பு அவர்கள் இந்த நாட்டை விட்டே வெளியேறுகிறார்கள்.

**5.** பாடசாலை அதிபர்கள், பல்கலைக்கழக உபவேந்தர் போன்ற நிர்வாகிகள் பாடாசலைகளை சுதந்திரமாக நிர்வகிக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. யாழ் பல்கலைக் கழக உபவேந்தரை வீதியில் அவமானப்படுத்தி வீதியால் இராணுவத் தினர் அழைத்துச் சென்றார்கள் என்றால் பாடசாலை அதிபர்கள் எவ்வாறு நிர்வகிக்க முடியும்?

**6.** மாணவர்கள் காரணமின்றி கைது செய்யப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள், காணாமல் போகின்றார்கள். இந்நிலை யில் மாணவர்கள் கல்வி பாதிக்கப்படுகின்றது.

**7.** கிராமப்புற பாடசாலைகள் இயங்க முடியாத அளவுக்கு வசதியீனம் காணப்படுகின்றது. சிறீலங்கா சிறிய அளவில் செய்து வந்த கல்வி அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை கூட கைவிட்டுள்ளது.

**8.** சுயதொழில் முயற்சிக்கான தொழில் நுட்பக் கல்வியை தமிழ் மக்கள் பகுதியில் முழு அளவில் கைவிடப்பட்டுள்ளது.

**9.** இச் சூழ்நிலையில் மாணவர்கள் கல்வியின் பயனுக்கும் எது வித உத்தரவாதம் இல்லை. இந் நிலையில் மாணவர சமூகம் கல்வியைத் தொடர்வதில் அதிக நாட்டம் காட்ட முடியாத சூழ் நிலை காணப்படுகிறது.

**10.** இராணுவம் தேடுதல் என்ற போர்வையில் சுற்றி வளைப்பு மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள், பெண்கள், குழந் தைகள் என்ற பாரபட்சமின்றி வெயிலிலும், மழையிலும் இருந்து கொடுமைப்படுத்துகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதி பாதிக்கப்படுவதால் பாடசாலைகள் இயங்கவே முடியவில்லை. காரணம் ஒரு பாடசாலைக்கு ஒரு பகுதி மாணவர்கள் மட்டுமே வரக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான பாதிப்புக்களுக்கு எதிராக பல்கலைக்கழக ஆசி ரியச் சங்கம், பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரி யர்கள், பாடசாலை மாணவர்கள் தாம் தாம் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் நடவடிக்கை மேற் கொள்கிறார்கள். இந்த நடவடிக்கை கூட இராணுவ அதிகாரிகளிடம் மகஜர் சமர்ப் பிப்பதும், அவர்கள் அதற்கு உத்தரவாதம் அளிக்கிறார்கள். அந்த உத்தரவாதம் மட்டும் தான். பின்னர் வழமையாக பாதிப் புக்களையே செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில் உத்தரவாதங்கள் எமக்கு எந்த நன்மையையும் அளிக்கப்போவ தில்லை. இந் நிலையில் பல்கலைக் கழகம், தொழில் நுட்பத் துறை, பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் என்ற பாகுபாடு நீங்கி இவை யாவும் ஒன்றிணைந்து தமது பாதிப்புக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். அது மட்டு மன்றி நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டும்.


கல்வியிலும் அது தொடர்பானவர்களுக்கும் ஏற்படும் பிரச் சனைகளை தனிமைப்படுத்தி நோக்காமல் தமிழ் இனப்பிரச் சனையாக கருதி அதற்கான போராட்ட வடிவங்களைவ குக்க வேண்டும் அல்லது போராட்டங்களை பல வடிவங்களில் முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பங்காளியாக வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் யாவரும் தமக்கான ஒரு சுதந்திரமான இறைமை கொண்ட தனி அரசு நிறுவப்படவேண்டும் என்ற உள் விருப்பம் உள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள். காரணம் அந்திய நாட்டின் பாதுகாப்பும், உத்தரவாதங்களும் எமது இனத்துக்கு உதவாது என்ற முடிவுக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் ஏறுபட்ட பாதிப்பினால் தமிழ் மக்கள் வந்துள்ளனர். ஆனால் அந்நிய நாட்டு பாதுகாப்பில் இருக்கும் அரசியல்வாதிகள் மட்டும் தங்கள் பதவிக்காகவும், நலனுக் காகவும், தமிழ் மக்களின் நலனுக்கு எதிராக தொடர்பு சாதனம் மூலம் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

கல்வியில் மட்டுமல்ல பொருளாதார, கலை, கலாச்சார சீரழி வுடன் உயிர், உடமைகளும் அழிக்கப்பட்டன. இதனை தமிழ் மக்கள் நேரடியாக நடைமுறையில் அனுபவித்து வருகிறார்கள். இவ்வாறான பாதிப்பினால் தான் தமிழ் மக்களுக்கு தனி ஒரு அரசு வேண்டும் என்பதனை உணர்ந்து அதற்கு ஏற்ப போராட்ட வடிவத்தை முன்னெடுக்கும் த.ஈ.வி. புலிகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் பங்காளியாக மாறுவதற்கும் சந்தர்ப் பத்தை தமிழ் மக்கள் எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

\- திலீபம்


e Wallet
Google Play
App Store
Reward Points
Gift Card
EVRP
JOIN, SHOP, & COLLECT EVR POINTS WHILE SHOPPING WITH OUR MERCHANTS & GIFT CARDS
EVERYDAY SHOPPING
MEMBER
MERCHANT
REWARDING YOUR EVERYDAY
MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.
Merchant Benefits
Website Template: Modern design for improved user experience.
Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
Comprehensive Analytics: Access full reporting and tracking online.
Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
Financial Security: Build income for future sale or retirement.
One-time Registration Fee: $199 to unlock these benefits.
And more...
Member User Benefits
Point Accumulation: Earn 4% to 60% on purchases.
Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
Networking Opportunities: Build your own shopping network effortlessly.
Exclusive Privileges: Gain mining rights worth $60.
And more...
Register Now
40
80
20
160
10
320
WWW.MYEVERYDAYSHOPPING.COM



# துணிவு

**இளஞ்செழியன்**

சேகரரிற்கு மனம் “திக் திக்” என்று அடிக்கத் தொடங்கியது. “இப்ப என்ன செய்கிறது ஆமிக் காறங்கள் வந்தாங்கள் எண்டால் என்ன நடக்குமோ? வீடு தரைமட்டமாகுமோ? சாமான்களெல்லாத்தையும் எரிப்பாங்களோ? அரைகுறையாய் வெட்டப்பட்டிருக்கும் “பங்கரும்” அருகிலிருக்கும் மரக்குற்றிகளும் அவரைப் பயமுறுத்தியது. அதிகாலை வேளையிலே வீதியால் வேகமாகப் பறக்கும் சைக்கிள்களும் அதில் சென்றவர்கள் கூறிப் போன வார்த்தைகளும் அவரைப் பதற்றத்திற்குள்ளாக்கி நிலை தடுமாற வைத்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு குரல் கொடுத்தார். “தம்பி ஆமிக்காரங்கள் அரசடி வயலுக்க இறங்கியிட்டாங்களாம் கெதியா அம்மா எல்லாரையும் வெளிக்கிடச் சொல்லு.”

மேல்வானில் கெலி ஒன்று வட்டமிட்ட படியிருக்க, கிழக்கு வானில் வேறொன்று தாழ்ந்துயர்ந்து கொண்டிருந்தது. கீழிருந்து வெடிக்கும் துப்பாக்கிகளின் ஓசை எங்கும் பரவி அவர் மனதில் ஒரு சிறு தெம்பை இழையோடவிட்டது.

அந்தக் கெலிதான் ஆமியளை இறக்குது போல என சேகரர் ஊகித்தார்.

“என்ன அப்பா ஆமிக்காறங்கள் அரசடி வயலுக்க இறங்கீட்டாங்களோ?”

ஓமடா கெதியா வெளிக்கிடு! என்ற படி அறைக்குள் வேகமாக நுழைந்தார்.

தாய்க்கு செய்தி எட்டியதும் பரபரத்தாள்.

“அச்சியை இப்ப என்ன செய்றது? நடக்கவும் மாட்டா சைக்கிளெயும் இருக்க மாட்டா… கடவுளே என்றபடி அவள் நிமிர்ந்தாள். அதற்குள் அவர்களது மகள் பரவை ஆச்சியிடம் ஓடிப்போய் ஆச்சி ஆமிக்காறங்கள் கிட்ட வந்திட்டாங்களாம். டப்பெண்டு வெளிக்கிடுங்கோ எங்கயாலும் தூரவாப் போய் நிற்பம்” என்றாள்.

“என்னால வர ஏலாது பிள்ளை. என்ர அசரடி வீட்ட விட்டு வேற இடத்துக்கு வரவும் மாட்டன் உனக்குப் பயமெண்டா எங்கயாவது போய் நில்” என்று கூறிவிட்டாள். பரவைக்கு ஆச்சியின் பதிலைக் கேட்கத் திகிலாக இருந்தது. தாயிடம் ஓடிப்போய் “அம்மா ஆச்சி இந்த இடத்தை விட்டு வேற இடத்துக்கு வரமாட்டாவாம் எங்கள வேணுமெண்டா போகட்டாம்” என்றாள்.

ஆச்சி திடீரென இப்படிக் கூறியது தாய்க்கு திகைப்பை ஏற்படுத்தியது.

ஆமி வரகிறான் என்ற செய்தி கேட்டு அவ்வளவாகப் பதட்டப்படவில்லை. ஆனால், ஆச்சி அரசடி வீட்டை விட்டு வரமாட்டாவாம் என மகள் கூறியதும் உதறலெடுத்தது. ஆச்சி ஒரு பொல்லாத பிடிவாதக் காரி. பிடிவாதம் பிடித்தால் இலேசில் மசிவதில்லை. இனி அவவின் கொள்கையை மாற்றிக் கூட்டிக் கொண்டு போவதென்றால் அது நடக்கக் கூடியகாரியமாக அவளுக்குத் தோன்றவில்லை.

தாய் பதறியபடி ஆச்சியிடம் போயக் கேட்டாள். “ஆச்சி ஆமியெல்லே வந்திட்டான். கெதியா வெளிக்கிடுங்கோவன், எங்கையாலும் எட்டப் போய் நிப்பம். ஒருக்கால்லல்லோ சொல்லிப் போட்டன், அரசடியை விட்டு ஒரு இடமும் வரமாட்டன் எண்டு. பேந்தென்ன கரைச்சல் குடுத்துக் கொண்டிருக்கிறாய்” ஆச்சி கோபத்தோடு கத்தினாள்.

மக்கள் எல்லாம் தம் கால்போன போக்கில், எங்காவது ஓடித் தப்பி விடுவோம் என்ற எண்ணத்தில் விரைந்து சென்று கொண்டிருந்தார்கள். ஆனால், ஆச்சியோ குறையில் கிடந்த பனையோலைப் பெட்டியை எடுத்து நிதானமாக இழைக்கத் தொடங்கினாள்.




அம்மாவிற்கு தனியே விட்டுப் போக மனமில்லை. மீண்டும் கேட்டாள், கெதியாய் வெளிக்கிடுங்கோவன் ஆச்சி. பெட்டியப் பின்னிக் கொண்டிருக்கிறியள், மோட்டுக் காடையன்கள் கண்ட பாட்டுக்கு வெட்டிப் போடவான்கள்; தாயை மகள் சற்று மிரட்டிக் கூறினாள், கூறும் போதே அவள் கண்கள் கலங்கின. ஆனால், ஆச்சியோ அதற்கெல்லாம் பயப்பட்டதாக இல்லை.

“நான் வரேல்ல எண்டா வரேல்லத் தான். அவங்கள் என்னைக் கடிச்சுப்போட்டாலென்ன, வெட்டிப் போட்டாலென்ன நான் சொந்த நிலத்திலயே கிடந்து சாகிறன். ஆச்சிக்கு தன் மண்ணையும் வீட்டையும் விட்டு இடம் பெயர மனம் இடந்தரவில்லை. மகள் அவ்வாறு கேட்டது, கோபத்தை மூட்டிவிட்டது. பெடியள் எல்லாரும் எங்களுக்காக தங்கட உசிரையும் மதியாமல் பொம்பர் அடியுக்கையும் கெலி அடியுக்கையும் நிண்டு சண்டை பிடிக்கிறாங்கள். அவங்களுக்கு ஏதாவது ஒரு உதவி யக்கிதவயச் செய்வமெண்டில்லாமல், ஆமி வருகுது எண்டோன்ன முயல்ப் பாச்சல்ல ஓடினமாம் எனப் படபடத்தாள். கிழவியின் வார்த்தைகளுக்குள் ஏதோ ஒரு நியாயம் எழுந்து



நின்றது.

அதற்கு மேல் மகளால் அங்கு நின்று தாமதிக்க முடியவில்லை. அயலவர்கள் எல்லோரும் வேகமாக பாதுகாப்புத் தேடி வெளி யேறிக் கொண்டிருந்தார்கள். வானில் கெலி வேறு தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தது. அதற்குள் கணவன் சேகரர் குரல் கொடுத்தார், என்ன இரண்டு பேரும் நிண்டு மினக் கெடுறியள் எல்லாச் சனங்களும் போட்டுதுகள் கெதியா வாங்க பாப்பம் கணவனின் குரல் அவளுக்கு மேலும் பயமூட்டியது. அயலவர்கள் எல்லோரும் தப்பியோடிவிட தான் மட்டும் தனிமை யில் நிற்பது போல் உணர்வேற்பட ஆச்சியை விட்டுப் பிரிய மனமின்றி வெளியே விரைந்து வந்தாள்.

கணவனுக்கு விபரமெதுவும் புரிய வில்லை. பிள்ளைகளும் கூறவில்லை. கூற நேரமும் கிடைக்கவில்லை. அவ்வளவு வேகமாக பொருட்களைச் சைக்கிளில் கட்டியிருந்தார்கள். மனைவி தனியே அங்கு வருவதைக் கண்ட சேகரரிற்கு ஆச் சரியமாக இருந்தது. மனைவி வந்து சேர முன்னரே அவசரமாக வினவினார் ஆச்சி எங்க ஏன் அவாவ விட்டிட்டு வாறாய்?

“அச்சி தன்ர வீட்ட விட்டு ஒரு இடமும் வரமாட்டாவாம்” மனை விக்கு கவலை கண்கள் குளமாயின. சேகரரிற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. உடல் நடுங்கத் தொடங்கியது. அவருக்கு ஆச்சியின் குணம் தெரியும். ஆனாலும், இந்த நேரத் தில் அவள் இப்படிச் சொல்வாளென்று அவர் எதிர்பார்க் கவில்லை. தான் போய் கேட்டுப் பிடித்திழுத்து வருவோ மென்றால் பயம், சரியான அவசரம். எந்தக் கலவரம் வந்தாலும் ஆச்சி தன் சொந்த மண்ணை விட்டு அசைந்தவளல்ல. அவ ராலும் ஒன்றும் செய்ய முடியாதநிலை. திட்டியபடி சைக்கிளை அவசரமாக வெளியே தள்ளினார். மனைவியும் பிள்ளைகளும் கலகத்துடன் பின்னால் விரைந்தனர்.



“இந்தப் பழசோட நான் படுறபாடு... கொழுப்புக் கூடிப்போய் திண் டாடுது. ஆரும் சனங்கள் கண்டால் கிழவியக் கூட்டிக்கொண்டு போறது கரைச்சல் எண்டுதான், நாங்கள் விட்டிட்டுப் போற மெண்டு சொல்லப்போகுதுகள். எக்கணம் ஆமிக்காறங்கள் உள்ள வந்தாங்களெண்டா கண்ட துண்டமா வெட்டிக் கொத்துப் போறாங்கள்” எனக் கடு கடுத்தார். ஆனால், அவர் மனதில் பயமும் துக்கமும் சேர்ந்து கொண்டது.

ஆமிக்காறங்கள் வந்தாங்களெண்டால் கிழவிய என்ன செய் வாங்களோ?

பக்கத்தில பங்கரும் கிடக்கு அவங்கள் கண்டாங்களெண்டால் ஒரு உறவும் பக்கத்தில் இல்லை கிழவி அநாதையாத்தான்...

மனைவிக்கும் இதே கவலை தான். பயத்தோடு கவலையை யும் சுமந்து கொண்டு அவர்கள் நால்வரும் வேகமாகப் பிரதான வீதியில் ஏறிக்கொண்டனர்.

இராணுவம் கிராமத்தில் புகும் செய்தி அறிந்து வீதி வழியே மக்கள் கூட்டங்கள் அகதிகளாகி சென்று கொண்டிருந்தார்கள். பலர் பயமிகுதியால் அவசரத்தில் கையிற்கு அகப்பட்டவற்றைத் தூக்கிக் கொண்டு உடுத்த உடையுடன் ஓடிக் கொண்டிருந் தார்கள். சிலர் அதிகாலையிலே எழுந்ததுமே முகம் கூடக் கழுவிக் கொள்ளாமல் நாலு கால் பாச்சலில் விரைந்தார்கள். இவர்களுக்கு தம் இருப்பிடத்தை விட்டு எங்கே சென்று தங் குவது என்ற பிரச்சினை விஸ்வரூபமெடுத்தாட பாதுகாப்புத் தேடி நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

சேகரரிற்கும் மனைவிக்கும் அவர்கள் போகும் போக்கில் செல் வதற்கு மனமில்லை, வீட்டிலிருக்கும் ஆச்சியே அவர்களைக் குழப்பிக் கொண்டிருந்தாள். பிள்ளைகளுக்கு ஒரு புறம் பயம், மறுபுறம் ஆச்சியின் நினைவு. அவாவும் எங்களுடன் வர வில்லையே வீட்டில் என்ன செய்கிறாவோ என்ற ஏக்கத்தில் பின் தொடர்ந்தார்கள்.

தொலைவில் எங்கோ வெடித்த குண்டுச் சத்தம் அவர்களை அதிர வைத்தது. வானில் பலத்த சத்தத்துடன் பறந்து கொண் டிருந்த கெலி அதிகாலையிலே சிப்பாய்களை தரையிறக்கிவிட்டு மக்களை அழிக்க முயன்று கொண்டிருந்தது. அவ்வரக் கர்களை எதிர்த்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த போராளி களைக் கீழே பதிந்து சுட முயன்றது. ஆனால், போராளிகள் துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ரவைகளினால், எங்கே கீழே வீழ்ந்து விடுவேனோ என்ற அச்சத்தினால் மேலெழுந்தது.

“போக்கநற்று போவான்கள் கெலியாலையும் பம்பராலையும் கொண்டு வந்து கொட்டினால் எங்கட பிள்ளையளும் தான் என்ன செய்யிறது. எங்கட பெடியளிட்டையும் ஒரு கெலியிருந் தால் இப்ப மேலேயே துலைஞ்சாங்கள்” என முதியவர் ஒருவர் கடுகடுத்துக் கொண்டு அவர்களைத் தாண்டிச் சென்றார்.

அவர்கள் வீட்டிலிருந்து வெகு தூரம் வந்து விட்டார்கள். சேகரரிற்கு அரைகுறையாய் வெட்டப்பட்டிருக்கும் பங்கர் மறு படியும் ஞாபகத்திற்கு வந்ததும், இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது. பலத்த சிந்தனையின் பின் ஒரு முடிவுக்கு வந்தவராக “இனி இஞ்சால பயமில்ல, நீங்கள் மெல்லமாக நடந்து போங்கோ. நான் பட்டெண்டு வீட்ட போட்டு ஓடியாறன்” என்றபடி சைக்கிளில் கட்டியிருந்த பொருட்களை அவிழ்த்தார்.

“ப்ப ஏனப்பா அங்க போறியள்? ஆமிக்காரங்களும் கிட்ட வந் திருப்பான்கள். நீங்கள் பேசாம வாங்கோ” என்று தடுத்தாள் மகள்.

“இல்லப்பிள்ள அவங்கள் இப்ப தூரத்தான் எங்கேயும் நிப் பாங்கள், நான் போய் ஆச்சியையும் கூட்டிக் கொண்டு, பங் கரையும் மளமளவெண்டு மூடிப்போட்டு ஓடியாறன்” என்று கூறியபடி சைக்கிளைத் திருப்பினார்.

“ஆச்சி அப்போதே வரமாட்டன் எண்டவா, இப்ப வாறாவே”? என்றான் மகன். மனைவிக்குப் பயமேற்பட்டது. எதுவும் பேசாது அவ்விடத்திலேயே தரித்து நின்றாள். பிள்ளைகளுக்கும் அவ்வாறு உணர்வேற்பட்டிருக்க வேண்டும்.

“அம்மா வாங்கோ, அப்பா வருமட்டும் இந்த மரத்துக்குக் கீழ இருப்பம்” மகன் அழைத்தான்.

“மூண்டு நாளாய்ப் பாடுபட்டு நாங்கள் தற்பாதுகாப்பாய் இருக் ககோணுமெண்டு சொல்லிக் கொண்டு, தடுக்கத்தடுக்க பங்கர் வெட்டினாரே! இப்ப உதால தான் ஆச்சிக்கும் வீட்டிற்கும் ஆபத்து வரப்போகுது” என்று புலம்பியபடி மரத்தின் கீழே அமர்ந்தாள்.

“அம்மா ஒன்றுக்கும் கவலைப்படாதேங்கோ, அப்பா போறார் தானே ஆச்சியைக் கூட்டிவருவார்” என்று மகன் தேற்றினான்.

அவனுக்கும் உள்ளூரப்பயம் அப்பா பங்கரை மூடிவிட்டு ஆச் சியைக் கூட்டிக்கொண்டு வாறதுக்கிடையில் ஆமி வந்து விட்டால் என்ன நடக்குமோ? அப்படி மூடிவிட்டு வந்தால் பிறகு நாங்கள் போயிருக்கிறதுக்கு தற்பாதுகாப்பு என்று அவன் கவலைகள் நீண்டது. அவனுக்குத் தனக்கு தெரிந்தளவிலான கவலைகள்.

வீதிகளிலோ சந்திகளிலோ மக்கள் நடமாட்டம் இல்லை. சுதந் திரத் தாகம் கொண்ட போராளிகள் மாத்திரம் எதிர்த் தாக் குதலை எதிர்பார்த்து அங்கு உலாவிக்கொண்டிருந்தார்கள். மற்றப்படி வீதியெங்கும் வெறிச்சோடிப்போய்க் கிடந்தன. ஆச் சியைக் கூட்டிவர வீடு நோக்கிப் போன சேகரர் என்ன நினைத் தாரோ? சைக்கிளைத்திருப்பிக் கொண்டு மனைவியும் பிள் ளைகளும் நின்ற இடத்திற்கு வந்தார்.

“வாங்கோ போவம். ஆச்சியும் அங்க ஒருத்தரும் துணையில் லாமல் தனிய இருக்கிறா”!

“எங்க வீட்டை திரும்பிப் போகவா”? மனைவி நடுங்கும் குரலில் கேட்டாள். “ஓம்... அங்க எங்களுக்காக நிண்டு போராடுகிற போராளிகளுக்கும் ஏதாவது உதவியைச் செய்வம். நாங்கள் உங்கால எங்க போய்த் தங்கிறது? எங்கட வீட்ட போயிருந்து போராளிகளுக்கும் ஏதாவது உதவி செய்தமெண்டால் போரா ளிகளுக்கும் ஒத்தாசையாய் இருக்கும். ஓட ஓட துரத்திறவனுக் கும் சுகம். வாருங்கோ போவம்”.

அவர் முகத்தில் பிறந்த உறுதி அவர்களிடமும் பரவுகின்றது. வானத்தை அண்ணாந்து பார்க்கின்றனர்.

கெலி எங்கோ ஒரு தொலை தூரத்தில் வட்டமிடுகின்றது.

- களத்தில் 02.09.1994

2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203

www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# ஈகைச்சுடர்

# லெப். கேணல் திலீபன்



உலக வரலாற்றிலே ஓர் புதிய அத்தியாயத்தின் ஆரம்பம் மட்டுமல்ல... தமிழீழ மக்கள் புரட்சியின் திறவுகோல். ஈழ விடுதலைப் போராட்டத்தின் அகிம்சைத் தீ. அணையாவிளக்கு, அகிம்சையால் எழுந்த பாரதமெனும் நாட்டுக்கு, அகிம்சையின் அர்த்தம் கற்பித்த புலிவீரன்.

இந்திய - சிறீலங்கா ஒப்பந்தமெனும் சூழ்ச்சிப் பொறியோடு, தமிழீழ மக்களின் துன்பங்களையும், வேதனைகளையும் வெட்டி வீழ்த்தி விடுவோமென்று கூறிக்கொண்டு பாரதப் படைகள் எம் மண்ணில் காலூன்றியபோது தமிழீழ மக்களின் மகிழ்ச்சி உச்சிமேவிப் பிரவாகித்தது. ஆனால் இந்திய அரசின் கபடம் மெல்லமெல்ல வெளிவரத் தொடங்கியபோது ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிருநாட்கள் தண்ணீருமின்றி உண்ணாநோன்பிருந்து தமிழீழ விடிவிற்காய் உயிர்த்தியாம் செய்தான் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்.



1693.11.27 இல் ஊரெழு என்றும் கிராமத்தில் பிறந்த இராசையா பார்த்தீபன் என்னும் திலீபன் கல்வியில் சிறந்துவிளங்கி பல்கலைக்கழக மருத்துவபீட அனுமதியைப் பெற்றான். தமிழீழ மக்களின் இன்னல்கண்டு தனது கல்வியை உதறித்தள்ளி 1983 காலப் பகுதியில் லெப். கேணல் பொன்னம்மான் அவர்களின் தொடர்பு மூலமாக தன்னை விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொண்டான். ஆரம்ப காலங்களில் இயக்க அரசியல் வேலைகளில் ஈடுபட்ட திலீபன், பின்னார் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இக்காலப்பகுதயில் சிறீலங்காப் படைகளுடனான நேரடி மோதல்களிலும் தனது திறமையினை வெளிப்படுத்தி வந்தான். மக்கள் மத்தியில் மிக அன்பாகப் பழகியதுடன் அவர்களது முன்னேற்றத்துக்காக பல அமைப்புக்களையும் நிறுவினான். விடுதலைப் புலிகள் அமைப்பையும் பல புதிய பரிமாணங்களிற்கு இட்டுச் செல்ல வழிவகுத்துச் செயற்பட்டான். களத்தில், சுதந்திரப் பறவைகள் உட்பட பல பத்திரிகைகளை ஆரம்பித்து செயற்படுத்தினான். விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு, சுத்நதிரப் பறவைகள் அமைப்பு, தேச பக்தர் அமைப்பு என்பவற்றுடன் தமிழீழ கிராமிய நீதி மன்றங்கள், விழிப்புக் குழுக்கள், சர்வதேச உற்பத்திக் குழுக்கள், தமிழீழ ஒலி ஒளி சேவைக் கட்டுப்பாட்டுச் சபை, தமிழர் கலாசார அவை என இவன் ஆரம்பித்து நெறிப்படுத்திய பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வாறு விடுதலைக்காய் தீவிரமாக உழைத்துவந்த லெப். கேணல் திலீபன் இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தை சிறீலங்கா அரசு மீறுவது கண்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலிலும், சிறைகளிலும் உள்ளோர் விடுவிக்கப்படவேண்டும், புனர்வாழ்வு என்னும் பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், இடைக்கால அரசு நிறுவப்படும்வரை “புனர்வாழ்வு” என்னும் சகல வேலைகளையும் நிறுத்தவேண்டும். வடக்கு கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும், இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் உள்ள ஊர்காவற் படையினரின் ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் என்பவற்றில் குடியிருக்கும் இராணுவ பொலிஸ் நிலையங்கள் அகற்றப்படவேண்டும் என் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பல்லாயிரக் கணக்கான மக்கள்திரள் முன் தண்ணீருமின்றி தன் உண்ணாவிரத்தை ஆரம்பித்தான் திலீபன். பன்னிரு நாட்கள் தன்பாராமுகத் தன்மையினால் திலீபன் உன்னும் ஈகைச்சுடர் வீரனை சாவின் வாய்க்குத் தீனியாக்கியது பாரத அரசு.

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்” என்று கூறி சாவைத்தழுவிய அந்த மாவீரனின் 37ஆம் ஆண்டு நினைவுடன் ஒன்றுபட்ட மக்கள் சக்தியாய் எழுந்துநின்று, தினம் தினம் தீக்குளித்து போராடி நிற்கிறது எம்மினம்.



# ஜனாதிபதித் தேர்தல்: தமிழ் மக்கள் அறிவுபூர்வமாக முடிவெடுப்பார்களா?

02.09.2024

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் குறிப்பாக. கணித விஞ்ஞானப் பிரிவுகளைச் சேர்ந்த கல்வி நிலையங்களுக்கு என்னென்ன பெயர்கள் என்று பார்த்தால், விஞ்ஞான மண்டபம்; விஞ்ஞான உலகம்; விஞ்ஞான சமுத்திரம்; விஞ்ஞான நீரோட்டம். விஞ்ஞான மூலை, இணைந்த கணிதத்தில் வெற்றி, மிஸ்டர் பிஸிக்ஸ், …இப்படியே நீண்டு கொண்டு போகும். இப்பெயர்கள் யாவும் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் தொடர்பான ஒரு சமூகத்தின் அபிப்பிராயங்களைக் காட்டுபவை. இந்நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் படிக்கிறார்கள்.



யாழ்ப்பாணத்தின் முன்னணி தனியார் பாடசாலைகள் சிலவற்றில் கணித அல்லது விஞ்ஞானப் பட்டதாரி ஒருவர்தான் அதிபராகவும் இருக்கலாம் என்று எழுதப்படாத விதி உண்டு. கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் குறித்து தமிழ் சமூகத்தில் உயர்வான மதிப்பீடுகள் உண்டு. இவ்வாறு கணித விஞ்ஞானத் துறைகளில் அதிகம் நாட்டமுள்ள ஒரு சமூகமானது தன் நடைமுறை வாழ்வில் எல்லாவற்றிலும் விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளை கொண்டிருக்க வேண்டும். வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கணிதமாக அணுக வேண்டும். ஆனால் தனது பாடத் தெரிவுகளில் விஞ்ஞானத்துக்கும் கணிதத்துக்கும் முக்கிய இடத்தைக் கொடுக்கும் ஒரு சமூகம், தனது அரசியல் தெரிவுகளில் எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்து வருகின்றது?

உடுப்பு வாங்கப் போனால் புடவைக் கடையில் எத்தனை மணித்தியாலத்தை எமது பெண்கள் செலவழிக்கிறார்கள்? சந்தையில் நாளாந்தம் காய்கறி வாங்கும் பொழுதும் எவ்வளவு கவனமாகத் தெரிந்தெடுக்கிறோம் ? தக்காளிப் பழத்தை நிறம் பார்த்து; அழுத்திப் பார்த்து ஒவ்வொன்றாக தெரிகிறோம். கத்தரிக்காயை நிறம் பார்த்து; அழுத்திப் பார்த்து ஒவ்வொன்றாகத் தெரிகிறோம். இவ்வாறு அன்றாட வாழ்வில் தெரிவு என்று வரும் பொழுது கவனமாகவும் நேரமெடுத்தும் பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், தனது அரசியலில் அவ்வாறு நிதானமாகவும் கணிதமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் சிந்திக்கின்றதா?

அவ்வாறு விஞ்ஞானபூர்வமாக சிந்தித்திருந்தால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்க வேண்டும்? எப்பொழுது எடுத்திருந்திருக்க வேண்டும் ?

தபால் மூல வாக்களிப்புக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்கள்தான் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சி எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தன் முடிவை அறிவிக்கவில்லை. இன்னொரு கட்சி பகிஸ்கரிக்கின்றது. ஏனைய கட்சிகள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துகின்றன. இதில் எது விஞ்ஞானபூர்வமான முடிவு ?



அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகளைக் கையாள்வது என்பது ஒரு கணித ஒழுக்கம். அப்படிப் பார்த்தால் தமிழ் மக்கள் தம் முன்னால் இருக்கும் எல்லா சாத்தியக்கூறுகளையும் ஆழமாகப் பரிசீலித்து முடிவுகளை எடுக்கின்றார்களா?

தமது கட்சிகளும் தலைவர்களும் எடுக்கும் முடிவுகளை குறித்து தமிழ் மக்கள் கேள்வி கேட்கின்றார்களா? நீங்கள் எந்த அடிப்படையில் முடிவுகளை எடுத்தீர்கள் என்று தமது தலைவர்களிடம் அவர்கள் கேள்வி கேட்பதுண்டா ?

சந்தையில் காய்கறிகளைத் தெரியும் பொழுது தெரிவு பிழைத்தால் உணவு வயிற்றில் நஞ்சாகிவிடும். பள்ளிக்கூடத்தில் பாடத் தெரிவு பிழைத்தால் கல்வி நரகமாகிவிடும். உடுப்புக் கடையில் தெரிவு பிழைத்தால் குறிப்பிட்ட நபரின் தோற்றக் கவர்ச்சி குறைந்து விடும். ஆனால் அரசியலில் தெரிவு பிழைத்தால் என்ன நடக்கும் ?

2009 க்கு பின் வந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மூத்த தலைவராகிய சம்பந்தர் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு முடிவை எடுத்திருக்கலாம். அதில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருந்திருந்தால் தமிழ் அரசியலின் போக்கே வேறு திசையில் போயிருந்திருக்கும். சம்பந்தரின் பூதவுடல் தந்தை செல்வா கலையரங்கில் கூரை பதிந்த அந்த சிறிய மண்டபத்தில் விசிறிகளின் கீழே தனித்து விடப்பட்ட அவலம் ஏற்பட்டிருக்காது. ஓர் அரசனைப் போல அவருக்கு ராஜ மரியாதை கிடைத்திருந்திருக்கும்.

ஆனால் சம்பந்தர் ஒரு முதிய தலைவராகவும் அனுபவத்தில் பழுத்த தலைவராகவும் அன்று முடிவெடுக்கவில்லை. போருக்குத் தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களிப்பது என்று முடிவெடுத்தார்..

அந்தத் தளபதி, போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து போரை வழிநடத்திய ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகத் திரும்பியிருந்தார். அது போர் வெற்றிக்கு உரிமை கோருவதில் வந்த போட்டி. அவ்வாறு ராஜபக்ஸக்களுக்கு எதிராகத் திரும்பிய தளபதியை வைத்து ராஜபசக்களை - அவர்கள் தமிழ் மக்களைக் கொன்று குவித்தனர் என்பதற்காக அல்ல, மாறாக - அவர்கள் சீனாவை நோக்கிச் சாய்கிறார்கள் என்பதற்காக, அரங்கில் இருந்து அகற்ற முயற்சித்த நாடுகளின் கொள்கைத் தீர்மானங்களைப் பின்பற்றி தமிழ்த் தரப்பு முடிவெடுத்தது. அதன் விளைவாக சரத் பொன்சேகாவோடு ஒரு உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டது. விளைவாக அந்தத் தேர்தலில் சரத் பொன்சேகா மட்டும் தோற்கவில்லை, சம்பந்தரும் தோற்கத் தொடங்கினார். சம்பந்தரின் வழியும் தோற்கத் தொடங்கியது.

தமிழ் மக்களை அழிக்கும் போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து, அதற்காக அனைத்துலக சமூகத்தை தமிழ் மக்களுக்கு எதிராக ஒன்று திரட்டிய ஒரு குடும்பத்துக்கு எதிராக வாக்களிக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு, தமிழ் மக்கள் அந்த குடும்பத்தின் ஆணையை ஏற்றுப் போரை முன்னெடுத்த ஒரு தளபதிக்கு வாக்களித்தார்கள். போருக்குத் தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களித்துவிட்டு, அந்தப் போரை ஒரு இன அழிப்பு போராகவும் அங்கே போர் குற்றங்கள் நடந்தன என்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நடந்தன என்றும் அனைத்துலக சமூகத்தின் முன் போய் நின்று முறையிடுவது ஒரு புத்திசாலியான சமூகம் செய்யக்கூடிய அரசியலா?

சரத் பொன்சேகா இப்பொழுதும் தனது தேர்தல் பிரச்சாரங்களில் தான் மனித குண்டினால் தாக்கப்பட்ட பொழுது பயணித்த காரை ஒரு காட்சிப் பொருளாகக் காவித்திருக்கிறார். ஆனால் அவருடைய பிரச்சாரக் கூட்டங்களுக்கு சிங்கள மக்கள் வருவது குறைந்து விட்டது. அந்தக் காருக்கு இருந்த கவர்ச்சி குறைந்து விட்டது.

ஆனால் அந்தப் போரை இன அழிப்பு போர் என்று குற்றம் சாட்டும் ஒரு மக்கள் கூட்டம், அப்போரை முன்நின்று நடாத்திய ஒரு தளபதிக்கு, அந்தப் போரில் வெற்றி கொண்டதற்காகவே ஃபீல்ட் மார்ஷல் விருது பெற்ற ஒரு தளபதிக்கு, அந்தப் போர் நடந்து கிட்டத்தட்ட ஓராண்டு கழிந்திருந்த ஒரு காலகட்டத்தில், அந்தப் போரினால் அகதியானவர்கள் அப்பொழுதும் நலன் புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், அந்த போரினால் காணாமல் போனவர்களை உறவினர்கள் தேடிப் போராட முடியாதிருந்த ஒரு காலச் சூழலில், அந்தப் போரில் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், கண்ணை மூடிக் கொண்டு வாக்களித்தது.

கணிதத்தை விஞ்ஞானத்தை விரும்பிக் கற்கும் ஒரு மக்கள் எடுக்கக்கூடிய புத்திசாலித்தனமான முடிவா அது? அல்லது தீர்க்கதரிசனமும் துணிச்சலும் மிக்க முடிவா அது?

நிச்சயமாக இல்லை. அந்த ஜனாதிபதித் தேர்தலை சம்பந்தர் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டுக் காயங்களுக்கு ஊடாகவும் கூட்டு மன வடுக்களுக்கு ஊடாகவும் சிந்தித்து இருந்திருந்தால் முடிவு வேறு விதமாக அமைந்திருந்திருக்கும். அவருடைய இறுதி ஊர்வலத்தில், தந்தை செல்வாவின் ஊர்வலத்தில் திரண்டதுபோல ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்திருப்பார்கள்.

ஆனால் நாடாளுமன்றத்தில் ஒப்பீட்டளவில் அதிக தமிழ் ஆசனங்களுக்குத் தலைமை தாங்கிய ஒரு தலைவர் அரசியலைக் கணிதமாக மதிப்பீடு செய்யத் தவறினார். முடிவுகளை விஞ்ஞானபூர்வமாக எடுக்கத் தவறினார். குறைந்தபட்சம் முடிவுகளை இதயபூர்வமாக எடுத்திருந்தால்கூட நிலைமை வேறு விதமாக அமைந்திருக்கும். அன்று எடுக்கப்பட்ட விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகளின் விளைவுதான் இன்றுள்ள தமிழ் அரசியலாகும்.

இவ்வாறாக கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் தமிழ் அரசியலில் எடுக்கப்பட்ட புத்திபூர்வமற்ற விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகள் அனைத்தையும் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். காய்தல் உவத்தல் இன்றிப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். தமது வாழ்வின் அன்றாட தேவைகளுக்காக சுண்டிப் பார்த்து பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், அரசியலிலும் அவ்வாறு சுண்டிப் பார்த்து முடிவெடுக்குமா? தமிழ்ப் பொது வேட்பாளருக்கு திரண்டு சென்று வாக்களிக்குமா?

நன்றி: நிலாந்தன்

# தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் தேர்தல் அறிக்கை 2024

0.09. 2024

**தமிழப் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று (03) செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.**

**இலங்கை அரசு தலைவருக்கான தேர்தலில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்ப் பொதுவேட்பாளராக பா.அரியநேத்திரன் போட்டியிடும் நிலையில் தமிழ்ப் பொதுவேட் பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியடப்பட்டுள்ளது.**

**யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் அலுவலகத்தில் தேர்தல் விஞ் ஞாபன வெளியீடு இடம்பெற்றது.**

தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்,

'தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைக்காகப் பல்வேறு வழிமுறைகளில் போராடி வருகிறது. இப் போராட்டத்தின் ஒரு வழிமுறையாகத், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு ஆகிய நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பா. அரியநேத்திரன் அவர்கள் சங்குச் சின்னத்தின் கீழ் தமிழ்ப்பொது வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டுள்ளார். தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பாகும்.

தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகிய ஏழு கட்சிகளும் தமிழர்தாயகத்தைச் சேர்ந்த அரசியற் செயற்பாட்டாளர்கள், கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள், சிவில் சமூகங்கள், அரசசார்பற்ற அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கிராமமட்ட அமைப்புகள், தொழில்சார் அமைப்புகள், கூட்டுறவு அமைபபுகள், மாணவ அமைப்புகள் இணைந்து உருவாக்கிய மக்கள் அமைப்பாகிய தமிழ்மக்கள் பொதுச்சபையும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பே தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள மிகச்சிறு பகுதியினர் தவிர ஏனைய அனைவரும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்கள். தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு எனப்படும் இந்தக் கூட்டணி கடந்த 15 ஆண்டுகளில், உருவாக்கப்பட்ட கூட்டணிகளில் ஒப்பீட்டளவில் பெரிய அணியாகும். இது தமிழ் ஒற்றுமையின் புதிய நம்பிக்கையாகவும் எதிர்காலத் தமிழ் அரசியலுக்கான பலமான அடித்தளமாகவும் எழுச்சி பெறும்.

ஈழத் தமிழர்களாகிய நாம் இலங்கைத் தீவில் தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாகவும் தேசமாகவும் வாழ்ந்து வருகிறோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட, மரபு வழித் தாயகத்தைக் கொண்ட, தனித்துவமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒரு தேசம் ஆவோம் இலங்கைத் தீவு பல்லின, பலமத, பல மொழி, பல் கலாசாரத்தைக் கொண்ட ஒரு தீவாகும். இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவே இனப்பிரச்சினை தோற்றம் பெறுவதற்கும் கூர்மை அடைவதற்கும் இறுதியில் விஸ்வரூபம் எடுப்பதற்குமான மூல காரணமாகும். தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்கும் செயற்பாடுகளே இன அழிப்பாகும்.

தமிழர் தேசத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் அழித்து பெரும்பான்மை இனத்துடன் அதனைக் கரைக்கும் உள்நோக்கத்தோடு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது திட்டமிட்டு முன்னெடுத்த இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராடினார்கள். அப்போராட்டங்களை நிர்மூலமாக்கும் குறிக்கோளோடு ஏவி விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிகக் கொடிய விளைவே இறுதிப் போரில் நிகழ்ந்த உச்சமான இன அழிப்பாகும்.

இந்தப் பின்னணியில் உலகின் மிகப்பெரிய தமிழ் சட்டமன்றமாகிய தமிழக சட்டமன்றம் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்றது. இன அழிப்பு என்று ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றியது. வடமாகாண சபை அதை இன அழிப்பு என்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. கனடாவில் பிரம்டன் நகர சபை அதை இன அழிப்பென்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. கனேடிய நாடாளுமன்றம் மே பதினெட்டினைத் தமிழ் இனப்படுகொலை நினைவுகூரல் நாளாக ஏகமனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது.

பிரான்சில் உள்ள நான்கு மாநகர சபைகளான Bobigny, Sevran, Choisy-Le-Roi, Vitry-Sur-Seine என்பன அது இன அழிப்பு என்று தீர்மானமாக நிறைவேற்றின. ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் சட்டசபையில் (Congress) இந்த ஆண்டு மே15 அறிமுகப்படுத்தப்பட்ட 1230 தீர்மானமானது ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசாங்கத்தால் நடத்தப்பட்டது இனஅழிப்பு என்பதை ஏற்றுக்கொள்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் பொருட்டு சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரு பொது வாக்கெடுப்பு அவசியம் என்பதை அத்தீர்மானம் வலியுறுத்துகின்றது.

எனினும், இன்றுவரை இன அழிப்புக்கு பரிகார நீதியும் கிடைக்கவில்லை இன அழிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படவுமில்லை. மாறாக,

1. திருகோணமலையில் தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் இருந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடங்கள் வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கப்படுகின்றன.

மேலும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு 26க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சில பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல நீதிமன்றத் தீர்ப்புகளை மீறுபவை. இன அழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட ஒரு மாவட்டம் இது.

2. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு புறம் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்து வருகிறது. இன்னொரு புறம் நிலப்பறிப்பு தொடர்கிறது. உதாரணமாக 3000 குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் மேய்ச்சல் தரைகளை அரச அனுசரணையோடும் பாதுகாப்போடும் சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன.

வாகரை. கதிரவெளியில் கனிமவள அகழ்வு மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றது. வாகரையில் இறால் பண்ணைகள் மக்களுடைய எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விரண்டு விடயங்களும் மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிப்பவை. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு எதிரானவை.

3. அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு தமிழ்மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்த ஓர் அரசாங்கமும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட மற்றொரு மாவட்டம் இது.

4. வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் குருந்தூர் மலை, வெடுக்குநாறிமலை, நீராவியடி ஆகிய இடங்களில் தமிழ் மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருக்கும் சிறுமலைகளில் அரச திணைக்களங்களும் பிக்குகளும் அரச படையினரும் பௌத்த கட்டுமானங்களை உருவாக்கி வருகிறார்கள். அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன. இக்கட்டளைகளை வழங்கிய ஒரு நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அதற்காக வெட்கப்படவேண்டிய அரசாங்கம் அவரைத் தனிப்பட்ட முறையில் சிறுமைப்படுத்தியது.

முல்லைத்தீவில் உள்ள கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்படும் மனிதப் புதைகுழி அகழ்வானது பன்னாட்டு நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறவில்லை. யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத் தீவில் பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100க்கும் மேற்பட்ட படையினர் முகாம்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

5. வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் குளம் என்ற தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் குடியிருப்பு இராணுவப் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும் ஆக்கிரமிக்கப்பட்டு 'கலாபோபஸ்வேவ' என்ற பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு மிகக்குறுகிய காலத்துக்குள் அந்த கிராமத்துக்குத் தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, அம்பாந்தோட்டையிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களை அரசின் அனுசரணையோடு குடியமர்த்தி 'நாமல்கம' என்ற ஒரு கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

6. மன்னார் மாவட்டத்தில்இ கனிம வளம் பறிக்கப்படுகின்றது. அங்குள்ள முள்ளிக்குளம் கிராமத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சிறீலங்கா கடற்படையானது அக்கிராமத்தின் பூர்வ குடிகளான தமிழ் மக்களை அங்கு முழுமையாக மீளக் குடியமர விடாமல் தடுத்து வருகின்றது.

மன்னார் புதைகுழி தொடர்பான உண்மைகள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

7. கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர் மரபுரிமைச் சொத்துகளை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது.

8. யாழ்ப்பாண மாவட்டத்தில் படைத்தரப்பு முகாம்களை அமைத்திருக்கும் பெரும்பாலான காணிகள் தனியாருக்குரியவை. இவற்றுள் மிகச்சிறிய நிலப்பரப்புத்தான் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலும் தமிழர் மரபுரிமைச் சொத்துக்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளன.

நாவற்குழியில் அரசின் அனுசரணையோடு ஒரு சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக ஒரு புதிய விகாரை படையினரால் கட்டப்பட்டுவிட்டது.

9. தமிழர் தாயகம் எங்கும் தனியார் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே அபகரிக்கப்பட்ட தனியார் காணிகள் பல இதுவரை விடுவிக்கப்படவில்லை. ஆனால் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு விட்டதாக அரச புள்ளி விபரங்கள் பொய் கூறுகின்றன.

தமிழர் தாயகமெங்கும் வனவளத் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும் காடுகளின் பாதுகாப்பு, வன உயிரினங்களின் பாதுகாப்பு என்ற பெயரில் தனியார் காணிகள், பயிர்ச்செய்கை நிலங்கள், வணக்கத்தலங்கள் உள்ளடங்கிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவு நிலத்தை அபகரித்து வைத்திருக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்டவை சில உதாரணங்கள் மட்டுமே. கடந்த 15 ஆண்டுகளாக நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் அரசுக் கொள்கையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

10. புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள் 15 ஆண்டுகளின் பின்னரும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களின் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

11. தமிழ் மக்களின் அரசுக்கு எதிரான செயற்பாடுகளைப் பயங்கரவாதமாகச் சித்திரிக்கக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது.

12. அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மாறாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவது முழுமையாக நிறுத்தப்படவும் இல்லை.

13. மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசியற் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன.

14. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமாகிய கடந்த ஓகஸ்ட் முப்பதாம் திகதியன்று திருகோணமலையில் நடந்த எதிர்ப்பு பேரணியில் கலந்து கொண்ட உறவினர்கள் மற்றும் அரசியற் செயற்பாட்டாளார்கள் மீது அரச பயங்கரவாதமானது போலீஸ் நடவடிக்கை என்ற வடிவத்தில் ஏவி விடப்பட்டது. நீதிமன்ற கட்டளையின் கீழான இச்சட்ட நடவடிக்கை மூலம் அப்பேரணி குலைக்கப்பட்டது.

இவ்வாறு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுரிமைச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்களே.

இந்த நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. சிறீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை. தொல்லியல் திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் வன வளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச் செய்கின்றன. பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல் துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமானங்களை இரகசியமாகக் நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப்பறிப்பு சிங்களபௌத்தமயமாக்கல் அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத் தரப்பு ஒரு சமாந்தரமான அரசைப்போல செயற்படுகின்றது. அதில் வடக்கு கிழக்கில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதேவேளை நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு என்று பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டு சமூகத்தை நம்ப வைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமறுத்து இன அழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு கடனாளியாகியது. எனவே, இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காகப் வாங்கிய கடன் சுமைதான்.

இப்பொழுது தென்னிலங்கையில் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள அனைவரும் பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மறைக்கின்றனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய பரப்புரையின் குவிமையமாக இருப்பது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது என்பதுதான். இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காகத் தமிழ் மக்களால் ஏற்கத்தக்க பொருத்தமான முன்மொழிவு எதனையும் அவர்களில் யாரும் இதுவரை முன் வைக்கவில்லை.

யுத்த தளபாடங்களுக்காக முன்பிருந்த அரசாங்கங்கள் 25,000 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை சார்ந்த ஒரு நிபுணரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைச் செலவழித்து முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட உயிரழிவு, பொருள் அழிவைக் குறித்து இதுவரையிலும் உத்தியோகபூர்வ மதிப்பீடு எதுவும் இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த அழிவுகளில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான எந்த ஒரு சிறப்பு செயல்திட்டமும் இன்றுவரையிலும் உருவாக்கப்படவுமில்லை.

யுத்தத்துக்காகப் படையினரின் ஆட்தொகை பல இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 40 விகிதம் படையினருக்கே செலவழிக்கப்படுகிறது. இலங்கைத்தீவின் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மொத்தச் சம்பளத்தில் ஏறக்குறையச் சரிபாதி படையினருக்கான சம்பளமாக வழங்கப்படுகிறது.

கடந்த 15 ஆண்டுகளிலும் படைத்தரப்பின் ஆட்தொகை குறிப்பாக வடக்கு கிழக்கில் குறைக்கப்படவில்லை. அதாவது இராணுவமய நீக்கம் நிகழவில்லை. மாறாக, தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காகவே படைத்தரப்பு பெருஞ் செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான இராணுவ பொருளாதாரச் சூழலுக்குள் புலம் பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்யத் தலைப்பட்டமாடடார்கள். அண்மைக் காலங்களில் அதிகரித்த அளவில் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வருகிறார்கள். தற்போது புலம்பெயர்பவர்கள் படித்தவர்கள் சமூகத்தில் பொறுப்பான பதவிகளை வகித்தவர்களே. இப்படிப்பட்ட தலைமை தாங்கும் தகைமையுள்ள படித்தவர்கள் சமூகத்தில் இருந்து வெளியேறுவது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அரசியலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறான இராணுவப் பொருளாதார சூழலுக்குள் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வையும் நம்பிக்கையையும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தையும் அவசரத்தையும் தென்னிலங்கைக்கும் உலக சமூகத்துக்கும் நிராகரிக்கப்பட முடியாத விதத்தில் உணர்த்த வேண்டியதும் அவசியம்.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள்தான் உண்டு என்று தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கூறிவரும் ஒரு பின்னணியில் இனப் பிரச்சினையைப் பேசுபொருளாக்கி அதன் மீது தென்னிலங்கையின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினராகிய நாம் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளராக திரு.பா.அரியநேத்திரன் அவர்களை முன் நிறுத்துகிறோம்.

கடந்த 46 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களித்து வந்திருக்கிறார்கள். 2009க்குப் பின் 3 ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ்மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இவர்களில் வென்றவர்களும் சரி தோற்றவர்களும் சரி இன்று வரையிலும் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வைத் தரவும் இல்லை, இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தவும் இல்லை.

கடந்த 46 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு பதில் வினையாற்றும் அணுகு முறையில் இருந்து வேறுபட்டு இந்த முறை தமிழ்மக்கள் செயல் முனைப்போடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்று எடுக்கப்பட்ட முடிவின் விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவார். அதேசமயம், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கித் தமிழ் மக்களின் கூட்டு விருப்பத்தை உலக சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவார். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவார்.

**இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது இனப் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வானது பின்வரும் அடிப் படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.**

1. இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத்தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப் படுத்தலாம். எனவே புதிய யாப்பு ஆனது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசங்களின் ஒன்றிணைவாக அமைய வேண்டும். அதாவது புதிய யாப்பானது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் (Plurinational State) கட்டமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

3. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு அரசியல் தீர்வாலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது.

4. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதனை தாமே நிர்ணயிப்பதற்குப் பொருத்தமான பன்னாட்டு ஏற்பாடுகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள்.

5. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்களை எல்லையாகக் கொண்டு அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடாத்த தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புத் தயாராக உள்ளது.

6. மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வரும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

7. ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித் துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். இதுவரையிலுமான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக ஐநா பொதுச் செயலர் பொறுப்பு கூறலை ஐநா பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

8. அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப் பறிப்பைத் தடுக்கவும, நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர் தேசத்துக்கு இருக்க வேண்டும்.

9. ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும்ஈ தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று (Protective Mechanism) உருவாக்கப்பட வேண்டும். மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய திரு.பா.அரியநேத்திரன் அவர்களுடைய சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காகவுமே முன் நிறுத்தப்படுகிறார். ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது அரியநேத்திரன் அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ்மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான். எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகும். சங்குச் சின்னத்துக்கு ஆகக்கூடிய தமிழ் வாக்குகளை வழங்குவதன் மூலம் அன்பான தமிழ் மக்களே எங்களை நாங்களே வெற்றி பெற வைப்போம்.



# தியாகதீபம்

## 37வது நினைவேந்தல் – 2024



**நிகழ்ச்சிநிரல்**

- 15.09.2024 அன்று காலை 9.30 மணிக்கு தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.
- யாழ்ப்பாணத்தில் தியாகதீபம் உண்ணாநோன்பை ஆரம்பித்த நல்லூர் வடக்கு வீதியில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, அதனைத் தொடர்ந்து நினைவுத்தூபியில் அஞ்சலியுடன் முதலாம் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.
- காலை 09.45மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்படும்.
- தினமும் காலையில் 08.00 மணிக்கு நினைவுத்தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.
- 22.09.2024 அன்று நல்லூர் நினைவுத்தூபியருகில் இரத்ததானம்
- 21, 22.09.2024 நல்லூர் நினைவுத்தூபியருகில் ஓவியப் போட்டி
- கட்டுரைப் போட்டிக்கு 26.09.2024 வரை ஆக்கங்களை அனுப்பலாம்.
- இறுதி நாள் நிகழ்வுகள் 26.09.2024அன்று காலை 09.00 மணிக்கு ஆரம்பமாகி 10.48க்கு ஈகைச்சுடர் ஏற்றப்படும்.

**தியாகதீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு**

தொடர்புகளுக்கு – பொன் மாஸ்டர் – 076 537 1949

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமையும் மலையக மக்களும்!

11.09.2024



இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களின் வரலாறு மிகவும் கசப்பானதாக அமைந்திருக்கின்றது. வரலாற்றில் தொடர்சசியாகவே அவர்கள் மீதான நெருக்கீடுகள் இடம்பெற்று வந்துள்ளன. சிறுபான்மையினரின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் காணப்பட்டபோதும் அவற்றின் வலுவிழந்த தன்மையையே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை இந்திய வம்சாவளி மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களுக்கு ஒரு பாதுகாப்பாக அமையும் என்ற கருத்து நிலைப்பாடு காணப்பட்டது. எனினும் இதனை தகர்த்தெறியும் வகையில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் இம்மக்கள் மீது வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டது மட்டுமன்றி பல்வேறு உரிமை மீறல்களுக்கும் இவர்கள் உள்ளானமை யாவரும் அறிந்த விடயமாகும்.

இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டில் 200 வருடங்களை பூர்த்தி செய்துள்ளனர். எனினும் இம்மக்கள் வாழ்வியலின் ஒவ்வொரு கட்டங்களிலும் பல்வேறு சவால்களுக்கும், இடையூறுகளுக்கும் முகம் கொடுக்க நேர்ந்தமை துரதிஷ்ட வசமானதேயாகும். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முனனரும் சுதந்திரம் பெற்ற பின்னரும் இது நடந்தேறியுள்ளது. இவற்றின் தழும்புகள் இன்னும் கூட தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்றால் மிகையாகாது. 1920 களின் பிற்பகுதியில் சர்வசன வாக்குரிமை குறித்தும், அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் குறித்தும் விவாதங்கள் இடம்பெற்றன. இதன்போதிருந்தே தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிங்கள பூர்ஷ்வாக்களின் தாக்குதல் ஆரம்பித்தது. தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு இன்றியமையாதவர்கள். ஆனால் அரசியல் செயற்பாட்டுக்கு அல்ல. அடிமைகளுக்கு சமமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஆனால் அவர்கள் வாக்குரிமை பெற்று தேர்தல் முடிவுகளில் செல்வாக்கு செலுத்திய தேர்தல் தொகுதிகளில் சிங்களவர் சிறுபான்மையினராகிவிடுவர் என்ற அச்சத்தை சிங்கள பூர்ஷ்வாக்கள் தமது பிரசாரத்திற்கு பயன்படுத்தியதாக கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா தனது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## இனவாதப் பிரசாரம்

இந்தியர்களின் வாக்குரிமையால் தாம் செயலற்று போய்விடக் கூடும் என்ற எண்ணம் கொண்டவர்களாக பெரும்பான்மையினர் பலர் காணப்பட்டனர். டொனமூர் ஆணைக்குழுவினுடைய சிபாரிசில் அபாய அறிவித்தலாக அமைந்தது இந்தியத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணையேயாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் சிங்களவர் சிறுபான்மையினர் மாத்திரமின்றி அநீதிக்குப் பலியாவர் என்று டி.எஸ். சேனநாயக்கா பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். இதேவேளை இலங்கையின் நிலையான மக்களை செயலறச் செய்யக்கூடிய இந்திய அச்சுறுத்தல் பற்றிக் கூறிய சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, இந்தியரின் வாக்குரிமையை எதிர்க்காதார் துரோகிகள் என்றும் கூறியிருந்தார். இந்நிலையில் சிங்கள பத்திரிகைகளில் ஒரு பகுதி இனவாதப் பிரசாரத்தை விரைவு படுத்திய அக்காலத்தில் (1928 இல்) 'பிரைஸ்' பூங்காவில் காந்தி சங்கத்தின் கூட்டமொன்றுக்கு தலைமை வகித்த ஏ.ஈ. குணசிங்கா இந்தியத் தொழிலாளர்களின் உரிமைக்கு சாதகமாகக் குரல் கொடுத்தார். சிங்களத் தலைவர்களை குணசிங்கா தாக்கியது பற்றி சிலோன் டெய்லி நியூஸ் (Ceylon Daily News) 1928. செப்டம்பர் 10 ம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது. இத்தகைய போக்குகளுக்கு மத்தியில் இன ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு ஆகியவற்றை தமது அடிப்படை கொள்கைகளாகக் கொண்டிருந்த தொழிற்சங்கத் தலைவர் ஏ.ஈ. குணசிங்கா இந்தியத் தொழிலாளர்களின் வாக்குரிமையை ஆதரித்து குரல் கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய பல வாத பிரதிவாதங்களுக்கு மத்தியில் இந்திய வம்சாவளி மக்கள் வாக்குரிமையை பெற்றுக் கொண்டமை ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமேயாகும்.

இதனிடையே 1947 ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் சிங்கள இனவாதிகளுக்கு ஒரு பேரிடியாக அமைந்தது. இலங்கை இந்திய காங்கிரஸ் பாராளுமன்றத்தில் ஏழு உறுப்பினர்களை பெற்றுக் கொண்ட நிலையில், காங்கிரஸ் போட்டியிடாத தொகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் இடதுசாரிகளை ஆதரித்திருந்தனர். இந்தியத் தொழிலாளர்களின் ஆதரவுடன் 14 தொகுதிகளில் இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். 1947 ன் பாராளுமன்ற தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் 12 இல் இருந்து 20 ஆக அதிகரித்தது. தோட்ட, நகர்ப்புற தொழிலாளர்களின் புரட்சிகரக் கூட்டு சிங்கள பூர்ஷ்வாக்களுக்கு மென்மேலும் அச்சமூட்டியது. இத்தகைய நிலைமைகள் ஐ.தே.க.வின் கண்களை உறுத்திய நிலையில் இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை மற்றும் பிரசாவுரிமை என்பவற்றை 1948 இல் ஐ.தே.க. பறிப்பதற்கும் இது உந்துசக்தியானது.

1948 இல் சோல்பரி யாப்பு நடைமுறைக்கு வந்தது. இந்த யாப்பின் ஊடாக சிறுபான்மையினரின் நலன்களை பேணும் நோக்கில் சில ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அரசியலமைப்பின் 29 ஆவது பிரிவு, செனட் சபை, நியமன உறுப்பினர்கள், பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி, கோமறைக் கழகம், அரசியலமைப்பைத் திருத்துவதில் 2/3 பெரும்பான்மை, பொதுச்சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்றன சிறுபான்மையினரின் நலன்களை பேணும் நோக்கில் உள்ளீர்க்கப்பட்டன. சோல்பரி அரசியலமைப்பின் 29 வது பிரிவு ஓர் இனத்தையோ அல்லது மதத்தையோ அல்லது ஓர் சமூகத்தையோ பாதிக்கக்கூடிய எந்தச் சட்டங்களையும் பாராளுமன்றம் இயற்றக்கூடாது என்பதனை வலியுறுத்தி இருந்தது. எனினும் இந்த ஏற்பாடு வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்தது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்த சோல்பரி யாப்பின் 29 ம் பிரிவின் நம்பகத்தன்மை, இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதுடன் கேள்விக்குறியாகியது. அரசாங்கத்துடன் இணைந்திருந்த தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு அதனை தடுத்து நிறுத்தும் வல்லமை இருந்தது. ஆனாலும் இடதுசாரிக் கட்சிகளும், தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற தமிழர்களும், இந்திய தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் மட்டுமே தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இதேவேளை ஒற்றையாட்சி அரசாங்க முறையினை சோல்பரி அரசியல் யாப்பு சிபாரிசு செய்தமையினால் சிறுபான்மை இனங்கள் ஆட்சியதிகார கட்டமைப்பில் கேள்விக்குறியானமை நோக்கத்தக்கதாகும்.

## சோல்பரியின் 29 ஆவது பிரிவு

1956 ம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் முன்வைக்கப்பட்டது. இச்சட்டம் நாட்டில் பல அதிர்வலைகளையும் தோற்றுவித்திருந்தது. 'தனிச் சிங்களம் எனும் கொள்கை இந்த நாட்டில் பொது வாழ்க்கையில் தமிழ் மொழியை அதற்குரிய ஸ்தானத்தில் இருந்து வெறுமனே விலக்கி வைப்பதை மட்டும் கருதவில்லை. ஆனால் அது இந்த நாட்டின் தமிழ் மொழி பேசும் மக்களை இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சார வாழ்க்கை என்பவற்றில் இருந்தே வெளியே தள்ளி வைக்கிறது' என்ற கருத்து பலமாக அப்போது ஓங்கியொலித்தது. அரசாங்க தொழில் நிலைகளில் தமிழர்களின் ஆதிக்கம் குறைவடைவதற்கும் இது வலுசேர்த்தது. குறிப்பாக 1956 இல் நிர்வாக சேவையில் 30, எழுது வினைஞர் சேவையில் 50, பொறியியலாளர்கள் மற்றும் வைத்தியர்கள் 60, ஆயுதப்படை சேவை 40 வீதம் என்றவாறு தமிழர்களின் பிரதிநிதித்துவம் அமைந்திருந்தது. இந்நிலையானது 1970 இல் மேற்கண்ட துறைகளில் முறையே 5, 5, 10, 1 வீதமாக வீழ்ச்சி காண்பதற்கு தனிச்சிங்கள சட்டம் காரணமாக அமைந்தது. சோல்பரியின் 29 ஆவது பிரிவு எந்தவோர் இனமும் இன்னொரு இனத்தினால், தீமைக்கோ அல்லது அவமதிப்பிற்கோ ஆளாக முடியாது என்று வகுத்திருந்தது. இருப்பினும் இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமை பறிபோவதையோ, தனிச்சிங்கள சட்டத்தையோ இதனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை 1978 ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைக்கு சார்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. பாராளுமன்றத்தினால் கட்டுப்படுத்தப்படாத வகையில் நிர்வாகத்துறை இருப்பதனால் அபிவிருத்தி வேலைகளுக்கு இந்நிலை உதவக்கூடியதாக உள்ளது. ஜனாதிபதிக்கு இருக்கின்ற நிறைவேற்று அதிகாரமானது நிர்வாகச் செயற்பாடுகளில் காலதாமதத்தை தவிர்ப்பதற்கு உதவுகின்ற ஒன்றாக உள்ளது. ஜனாதிபதி தேர்தல் முறை அதிகளவில் ஜனநாயகத் தன்மை வாய்ந்த தேர்தல் முறையாக உள்ளது என்றெல்லாம் சாதக விளைவுகள் எடுத்துக் கூறப்பட்ட நிலையில் சிறுபான்மையினரின் நலன்கள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதற்கேற்ப ஜனாதிபதியானவர் நாட்டில் வாழும் முழு மக்களினாலும் தெரிவு செய்யப்படக் கூடிய ஒருவராக இருப்பதனால் வாக்குகளை கவனத்திற்கொண்டு சிறுபான்மை இனங்களின் நலன்களை குறைந்த மட்டத்திலாவது பேணக்கூடியவராக இருப்பார் என்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டது. எனினும் இது நன்மைபயப்பதாக அமையவில்லை.

அதிகாரம் மிக்க ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை முறைமை மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக அமையும் என்று சிலர் நம்பியபோதும், உண்மையில் 1982 இல் சிறுபான்மை மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா ஆட்சிக்கு வந்த பின்னரே 1983 ம் ஆண்டு இனக்கலவரம் இடம்பெற்றது என்பதும் தெரிந்ததேயாகும். இதேவேளை சோல்பரியின் சிறுபான்மைக் காப்பீடு நடைமுறையில் இருந்த 1956, 1958, 1960 ம் ஆண்டுகளிலும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நடைமுறையில் இருந்த 1981, 1983, 1986 போன்ற காலப்பகுதி உள்ளிட்ட இன்னும் சில காலப்பகுதியிலும் இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் அவ்வப்போது இடம்பெற்றமை நீங்கள் அறிந்ததேயாகும். இதைப்போன்றே நிறைவேற்று ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் வடக்கு கிழக்கு மக்களும் சொல்லொணா துன்ப துயரங்களை அனுபவிக்க நேர்ந்தமை புதிய விடயமல்ல.

## செயல்வடிவம் தேவை

இதேவேளை சர்வதேச ரீதியாக 20 ம் நூற்றாண்டில் இடம்பெற்ற சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சமுதாய உரிமையை சட்ட ரீதியாக இல்லாமல் செய்தது இலங்கையின் சுதந்திரத்தின் மறுபக்க விளைவாகும். இதன் மூலம் ஏறக்குறைய 90,000 பேருக்கு பிரஜாவுரிமை மறுக்கப்பட்டது. இதனால் இவர்கள் நாடற்றவர்கள் என்ற நிலையிலும் இந்நாட்டில் அரசியல் அதிகாரமற்ற அநாதைகளாகவும் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அரசாங்க தொழில்கள் மறுக்கப்பட்டதுடன் உரிமைகளைப் பெற்று மேலோங்கி சென்று கொண்டிருந்த ஏனைய இனத்தவர்களால் நசுக்கப்பட்டும் அவமதிக்கப்பட்ட நிலைக்கு மேலாக அநாவசியமான தாக்குதல்களுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

காலத்துக்குக் காலம் தாக்குதலுக்கு உட்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்களில் ஒரு பகுதியினர் இவற்றில் இருந்து தப்பிக்கொள்ளும் நோக்குடன் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு குடிபெயர்ந்தனர். மற்றுமொரு பகுதியினர் குறிப்பாக சிங்கள மக்கள் செறிவாக வாழ்கின்ற காலி, மாத்தறை, இரத்தினபுரி, பலாங்கொடை பகுதிகளில் சிங்கள மக்களுடன் வாழ்வதற்கு அதீத பிரயத்தனத்தை மேற்கொண்டனர். தமது பேச்சு மொழியைக்கூட சிங்களமாகவோ அல்லது இலங்கையில் வாழுகின்ற இஸ்லாமியர்கள் பேசும் பேச்சுத் தமிழை வருத்தி உள்வாங்கிக் கொண்டு வாழ வேண்டியவர்களாக தள்ளப்பட்டனர். பல சுமைகளுடன் வாழ்ந்துவந்த சமூகம் அண்மைக்காலமாக ஒரு புதிய பரிமாணத்துடன் வளர்ச்சியடைந்து வருவது போலத் தோன்றுகின்றது. இவ்வளர்ச்சி இயல்பாகவே ஒரு சமூகம் வளர்ச்சியடைந்து செல்லும் செங்குத்தான நிலையில் அளவிடக்கூடியதாகவே இருக்கும் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை என்று புத்திஜீவிகள் பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இந்திய வம்சாவளி மக்கள் அரசியல், பொருளாதார, சமூக, தொழில் ரீதியாக தொடர்ச்சியாக நெருக்கீடுகளுக்கு உள்ளாகி வரும் நிலையில் அவர்களின் உரிமைகள் பலவும் மழுங்கடிப்பிற்கு உள்ளாகும் அதேவேளை அது இச்சமூகத்தின் எழுச்சிக்கும் முட்டுக்கட்டையாக உள்ளது. இந்நிலையில் அம்மக்களின் மீதான நெருக்கீடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, அவர்களின் பல்துறைசார் அபிவிருத்திக்கும் வித்திடுவதோடு, தேசிய நீரோட்டத்தில் அம்மக்கள் இணைந்து கொள்ள ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் ஆட்சியாளர்கள் முன்னெடுக்க வேண்டும். மேலும் சிறுபான்மை பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் நலன்பேணும் நடவடிக்கைகள் வெறுமனே ஏட்டளவில் மட்டுப்படுத்தப்படாது செயல்வடிவம் மிக்கதாக காணப்படுதலும் மிகவும் அவசியமாகும்.

நன்றி: துரைசாமி நடராஜா


37ஆம் ஆண்டு
வீரவணக்கம்
37th Year
Veeravanakkam
SEPT
26
2024
"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"
ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்
இராசையா பார்த்தீபன் [ ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963–26.09.1987]
Lt. Col. Thileepan
இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு [15.09.1987–26.09.1987] இருந்து ஈகைச் சாவடைந்தார்.
Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Tamil people.
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
இந்திய – சிறீலங்கா சமாதான ஒப்பந்த காலப்பகுதியில் கடலில் பயணம் செய்த தளபதிகளை சிறீலங்கா கடற்படை கைது செய்து கொழும்பிற்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும் எமது 37ஆம் ஆண்டு வீரவணக்கம்
2ம் லெப். கஸ்தூரி
வீரவேங்கை ரஞ்சினி
வீரவேங்கை தயா
2ம் லெப். மாலதி
10.10.1987 அன்று கோப்பாய் பகுதியில் இந்தியப் படையுடன் நடந்த மோதலில் முதல் பெண் மாவீரரான 2ம் லெப். மாலதி மற்றும் அவருடன் 2ம் லெப். கஸ்தூரி, வீரவேங்கை ரஞ்சினி, வீரவேங்கை தயா ஆகிய மாவீரர்களுக்கும் எமது 37ஆம் ஆண்டு வீரவணக்கம்
தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 10
கேணல் சங்கர்
26.09.2001 அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையினரால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கு எமது 23 ஆம் ஆண்டு வீரவணக்கம்
வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை. யாழ்ப்பாணம்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The thirst of the Thamils is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்